1465

செங்குந்த மித்திரன்

தொகுதி 4

பங்குனி

பகு-12
3

1929-30

JL
Y592 Cm21, N27C4
N29. 4·3
129814.

ZL
Y592
N29.4.3
129814.

stered No. M. 1514 சுக்கில ௵ பங்குனி ௴

# செங்குந்தமித்திரன்



தென்னிந்திய
செங்குந்த மகாஜன சங்கத்தின்
மாதவெளியீடு
காரியாலயம்:—
பவழக்காரத் தெரு, சென்னை.

*The Progressive Printers, Coral Merchant Street, Madras.*

# ‘செங்குந்த மித்திரன்’ பஞ்சாங்கம்

சுக்கிலஸ்ரீ (பங்குனிமீ 1930ஸ்ரீ மார்ச்சுமீ—ஏப்ரல்மீ)

தக்ஷிணாயனம், ஹேமந்தரிது.

| இங்கிலீஷ் | தமிழ் | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | நேத்திரம் | ஜீவன் | வாக்கிய சிரார்த்த திதி | யோகினி | விசேட நாட்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | 1 | வெ | பௌ 45-18 | பூ 28-38 | சி 60 | 2 | 1 | சூன் | தெற்கு | பௌர்ணமி |
| 15 | 2 | சனி | பிர 38-48 | உ 23-35 | மர 60 | 2 | 1 | பிர | மேற்கு | |
| 16 | 3 | ஞா | துதி 33-25 | அ 19-40 | அ 19-40 சி | 2 | 1 | துதி | வடமே | |
| 17 | 4 | திங் | திரி 29-33 | சி 17-18 | பி 17-18 அ | 2 | 1 | திரி | வடகிழ | |
| 18 | 5 | செ | சது 27-40 | சு 16-45 | சி 16-45 ம | 2 | 1 | சது | ஆகாசம் | |
| 19 | 6 | புத | பஞ் 27-45 | வி 18-3 | சி 60 | 2 | 1 | பஞ் | பூமி | |
| 20 | 7 | வியா | சஷ் 29-58 | அ 21-18 | சி 21-18 பி | 2 | 0 | சஷ் | கிழக்கு | |
| மார்ச்சுமீ 21 | 8 | வெ | சப் 33-45 | கே 26-18 | ம 26-18 அ | 2 | ½ | சப் | வடக்கு | |
| 22 | 9 | சனி | அஷ் 38-53 | மூ 32-30 | சி 60 | 1 | ½ | அஷ் | தென்கி | |
| 23 | 10 | ஞா | நவ 44-48 | பூ 39-45 | சி 39-45 அ | 1 | ½ | நவ | தெமே | |
| 24 | 11 | திங் | தச 51-3 | உ 47-13 | ம 47-13 அ | 1 | ½ | தச | தெற்கு | |
| 25 | 12 | செ | ஏகா 57-3 | தி 54-25 | சி 60 | 1 | ½ | ஏகா | மேற்கு | |
| 26 | 13 | புத | துவா 60-0 | அ 60-0 | பி 60 | 0 | ½ | துவா | வடமே | |
| 27 | 14 | வியா | துவா 2-30 | அ 1-13 | சி 1-13 ம | 0 | ½ | திர | வடமே | |
| 28 | 15 | வெ | திர 6-58 | ச 7-5 | சி 60 | 0 | ½ | சது | வடகிழ | |
| 29 | 16 | சனி | ச● 10-25 | பூ 11-50 | ம 11-50 சி | 0 | 0 | அமா | ஆகாசம் | சர்வ அமாவாசை |
| 30 | 17 | ஞா | அ 12-45 | உ 15-33 | அ 60 | 0 | 0 | பிர | பூமி | |
| 31 | பங்குனிமீ—சித்திரைமீ 18 | திங் | பிர 13-48 | சோ 18-8 | சி 60 | 0 | 0 | துதி | கிழக்கு | |
| 1 | 19 | செ | துதி 13-45 | அ 19-43 | சி 60 | 0 | 0 | திரி | வடக்கு | |
| 2 | 20 | புத | திரி 12-45 | *பர 20-15 | சி 20-15 அ | 0 | ½ | சது | தென்கி | கிருத்திகை |
| 3 | 21 | வியா | சது 10-48 | கி 19-48 | ம 60 | 0 | ½ | பஞ் | தெமே | |
| ஏப்ரல்மீ 4 | 22 | வெ | பஞ் 7-53 | ரோ 18-5 | ம 18-5 சி | 1 | ½ | சஷ் | தெற்கு | |
| 5 | 23 | சனி | சஷ் 4-3<br>சப் 59-28 | மி 16-20 | சி 60 | 1 | ½ | சப் | மேற்கு | |
| 6 | 24 | ஞா | அஷ் 54-15 | தி 13-23 | சி 60 | 1 | ½ | அஷ் | வடகிழ | |
| 7 | 25 | திங் | நவ 48-25 | பு 9-50 | அ 9-50 சி | 1 | ½ | நவ | ஆகாசம் | |
| 8 | 26 | செ | தச 42-15 | பூ 5-50 | சி 60 | 2 | ½ | தச | பூமி | |
| 9 | 27 | புத | ஏகா 35-48 | ஆ 1-23<br>ம 56-45 | சி 60 | 2 | 0 | ஏகா | கிழக்கு | |
| 10 | 28 | வியா | துவா 29-23 | பூர 52-23 | சி 52-23 ம | 2 | 1 | துவா | வடக்கு | |
| 11 | 29 | வெ | திர 23-30 | உத் 48-25 | சி 48-25 அ | 2 | 1 | திர | தென்கி | பங்குனி உத்திரம் |
| 12 | 30 | சனி | ச○ 17-55 | அ 45-10 | ம 60 | 2 | 1 | சது<br>பௌ | தெமே | பௌர்ணமி |
| 13 | 1 | ஞா | பௌ 12-58 | சி 43-3 | சி 60 | 2 | 1 | பிர | தெற்கு | பிரமோதூத வருஷப்பிறப்பு |

05 JUN 1930

# உள்ளடக்கம்


கடவுள் வணக்கம் பாமாலைப் பகுதி 66

பத்திரிகாசிரியர் முன்னுரை 69

ஒழுக்கப்பகுதி: மனதின் வளர்ச்சி 69

சூது விரும்பேல் 73

இளைஞர் பக்கம்:—பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளிடம் காணப்படும் சில கெட்ட வழக்கங்களும் தேகாரோக்கியத்திற்கு அவற்றால் உண்டாகும் கெடுதல்களும் 74

சந்தன மரங்கள் 77

மாதர் பகுதி: பிரஸவத்திற்கு ஆயத்தம் செய்தல் 79

இல்வாழ்க்கைப் பகுதி: மீனாக்ஷி 81

சித்தாந்தப் பகுதி: சமயநுண் பொருள்கள் 84

ஆன்றோர் அமுத மொழி 85

சமயப் பகுதி: ஈசனும் ஈசுர பக்தியும் 86

விகடத் துணுக்குகள் 88

வர்த்தமானம் 89

நிருபங்கள் 92

விடுகதைக் கொத்து 95

மதிப்புரை 96

செங்குந்தர் கிளர்ச்சி 98

பஞ்சாங்கம்


சென்னை-600 003

## கடவுள் வணக்கம்

இயல்பென்றுந் திரியாம லியம மாதி
　　யெண்குணமுங் காட்டியன்பா லின்பமாகிப்
பயனருளப் பொருள்கள்பரி வாரமாகிப்
　　பண்புறவுஞ் சௌபான பக்ஷங் காட்டி
மயலறுமந் திரஞ்சிக்ஷை சோதிடாதி
　　மற்றங்க நூல்வணங்க மௌன மோலி
யயர் வறச்சென் னியில்வைத்து ராசாங் கத்தி
　　லமர்ந்ததுவை திகசைவ மழகி தந்தோ. (தாயுமானுர்)

## வீரவாகு தேவர் திருப்புகழ்

### I

தந்தந்தத்-தய்யன-தானன-தந்ததானு.

பொன்றங்கட் கைவசமேவிடு மங்கையர்பால்
புந்தின்றிப் பொய்யுலகாசையி னுென்றிடாதே
மின்றிங்கிச் சைவமு மேன்மைமி குந்துபாரோர்
வென்றன்பிற் பல்வகை சீர்களும் வந்துதாராய்
மன்றின்கட் பையர வோனுமை தந்தபாலா
மஞ்சின்பிற் புள்ளியின் மீதுறு கந்தனேயா
சென்றஞ் சத்தெவ்வரை வேரொடு வென்றவீரா
செங்குந்தத் தெய்வமுமாகிய தம்பிரானே.

### II

தானதன தான தான தந்த
தானதன தான தான தந்த
தானதன தான தான தந்த　தனதானு.

பாருலவு நேய மேவு சூர்தர்
பேருலவு நூல்பல் கோடி யின்று
பாலர் பலர்கூடி கூடி நன்று　　வினிதூடே

பாரலவை யினூ டியாரு மஞ்ச
வோது தமிழ் மாலைபாடி கந்தர்
பாதமலர் நாடி நாடி வந்து　　தொழுமாறே

காருலவு மாலை ஞான மென்ற
பேய்கள் நிலைமாறி மாறி நொந்து
கானுறவி வேளை நேரினின்று　　விருதூடே

காலன் மதன் வேத னேடியஞ்ச
வேல்வில் படையா திவானு மம்புள்
காணவிது நாளின் மேன்மை மிஞ்ச　　வருவாயே

தாருலவு தேவரோடி யொஞ்சும்
வேளை யரன்ஞான பால மென்ற
சாய னுதன்மீது மீறிவந்த　　பொறியாலே

தாயுமை பொரு துளாம் நடுங்க
நூபுர மணீ மணீ யுடைந்த
சாயல்நவ மாதர் மாதர் தந்த　　புதல்வோனே

சீருலவு வானு ளார் வணங்க
வேல் சண்முக னோடுனே சினந்து
தேர்கரி பல்சேனை பூதர் மண்ட　　செயமூடே

தேவர் சிறை மீள மீள வன்று
சூர் கிளைகள் வேரினோடு வென்ற
தீரமிகு வீர வாகு வென்ற　　பெருமாளே.

## ஒட்டக் கூத்தர் சிறப்பு

(வன்னத் தினைமாலை என்ற சந்தம்)

தந்தி முகனடி போற்றியே-சிவ
சண்முகன் பொன்னடி வாழ்த்தியே-அவன்
தம்பிமார் தம்புகழ் சாற்றியே
தலமேழினுள் திருவாய்மூரின் மணலூர்வருதவமார்
　　　　　　　　　　　　　　　　　　　சிவ
சங்கர பூபதி கீர்த்தியே-அவன்
தன்பெய ரம்பலக் கூத்தனே.　　(௧)

ஐந்துவயதினி லாடியே-கலை
யாய்ந்திடும் பள்ளியிற் கூடியே-இசை
அருள்பெற மாகாளம் நாடியே
அணிபாரதி தருபால்மகிழ் வுடனூணும வொரு
　　　　　　　　　　　　　　　　　　　பாவலன்
அன்று முதற்றமிழ் பாடியே-புவி
யார்மெச்ச வாழ்ந்தன னீடியே.　　(௨)

எண்டிசையும் புகழ் மிஞ்சவே-சோழன்
இட்டமுடன் மிகக் கெஞ்சவே-விசை
யின் கலைபற்பல கொஞ்சவே
இறையோன்முதல் கவிவாணரு முடிதாழ்வண
　　　　　　　　　　　　　　　　　　　மருநூல்சொலி
எட்டின் சகத்திர ரொஞ்சவே-சொனுன்
ஈட்டி எழுபது-செஞ்சவே　　(௩)

மன்னனும் புகழுண்மை பத்தியே-என்ன
மண்டல யாத்திரை சுத்தியே-நன்று
வளர்மதி யாவணி யத்தியே
மதிநீரொடு சிவபூடண மணிபூணுயர் குகனுர்பதம்
மாவுத்திராட நாள் முத்தியே-புகழ்
மற்றதுங் கூறுவேன்-நத்தியே　　(௪)

நா. குமரகுரு முதலியார், தமிழ்ப் புலவர்,
கலியாணம் பூண்டி, அன்னியூர், விழுப்புரம்.

---


# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

பத்திரிகாசிரியர் :—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

துணையாசிரியர் :—பண்டிதர். பி. செ. மாணிக்கவாசக முதலியார்.

தொகுதி—௪ } சுக்கில வருஷம் பங்குனி மாதம் { பகுதி—௩



...E OF THE...
9 JUN 1930


## பத்திரிகாசிரியர் முன்னுரை

### ஒற்றுமை மணம்

நமது முதலாவது மகாநாட்டில் நமது சமூக முன்னேற்றம் கருதி நிறைவேற்றப் பெற்ற தீர்மானங்களுள் ஒற்றுமை மணத் தீர்மானமும் ஒன்றாகும். பழமையே பாராட்டும் குணம் இந்து சமூகத்திற்குப் பொதுவாகவும் நம் சமூகத்தவர்க்குச் சிறப்பாகவும் இருந்து வருகிறது. இதற்கு முக்கிய காரணம் சரித்திர ஆராய்ச்சி யின்மையும், உலக அனுபவ மின்மையு மென்றே சொல்லவேண்டும். ஏதாவ தொருபுதிய முறையை—அது மிகுந்த நன்மை பயக்கக் கூடியதே யாயினும்—முதலில் அநுஷ்டானத்திற்குக் கொண்டு வருங்கால், அதை எதிர்ப்பது பெரும்பாலும் நமக்கு இயல்பாக இருந்து வருகிறது. மனமார நல்லதென உணர்ந்தவர்களும் அதனை நடவடிக்கைக்குக் கொண்டுவரக் கூடிய மனத் திண்மையற்றவர்களாய்ப் பின் வாங்கி நிற்கின்றனர். உதாரணமாக, நம்மவர்களுக்குள் ஒற்றுமை மணம் அவசியம் செய்ய வேண்டும் என்றும், அதனால் பெரும் பயன் விளையுமென்றும் எம்மிடம் வற்புறுத்திக் கூறிய பிரமுகர்களும் "யார் முன்னே துணிந்து செய்வது?" என்ற யோசனையோடு நிற்கின்றனர். நன்மைதரத்தக்க முறைகளை முதல் முதல் கையாள முன் வருவோர் செல்வம், கல்வி, செல்வாக்கு முதலிய மேன்மைகள் வாய்க்கப் பெற்றவர்களாகவே இருத்தல் சாலவும் நன்று; ஏனையோர் அன்னவரைச் சுலபமாகப் பின்பற்ற இயலும்.

ஆகையால், பிரசித்தி பெற்று விளங்கும் செங்குந்த குடும்பங்களுள் ஒன்றாகிய கொல்லங்கோட்டுப் பெரிய வீட்டார்—அதிலும் பயனற்ற தாடிக்கும் மீசைக்கும் மூச்சுப் பிடித்துச் சண்டையிட்டுக் கக்ஷிப் பிரிவுகளை உண்டாக்கிச் சாதிப் பிரஷ்டமும் செய்யும் மலையாளத்தில்—மகா நாட்டில் நிறைவேறிய ஒற்றுமை மணத் தீர்மானத்தைத் துணிந்து அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர முன் வந்தது மிகவும் போற்றத் தக்கது. இனி இவர்களைப் பின்பற்றி இத்தகைய திருமணங்கள் அநேகம் நடைபெறு மென்பதில் ஐயமின்று. நமது மகா நாட்டில் நிறைவேறிய தீர்மானங்களைக் கூடிய வரையில் நடவடிக்கைக்குக் கொண்டுவர முயன்று வரும் முற்போக்கான குடும்பங்களுள் இக் கொல்லங்கோட்டுக் குடும்பம் முதன்மையான தென்றே சொல்ல

லாம். ஈரோட்டில் நமது வாலிப மகா நாட்டைத் திறந்து வைத்த தலைவராகிய திரு. முத்துக் குமாரசாமி முதலியார் அவர்கள் இக்குடும்பத்தைச் சார்ந்தவர் என்பதையும், திரு. முதலியார் அவர்களது பரந்த கல்வியும், விரிந்த அறிவும், முன்னேற்ற நோக்கமும், இவ் வொற்றுமைத் திருமணம் நடந்தேறியதற்கு முக்கிய காரண மென்பதையும் மகிழ்வுடன் தெரிவிக்கிறோம்.

ம. ச.

---

## கிளைச் சங்கங்களின் காரியதரிசிகளுக்கு ஒரு வேண்டுகோள்:—

'நமது கிளர்ச்சி' என மகுடமிட்டுள்ள பக்கங்களில் வெளிவரும் கிளைச்சங்கக் கூட்டங்களின் விவரங்களை எமக்கு எழுதியனுப்புவோர் இனிக் கீழ்க் காட்டியுள்ளபடி அனுப்புமாறு வேண்டிக் கொள்ளப் பெறுகின்றனர்:-

ஜில்லா:—
சங்கத்தின் பெயர்:—
கிராமம்:—
கூட்டங்கூடிய தேதி.......மணி...
தலைமை வகித்தவர் பெயர்:—
உபந்நியாசகர் பெயர்:—
விஷயம்:—
தீர்மானங்கள்:—
காரியதரிசியின் கையொப்பம்.

நமது பத்திரிகையில் அதிக இடமின்மையால் கூட்ட விவரங்களுள் மேற் குறிப்பிட்டுள்ள முக்கிய அம்சங்களே வெளியிடப் பெறும்.

ப-ர்.

## கல்விநிதிச் சீட்டு.

கல்விநிதிச் சீட்டில் பரிசுகள் பெற்றவர்கள் தமது கையொப்பமிட்டுத் தம்மிடமுள்ள சீட்டுகளைச் 'செங்குந்த மித்திரன்' காரியாலயத்துக்கு ஏப்ரல் ௴ 1உக்குள் அனுப்பிவிட வேண்டும். அதற் கப்புறம் வரும் சீட்டுக்கள் கவனிக்கப் பெறமாட்டா.

ப-ர்.

---

## சுகந்த பரிமள சாஸ்திரம் அணா 12

இதில் மல்லிகை முதலிய புஷ்பங்களை முகர்ந்தால் பேதியாகக்கூடிய முறைகள்; தாம்பூலம் காபி முதலியவற்றால் பேதியாகக் கூடிய முறைகள்; சுகந்த மூக்குத்தூள், கூந்தல் தூபம், ஸ்நானப் பொடி பெங்களூர் முதலிய ஊர் ஊதுவத்திகள், அத்தர் பில்லைகள், மயிர்வளரும் பரிமளத் தைலங்கள், ஸ்நானத் தைலங்கள்; பலவகை ஷர்பத்துகள் முதலியன செய்யு முறைகள் அடங்கியிருக்கின்றன.

## கனக சாஸ்திரம் அணா 12

கஸ்தூரி, குங்குமப்பூ, பச்சைக் கர்ப்பூரம், கர்ப்பூரம், சாம்பிராணி, பெருங்காயம், பவழம், செம்பு, கெம்பு, தம்பாக்கு, முத்து, முதலிய வைப்புச் சரக்குகள் செய்யுமுறைகளும்; அயமணி, இரசமணி, பன்னீர், கற்கண்டு முதலியன செய்யுமுறைகளும் அடங்கியது.

---

ஸவுத் இன்டியன் புக் டிபோ,
2/17, பவழக்காரத் தெரு, சென்னை.



# ஒழுக்கப் பகுதி

(தொகுதி-4. பகுதி-1, 2, 8-ம் பக்கத் தொடர்ச்சி)

## மனதின் வளர்ச்சி

[திரு. ஆ. வே. முத்தைய முதலியார், பி. ஏ., பி. எல்., புதுவை அரசாங்க அமைச்சர்.]

தூலதேகத்திற்கு வேண்டிய உணவைப் பற்றிப் பார்த்தோம். அது சமயம் நமது நுண்ணிய தேகம், நுண்ணிய கருவியாகவிருக்கின்ற மனதைப்பற்றிக் குறிப்பிட்டோம். மனதின் வளர்ச்சிக்கு வேண்டிய உபாயங்கள் யாவை என்ற கேள்வியோடு நிறுத்திக்கொண்டோம்.

இப்போது மனதின் உணவைப்பற்றி ஆராயுமுன்னர், "மனது" என்றால் எதைக் குறிப்பிடுகிறோம், எதைக் குறிப்பிடவேண்டுமென்பதைச் சிறிதேனும் தெரிந்துகொண்டால்தான், அதன் வளர்ச்சி, அதன் வளர்ச்சிக்கு வேண்டிய உணவு முதலியவைகளைப் பற்றிய விஷயங்களையும் கண்டுபிடிப்பது சுலபமாகும்.

மனிதன் தற்போது இருக்கின்ற நிலையில், தனக்கு வெளிப்புறமாயுள்ள விஷயங்களை, பொருட்களைத் தான் உற்று நோக்கி விசாரிக்கிறானேயன்றி, தனக்கு மிகவும் நெருங்கிய பொருட்களைப் பற்றி நினைப்பதும் அரிதாயிருக்கிறது.

சாதாரண வாழ்க்கையில் நாம் நமது சொந்த இயந்திரங்களாகவிருக்கும் பற்கள், நாசிகள், கண்கள், காதுகள் இவைகளிருக்கின்ற நிலைமையைக் கவனிக்கிறோமில்லை. அவைகளுக்கு யாதேனும் கெடுதியுண்டானால் அப்போதுதான் அவைகளினிருப்பானது நமக்குப் புலப்படுகிறது.

நமது தடித்த தேகத்திற்கே இப்படியானால், இன்னும் நுண்ணியதாகவிருக்கின்ற நமது மனதைப்பற்றி என்ன தெரிகிறது? அநேகமாக ஒன்றுமே தெரிகிறதில்லை. அதாவது, அவ்வளவு ஆழ்ந்து நாம் விசாரிக்கிறதில்லை. மனதின் வயப்பட்டு நாம் அலைந்து வருகிறபடியால் நமது மயக்கத்தில் நம் மனத்தின் இருப்பே நமக்குத் தெரிகிறதில்லை. ஏதோ சில சமயங்களில் மனதிற்கும் அதிக அல்லல் ஏற்பட்டு அதற்கு அயலாயுள்ள புத்தி, விவேகம், சாட்சி என்னும் கருவி சற்றுத் துலங்கினால் அப்போதுதான் அந்தப் புத்தியைக் கொண்டு "மனது இந்த வேலை செய்து விட்டதே" யென்று ஒருவாறு யூகிக்கமுடிகிறது.

ஆகையால், மனது இன்னதென்பதென எடுத்துக்காட்டுவது எளிதல்லவெனினும், மனதினால் செய்யப்பட்டு வரும் வேலைகள் எல்லோருக்கும் அநுபவமாயுள்ளவைகளன்றோ? அதனால் அதைக் கண்டுபிடிப்பதும் ஒருவகையில் சுலபந்தான்.

"எனது நண்பன் துயரப்படுவதைக் கண்டு என் மனம் கலங்கிற்று" என்று நாம் சொல்லும் போது, கலங்கியது எதுவோ அதுதான் மனது.

சில வேளைகளில் பிரிவினையைக் குறிக்காமல் "அவனைப் பார்த்ததும் நான் துயருற்றேன்" என்பதாகச் சொல்வதுமுண்டு. இங்கும் துயருற்றது நம் மனதேயாகும்.

நமக்குள்ளே மகிழ்ச்சி, ஆசை, ஏக்கம், துயரம், கோபம் முதலிய நெகிழ்ச்சிகள் உண்டாகும்போதெல்லாம் அவைகள், அவைகளை அடிப்படையாகக் கொண்டுள்ள எண்ணங்கள் நமது மனதின் நெகிழ்ச்சிகளேயாகும். அந்த வியக்கங்கள், எண்ணங்கள் மனதிடையே உண்டாகின்றன என்பதாக மனதின் இருப்பை உணரலாமென்று நினைக்கிறேன். வேறு வகையில் மனதைப்பற்றித் தத்துவ சாஸ்திர வழியாகப் பொருள் சொல்வது "பாலானது கொக்கைப்போல் வெள்ளையாகவிருக்கும்" என்று சொன்ன கதையைப்போல் முடியக்கூடுமென அஞ்சுகிறேன்.

எனவே, மனதென்பது இந்த உருவமுள்ளது என்பதாக நமது தூலதேகத்தைப் போல அளவிட்டுச் சொல்வது அசாத்தியமெனினும், மனதின் (சேஷ்டைகள், விகாரங்கள்,—இவைகளெல்லாம் தத்துவசாஸ்திர வார்த்தைகள்) அலைகள், எண்ணங்கள் நமக்கு

அன்னியமானவைக ளல்ல. அந்த அலைகளில் தான் நாம் மொத்துண்டு நிற்கிறோம்.

சாப்பாட்டிற் கில்லையே யென்று ஏங்குகிறோம்.

அந்தோ! உணவிருந்தும் வயிற்றுவலியால் பட்டினி கிடக்கவேண்டி யிருக்கிறதேயென்று துயரப்படுகிறோம்.

பொருளில்லையே, ஏழை நான் என்ன செய்யக்கூடுமென்று கலங்குகிறோம்.

இப் பெரும்பொருளை எப்படிக் காப்பாற்றுவது? மோசம் செய்து விடுவார்களோ? திருடிக்கொண்டு போய்விடுவார்களோ? அல்லது திடீரென........எமன்.......வந்தால்....... என்று நடுங்குகிறோம்.

இந்த உணர்ச்சிகளெல்லாம், எண்ணங்களெல்லாம் மனதின் காரியங்களேயாகும். இவைபோன்ற மற்றவைகளும் என்பதாக யூகித்துக் கொள்க.

இந்த "மனது" என்பதும் ஒரு உடம்புதான், ஒரு கருவிதான்; நுண்ணிய உடம்பு, நுண்ணிய கருவி. இதற்கும் வளர்ச்சி யுண்டு; வளர்ச்சிக்கு வேண்டிய உணவும் உண்டு. நோயுண்டு, நன்னிலையுண்டு. இதைப்பற்றியே இப்போது நாம் விசாரிக்கப் புகுவது.

நமது உடம்பைப்போல் மனது தூலமாயிராமல் சூக்குமமா யிருப்பதால், அதைப்பற்றிச் சொல்லும்போதெல்லாம், நமது கண்முன்னிற்கும் தூலதேகத்தை உதாரணமாக வைத்துக்கொண்டு தான் விவரிக்கவேண்டி யிருக்கிறது.

தூலதேகத்தை நாம் நன்கு போற்றுவிட்டால், ஏதோ கண்டதை உணவாகக் கொடுத்துவந்தால், நன்றாக வளராதே தவிர அழிந்து போவதில்லை. அதுபோலவே மனதிற்கும். அதைக் கவனியாமல், தக்க உணவு கொடாமற் போனால், அதன் வளர்ச்சிக்கு ஊனமே தவிர அழிந்து போகிறதில்லை. நன்னிலை தப்பிய, நோயுள்ள தேகத்தைக் கொண்டு எக்காரியத்தையும் நன்றாய்ச்செய்யமுடியாத தெப்படியோ, அதுபோல் கோணலான, குறைவான, நோயுள்ள மனதைக் கொண்டு காரியம் செய்து முடித்தல் நற்பயனை யளிப்பதில்லை. கருவிகளாகின்ற தேகம், மனம், இவைகளின் நிலையைப் பொருத்தது, அவைகளால் செய்யக்கூடிய காரியங்களின் நேர்மையும் என்பதே.

ஆகையால், நம் மனதிற்கு நல்லுணவு யாதோ அதையே கொடுப்போம். அந்த உணவை எப்படித் தெரிந்து கொள்வது?

வெளிப்பொருட்கள், வெளிப்பதார்த்தங்களாயின், அவைகளின் குணங் குற்றங்களைப் பிறர் வாயிலாகத்தெரிந்துகொள்ளவேண்டும். இங்கு அப்படியல்ல. நம் மனதிற்கு உணவு, நாம் உணரும் உணர்ச்சிகளே, நெகிழ்ச்சிகளே, எண்ணங்களே யாகும். நம் மனதை உயர்த்தி அதற்குத் திருப்தி, இன்பம், அமைதி இவைகளைக் கொடுக்கக் கூடிய நெகிழ்ச்சிகள், எண்ணங்கள் நல்லுணவாகும். அன்றிக் கொதிப்பு, துடிப்பு, ஏக்கம், துயரம், மடிமை இவைகளை உண்டுபண்ணக் கூடிய நெகிழ்ச்சிகள் தீய உணவுகளாகும்.

இந்த நெகிழ்ச்சிகளும் எண்ணங்களும் இரண்டு வகையாகும். மனதிற்கு வெளியேயிருந்து மனதிடையே புகுபவைகள் பல. தொத்து நோய்களைப்போல நம் மனதிடையே நம்முடம்பில் நோயிருப்பதுபோல அமைந்திருப்பன சில.

முன்னதாகவே அமைந்துள்ள நோய்க்கு இடைவிடா சிகிச்சைசெய்து அதைக் கூடுமான வரையில் போக்கிக்கொள்வதுபோல மனதினுள்ளே முன்னதா யமைந்திருக்கக் கூடிய கொடிய நெகிழ்ச்சிகளை நல்ல எண்ணங்களைக் கொண்டு பரிகாரம் செய்து கூடுமானவரையில் போக்கிக் கொள்ளவேண்டும்.

உதாரணமாக, பொறாமையை யெடுத்துக் கொள்வோம். இந்தப் பொறாமை யென்பது மனதிற்கு க்ஷயரோகத்தைப் போன்றது. எதைப் பார்த்தாலும் யாரைக் கண்டாலும் பொறாமையாளர்களுக்குக் கொதிப்பு உண்டாய்விடும்; மனம் சதா துடித்துக்கொண்டேயிருக்கும். இதற்கு என்ன சிகிச்சை செய்வது?

வயிற்றுப்போக்குடையவர்கள் வாயைக் கட்டவேண்டுமென்ற முறைபோல, பொறாமையால் பிணியுற்றவர்கள் அதன் கெடுதிகளையும், அதனால் கெடுதி யடைந்தவர்களையும் பற்றிப் புத்தகங்கள் வாயிலாகவும், தாங்களே மனனத்தாலும் ஆழ்ந்து அடிக்கடி விசாரித்தறிந்து உணர முயலவேண்டும். முடியவில்லையென்றால், வாயைக் கட்டமுடியாதவனுடைய வயிற்றுப் போக்குப் போலத்தான் ஆகும்.

பொறாமை யென்கிற நோய் மனதை வெதும்பும்படி செய்து அதன் சத்தியைக் குறைத்து அதோடு நில்லாமல் அந்த மனதோடு சம்பந்தப்பட்டு நிற்கும் தூல உடம்பிலும் புகுந்து அதன் நிலையையும் கெடுத்து நோயை யுண்டுபண்ணித் துன்பங்கள் பல அனு



பவிக்கும்படி செய்கிறது. இதுபோலவே மற்றவைகளும்.

உலகிலுள்ள நோய்களுக்குக் காரணங்கள் ஏழ்மையும் சவுகரியக் குறைவுகளுமெனினும் அவைகளை விட முக்கியமான, அவைகளை அதிகப்படுத்தும் காரணங்கள் மனக்குழப்பங்களும், ஏக்கம், பொறாமை முதலியவைகளுமே யாகும்.

ஆகையால், நம் மனதி லமைந்துள்ள துர்க்குணங்களென்னும் நோய்களைப் போக்குவதற்கு, முதலில் அவைகள் நம்மிட மிருப்பதையும், அவைகளால் உண்டாகும் தீமைகளையும் நன்குணர்ந்து பிறகு "நல்லெண்ணங்க"ளென்னும் மாத்திரைகளைக் கொஞ்சங் கொஞ்சமாக இழைத்துத் தினம் மூன்று வேளையாகிலும் சாப்பிட்டு வரவேண்டும்.

காலை, நடுப்பகல், இரவு இந்நேரங்களில் போசனத்திற்கு முன் மனதில் நல்ல உணர்ச்சிகளை, எண்ணங்களை உண்டுபண்ண வேண்டும். ஒப்புக்கு, அல்லது செய்து தொலைப்பதற்கு அல்ல. நோய் போகவேண்டுமென்ற உறுதியுடன் செய்யவேண்டும். மாத்திரைகள் முதலில் அவ்வளவு இனிப்பாக இரா. பழகப் பழக மூன்று வேளைக்குமேல் அதிகமாகவும் சாப்பிடலாம்.

இந்தச் சிகிச்சையைத்தான் சமய நெறிகளிலே தியான ஜெபங்களெனப் பெரியோர்கள் அமைத்துள்ளார்கள்.

காலையிலெழுந்ததும் கடவுளைத் தியானஞ் செய்தலென்றால், "ஏது பிழை செய்தாலும் ஏழையேனுக் கிரங்கி"......என்பதாக உதட்டிற்குள்ளே அல்லது உரத்த சப்தமாகச் சொல்லிவிட்டுப் பிறகு வாழ்க்கையில் எந்த மோசமும் இன்னலும் செய்வதென்றால், நோய் போகுமா? 'தப்பு'செய்ததால்நோய்வந்தது. அந்த நோய் உனது கருணையால் அதிகப்படாமலிருக்கிறது. இனிமேலாகிலும் அப்பிழை செய்யாமலிருக்கவேண்டும். நோய் போகவேண்டும். அருள் பாலிக்கவேண்டு'மென்று மன்றாடி, நமது மனதில் தயை, கருணை, அன்பு, மகிழ்ச்சி அழுந்தப்பதிந்து நின்றாலல்லவோ மனம் சுகப்படும், நோய் நீங்கும் என்ற விஷயத்தை நண்பர்கள் நன்கு கவனிக்க.


மனதென்பதை ஒரு செழிப்பான நிலத்திற்கு ஒப்பிடலாம். அந்நிலத்திலே எதை விதைத்தாலும் நன்றாக விளையும். மனதை நன்றாகப் பதப்படுத்தி, நல்லெண்ணமென்னும் விதைகளை விதைத்தால், நற்பழக்கங்கள் நற்குணங்களென்னும் விளைவுகள் உண்டாகும். அந்த நிலத்தைச் "சும்மா" போட்டுவிட்டாலோ காடுமுரடான புற்பூண்டுகள் முளைத்து, முட்களையும் பேய்ச்செடிகளையும் உண்டுபண்ணும். எச்செடிகளும் நன்றாக வளரக்கூடிய நிலமாகையால், நல்ல செடி, கொடி, புஷ்பங்களாகிற எண்ணங்களை விதைப்பது நம்மைப் பொருத்தது. நல்ல பயிர் செய்யாமல் விட்டுவிட்டால் தீய பயிர் தானே விளையும். இதைத் தடுக்கமுடியாது. ஆகையால் மனது விஷயத்தில் அதிக பிரயாசை, விடாமுயற்சி வேண்டும். இவ்வகையாக மனதை வளர்த்தால்தான் செம்மை மனதாக விருக்கும்; மனதில் அமைதி உண்டாகும்.

ஆனால், மனதின் நிலையை, இருப்பைத் தெரிந்து கொள்வதற்கு அதற்கப்பாலுள்ள, அதற்கன்னியமாயுள்ள புத்தி, விவேகம், அறிவு, சாட்சி யென்ற பல வேறு பெயர்களால் குறிப்பிடும் கருவியும் நல்ல நிலையிலிருக்க வேண்டும். அந்தக் கருவியையும் மனதிற்குச் சொன்னதுபோல் துலக்கவேண்டும்.

இதைப்பற்றி இனி விசாரிப்போம்.

(தொடரும்.)

**A Gold-plated Lever Wrist Watch for Rs. 6-14-0.**



எங்கள் ரிஜிஸ்டர்டு ரோல்டு கோல்டு "பிடோ" லீவர் கைக்கடியாரம் பார்வைக்கு அழகாயிருக்கும் சரியான டைம் காட்டும் ஸிலிண்டர்கடியாரங்களைப்போல் கொஞ்ச நாளைக்குநின்று போவதல்ல. 5 வருஷ மல்ல, பத்து வருஷங்கூட ரிபேர் இல்லாமல் போகக்கூடிய கடியாரம். இதை வாங்குவோருக்கு ரோல்டு கோல்டு கடியார கைச்சங்கிலி இனாமாக சேர்த்து அனுப்பப்படும். வீணிலே ஸிலிண்டர் கடியாரங்களில் பணத்தை இழக்காமல் எங்களை நம்பி எக்காலத்தும் உழைக்கக்கூடிய லீவர் கடியாரத்தை வரவழைத்துக் கொள்ளுங்கள். வாங்கிக்கொண்ட ஒருவாரம் சரியாக ஓடவில்லை யென்றால் வாபஸ் ஒப்புக்கொள்ளப்படும். 5 வருஷம் காரண்டியுடன் அனுப்புகிறோம். இனாம் சங்கிலியுடன் கடியாரம் விலை ரூ 6-14-0. ஸ்டாக் கொஞ்சம். உடனே எழுதுங்கள்.

FANCY WATCH HOUSE, *119, G. P. O., Madras.*

# ‘ சூதுவிரும்பேல் ’

[திரு. P. C. வீராசாமி முதலியார்.]

உலகத்தில் மானிடராகப் பிறந்த யாவரும் விரும்புவது இன்பமே. அவ்வின்பத்தை எவ்வா றடையலாகுமெனின் முதன்மையாகப் பொருளால்தா னடையலாம். அப்பொருளும் எப்படிப் பட்டதாக விருக்கவேண்டு மென்னில் அறவழியில் ஈட்டினதாக இருத்தல் வேண்டும். இவ்வா றன்றித் தனக்கும் பிறர்க்குந் துன்பம் பயக்கும் நெறிகளிலும், யாருக்கும் சிறிதும் பயன் தராதவஞ்சித்தொழுகும் சில நெறிகளிலும் ஈட்டுதல் கூடாது. இங்குக் கூறிய பொருளை ஈட்டுதற்குக் கூடாத நெறிகள் இரண்டினுள் பின்னையதாகிய நெறியே சூது என்பதாகும். அது குதிரைப் பந்தயம், சொக்கட்டான் முதலிய பலதிறப்படும். இவை, முதற்கண், குறைந்த முயற்சியினால் அதிக செல்வத்தை ஈட்டிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையை உண்டு பண்ணி, பின்பு தன்னைக் கைக் கொண்டவர்களை சோம்பேறிகளாகச் செய்துவிடுகின்றன. அதனால் இச்சூது நெறிகளை நம்பிக் கைக்கொண்டவர்கள் தமது நல்லுணர்வை யிழந்து பாவ காரியங்களில் செல்லுவதோடு, பொருளையும் அதனால் வருதற்குரிய இன்பங்களையு மிழந்து பல்லாற்றானும் துன்பத்தையே யடைந்து சீரழிகின்றார்கள். ஆகையால் இச்சூது நெறிகள் நம்மவர்களால் கைக் கொள்ளப்படாமல் அவசியம் ஒழிக்கற் பால தொன்று.

அன்றியும், உலக அமைப்பை உற்று நோக்கின் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குக் கடவுளால் கொடுக்கப்பட்ட சில கடமைகளைச் செய்யக் கடமைப் பட்டிருக்கின்றனர் என்பது விளங்குகிறது. நாம் அனுபவித்தற்குரிய ஒவ்வொரு பொருளும் இயற்கையிலேயே வரம்பின்றிக் கிடைப்பினும், அவை நம்மாற் காணப்பட்டவாறே அனுபவித்தற் கில்லாதவைகளாக இருக்கின்றன. நம் தொழிலுக்கேற்ற வகைகளில் அப்பொருள்களைத் திட்டம் செய்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். உதாரணமாக, இயற்கையிலேயே நிலமும் மழையும் கிடைக்கின்றன. ஜலத்தின் உதவியைக் கொண்டு நிலத்தை உழுது விதைத்துப் பின்பு அதன்பலனை அனுபவிக்கிறோம். இம்மாதிரியே, ஆயுதங்களுக்கு முதன்மைப் பொருளாகிய இரும்பு பூமியில் மண்ணுடன் கலந்து கிடைக்கிறது. நம் வேலைக்காக அதை மண்ணினின்று வேறாகப் பிரித்து உபயோகிக்கிறோம். இம்மாதிரியே ஒவ்வொரு பொருளும் எந்தெந்த வழியில் உபயோகித்தற் குரியதென அறிய வருந்தி முயற்சித்த பின்னரே, அவை பயன் தருகின்றன வென்பது விளங்கும். ஆகவே மக்கள் தங்கள் மெய் வருந்தத் தொழில்களைச் செய்தலினால் தான் இவ்வுலகம் நிலையுறுகின்றது. அவ்வாறு யாவரும் ஒரு தொழிலையும் செய்யாதிருக்கின் இவ்வுலகமே நிலைக்காமல் அழிந்து விடும். யாவரும் முயற்சியின்றி உயிர் வாழ முடியாது. இவ்வுலக இயல்பு இத்தன்மைத் தாதலின் ஒவ்வொருவரும் தத்தமக்குத் தக்கபடி தமக்கும் பிறர்க்கும் பயன் தரத்தக்க சில முயற்சிகளைச் செய்யக் கடமைப்பா டுடையவர்களே. எவனொருவன் யாதொரு முயற்சியுமின்றி இவ்வுலகில் வாழ்கின்றானோ, அவன் வருந்தித் தொழிலியற்றும் மற்றவர்க்கு ஓர் பாரமாக இருந்து துன்புறுத்துவதோடு, தானும் அழிகிறான். இத்தன்மைத் தாகிய கொடுமைகளைத் தரும் சோம்பேறித்தனத்தை மேற்சொல்லிய சூது தனக்குத் தந்தையாகவும் மகனாகவும் கொண்டுள்ளது. சோம்பலினாலேயே சூதுகள் ஆரம்பிக்கின்றன. சூதும் சோம்பலையே உண்டு பண்ணி வளர்க்கின்றது. ஆகவே, நாட்டு முன்னேற்றத்தையும் மக்கள் முன் போக்கையும் கருதும் ஒவ்வொருவரும் அதற்குத் தடையாயுள்ள சோம்பேறித் தனத்தைப் பெரிதும் வளர்க்கும் இச்சூதை அவசியம் கடிதல் வேண்டும்.

இதுகாறும் சூது இன்னதென்பதையும், அது மக்களில் தனித்த மனிதனையும் அவனை யங்கமாகக் கொண்டுள்ள சமுதாயத்தையும் அழிக்கின்றதென்பதையும் கூறினோம். இனி அதன் வகைகளைப் பற்றித் தனித்தனி ஆராய்வோம்.

சூதாடும் ஒருவன் கள்ளுண்டவனைப் போல மதிமயங்கி தன்னிடமுள்ள பொருள்களை யெல்லாம் பந்தயமாக வைத்து இழக்கிறான். ஆனால் முதலில் அவன் தன்னிடத்திலுள்ள பொருளைவிட சூதாட்டக்காரனை ஏமாற்றி அதிகமாகப் பெறலாமென்னும் கபடமனதுடனே செல்கிறான். முதலில் அவனுக்குக் கொஞ்சம் லாபம் கிடைத்தால், அது போன்றே இன்னும் கிடைக்குமென வெண்ணி, தன் பணமெல்லாம் போனாலும், கடன் வாங்கியும், தன் ஆடையாபரணங்களையுங் கூட வைத்துத் தோற்கிறான். இப்படிச் சூதுக்குப் போகின்றவன்தான் தோற்கிறானென்னில், இதற்குக் காரணமாகவுள்ள சூதாட்டக்காரனாவது பலனை யடைகிறானா வென்னில், அவனுக்கு அப்பொழுதில் ஏதோ லாபம் கிடைத்தாற்போ லிருந்தாலும், பின்பு அப்பொருளும் அழிவுக்குக் காரணமாயிருப்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம்.

சூதே தனது தொழிலாகக் கொண்டுள்ளஒருவன் தன் செல்வத்தை யழிப்பதல்லாமல், பெருமையையும் போக்கிக் கொண்டு, பலரும் தன்னைப் பார்த்து நகைக்கப் பிறரிடம் பகைப்பும் கொண்டு வறுமை யடைகிறான். சூதுடையவன் அதைத் தனது விநோதத் தொழிலாகக் கொண்டிருப்பானாயினும், அவனை ஒளி, செல்வம், கல்வி, ஊண், உடை என்னும் ஐந்தும் அடையாவாம் என்பதற்கு



“உடை செல்வ மூ ணொளி கல்வியென் றைந்து
மடையாவா மாயங் கொளின்”

என்னும் திருவள்ளுவரின் தெய்வ வாக்கே போதிய சான்றாகும்.

இன்னும் இக்கொடிய காரியத்தினால் துன்பங்கள் நிகழ்வது புராண இதிகாசங்கள் வாயிலாகவும் அறியக்கிடக்கின்றது. நளன் புட்கரனோடு சூதாடுகையில், தன் செல்வத்தை முதல் பந்தயமாகவும், அப்பால் நாடு நகரங்களையும் வைத்தழிந்து, கடைசியில் ஏதுமின்றிப் பட்ட கஷ்டங்கள் ஒவ்வொருவர் மனதிலும் பசுமரத்தாணியெனப் பதிந்திருக்கிறது. இஃதன்றியும், தருமபுத்திரர் துரியோதனனுடன் சொக்கட்டானாடித் தன்னுடைய நகரங்களையும் தோற்றுத் தன் பத்தினியாகிய திரௌபதியையும் பணயமாக வைத்து அவளையும் தோற்றுப் பதினான்கு வருஷம் வனவாசம் செய்தது எவரு மறிந்ததே.

கடைசியாக, சூதுகளில் முதன்மையாக உள்ள குதிரைப் பந்தயம் என்பதைக் கவனிப்போம். சிலர் குதிரைப்பந்தயத்தினால் சரீரங்களுக்கு மிக்க பலமுண்டாகிற தென்றும், முதலாவதாக ஜயித்தால் அதிக பணத்தைப் பரிசாக அடையலாமென நினைத்தும், தாங்கள் தினம் கூலி வேலை செய்து ஆகாரத்துக்கு இல்லாமற் போனாலும் போகிறதென வெண்ணி, ஈட்டிய பணத்தைப் பந்தயத்தில் கட்டித் தோற்றுவிட்டு, திரும்பிவரும் போது கையில் ஒரு பைசாகூட இல்லாமல் கள்வனைப் போல விழிக்க நேருகிறது. இது விஷயத்தில் துரைத்தனத்தார் கொஞ்சம் சிரத்தை யெடுத்து, அப்படிப்பட்ட ஸ்போர்ட்ஸ் கிளப்ஸ் (Sports Clubs) சென்னைக்குள் ளிருக்கக் கூடாதென உத்தர விட்டிருப்பது மிகவும் போற்றத் தக்கதே. ஆனாலும் அவர்கள், இவ்விதமான கடைகளை அறவே ஒழித்திருப்பாராயின் மிகவும் நலமாயிருக்கும்.

இன்னும், சீட்டு, தாயம் முதலியவைகளும் சூதுகளே. இவைகள் மேற்சொல்லிய சூதுகளைப் போல் அவ்வளவு கொடியவைகளல்ல. இவைகள் விளையாட்டின் நிமித்தமும், போது போக்குவதைக்கும் ஆடுபவைகள். இவைகளிலும் சிலர் பணத்தை இழக்கின்றனர். இப்பழக்கம் அதிகமாகச் சிறுவர்களிடமே இருப்பதாகக் காண்கிறது. அவர்கள் இவ்விளையாட்டினால் மிகவும் கெட்டுப் பணத்தை யிழக்கிறார்கள். சிறுவயதில் இவர்கள் இச்சிறு ஆட்டத்தி லீடுபட்டு, தாங்கள் பெரியவர்களான பின்பு மேற்குறித்த கொடிய விஷயங்களில் தலையிடுகின்றனர். அதற்குக் காரணம் சிறுவயதில் இத்தகைய ஆட்டங்கள் ஆடும் மனிதர்களுடன் கூடுவதுதான். இதையும் ஒழிக்கவேண்டியதென்பது இதனால் ஏற்படுகிறது.

ஆகையால், மேற்காட்டிய விஷயங்களினால் சூது மிகவும் தீய ஒழுக்கமும் தீமையும் தரத்தக்க ஒரு ஆட்டமென ஏற்படுவதனால், இதை வாசிக்கும் நண்பர்கள் அத்தகைய விஷயங்களில் தலையிடாதிருக்கவும், தங்கள் சிறுவர்களையும் நுழையாதிருக்கவும், தங்கள் வதிபுமிடங்களில் இவைகளிருப்பின் அதையொழிக்க வழிதேடவும் முயற்சி யெடுக்க வேண்டியது அவசியம்.

ஸ்ரீலோலன்

(ஓர் இனிய துப்பறியும் நாவல்)

எளிய நடை ! இனிய உரை !

மற்ற நாவல்களைப்போலன்றி
நன்னீதிகளைப் புகட்டுவது.

இன்றே வாங்கிப் படியுங்கள்.

விலை ரூ. 1-4-0.

செங்குந்தமித்திரன் புத்தகசாலை,
(9)F பூவழக்காரத் தெரு, சென்னை.

கற்பகத் தைலம்

குழந்தை வியாதிகட்கு அமிர்தம் போன்றது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதது.

பாக்கிங் தபால் செலவு உள்பட
ஒரு புட்டியின் விலை ரூபா 1—4—0.

3 புட்டி வாங்கினால் செலவின்றி அனுப்பப்படும். உபயோகிக்கும் முறை புட்டியின்மேல் காண்க.

முன்பணமில்லாத ஆர்டர்கள் கவனிக்கபடமாட்டா.

எல்லா வியாதிகட்கும் ஏற்ற மருந்துகள் கிடைக்கும்.

ப. அங்கமுத்து முதலியார்,
சிகிச்சாஞான பண்டிதர்,
கற்பக மெடிகல்ஹால், சத்தியமங்கலம்.
(1) கோயம்புத்தூர்.




## பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளிடம் காணப்படும் சில கெட்ட பழக்கங்களும் தேகாரோக்கியத்திற்கு அவற்றால் உண்டாகும் கெடுதல்களும்

டாக்டர். ஜி. ரெகுநாத ராவ், டீ. டீ. எம். மெடிகல் ஆபீசர், குஷ்டரோக ஆஸ்பத்திரி, கடாக்.

('ஆரோக்கியதீபிகை'யில் கண்டது)

ஒவ்வொருவருடைய பழக்க வழக்கங்கள் நல்லவையோ கெட்டவையோ எவ்வாறு படிப்படியாய் அமைகின்றன என்பதைக் கவனித்துப் பார்த்தால், 'நகப்பனைப்போல் பிள்ளையும்' என்கிற பழமொழியின் உண்மை நன்கு விளங்கும். பழக்கங்கள் யாவும் சம்பாதிக்கப்படுபனவே. அவை செவ்வையாய் விருத்தியடைந்தால், ஒரு மனிதன் கூடவே பிறந்த குணத்துடனே அது கலந்துவிடும். அக்குணத்திற்குச் சம்பாதித்த குணம் என்னும் பட்டப்பெயர் உண்டாகிறது. ஆனதுபற்றி ஒருவன் பழக்கங்கள் நன்மை விளைவிக்கக்கூடியனவாய் இருக்கவேண்டுமானால், அவை ஆரோக்கியமுள்ளனவாக விருக்க வேண்டும். குழந்தைகளின் மனதில் ஆரோக்கியமான பழக்கங்கள் தோன்றும்படி செய்வது பெற்றோர் கடமையாகும். குழந்தையாயிருக்கும்போது என்ன பழக்கங்கள் படிகின்றனவோ, அப்பழக்கங்களே பின்னிட்டும் உண்டாகும் என்பது யாவர்க்கும் தெரிந்த விஷயமே. ஆனதுபற்றிக் குழந்தையாயிருக்கும்போதே சரியான பழக்க வழக்கங்களைப் பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டியது அத்தியாவசியமாக விருக்கிறது. உபாத்தியாயர்களுக்கு இதுவிஷயத்தில் ஒரு கடமை உண்டு. குழந்தையா யிருக்கையில், சில கெட்ட பழக்கங்கள் படிந்தால் அவற்றை உடனே ஒழிக்க முயலவேண்டும். இல்லாவிடில் அவை வேரூன்றி வயது முதிர்ந்தும் கூட, அக்கெட்ட பழக்கங்களிலேயே அவனைக் கொண்டுவந்து விடும். அவற்றை அவன் தெரிந்து கொண்டாலுங்கூட, நாட்பட்டதினால் ஒழிக்கமுடியாது. பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளிடம் உண்டாயிருக்கும் சில கெட்ட பழக்கங்களை நான் கவனித்திருக்கிறேன். அவைகளை இங்கே எடுத்துக்கூறி அவற்றால் தேகாரோக்கியத்திற்கு ஏற்படும் கெடுதல்கள் இன்னவை என்பதையும் சொல்லுகிறேன்.

முதல் முதல் சர்வசாமானியமான பழக்கம் யாதெனில், கரும் பலகைகளை நக்குவதே. ஒரு பையன் செய்வதைப் பார்த்துக்கொண்டு மற்றொருவன் அதே மாதிரி செய்ய ஆரம்பிக்கிறான். இந்தப் பழக்கம் இப்போதும் எல்லா ஆரம்பக் கல்விச் சாலைகளிலும் விஸ்தாரமாய்க் காணப்படும். கற்பலகைகளைப் பிள்ளைகள் கண்டவிடத்தில் வைத்து வைக்கிறார்கள். எல்லாக் குழந்தைகளும் அவற்றைக் கையாளுகின்றன. ஆனதுபற்றி, காலரா, சீதபேதி, டைபாய்ட் ஜுரம், டிப்தீரியா முதலிய தொத்து வியாதிகளால் வருந்தும் நோயாளிகளினுடைய மலம், மூத்திரம், எச்சல், துப்பல் முதலிய கழிவுகளினால் அவைகள் அசுத்தமாக்கப்படுவதற்கு ஹேது உண்டு. ஆரோக்கியமுள்ள குழந்தைகள் அப்பலகைகளை நக்கினால் அந்த வியாதிகள் சுலபமாய் அவர்களுக்குத் தொத்தும்.

சில சமயங்களில் தங்கள் பலகைகளில் சாக்கினால் உபாத்தியாயர்களால் போடப்பட்டிருக்கும் மார்க்குகளைத் தங்கள் பெற்றோர்களுக்கும் மாணாக்கர்களுக்கும் பெருமைக்காகப் பிள்ளைகள் காட்டுவதுண்டு. இது சகஜம். ஆனால் அவர்கள் தொத்து வியாதி சம்மந்தப்பட்டவர்களாக யிருந்தால், அப்பலகைகளை அவர்கள் கையாளும்போது அவற்றின்மீது



அவர்கள் கழிவுகள் படியும். அப்பலகைகளைப் பிள்ளைகள் மார்க்குகளை கலைப்பதற்காக நக்கினால் அவ்வியாதிகள் அவர்களுக்குத் தொத்தும். சில சமயங்களில் ஒரு பையன் தன் பலகையை மற்றொரு பையனிடம் நக்கக் கொடுப்பதுண்டு. இதன் மூலமாய் விஷக் கிருமிகள் அவன் தேகத்திற்குள் நுழைந்து, அவன் பெற்றோர்கள் ஆரோக்கியமுள்ளவர்களாயிருந்தாலும்கூட, வியாதிதொத்தும்.

அவ்வளவு கடூரமான வியாதிகள் தொத்தாவிட்டாலுங்கூட, இந்தப் பழக்கம் கெடுதல் என்பதில் ஆக்ஷேபணையில்லை. ஆகாயத்தில், சீழ் பிடிக்கும்படியானதும் எரிப்புண்டாக்கும்படியானதுமான அநேக விஷக்கிருமிகள் நிரம்ப இருக்கின்றன. இக்கிருமிகள் பலகைகளிலும், இன்னும் திறந்து வைத்திருக்கப்படும் மற்ற வஸ்துக்களின் பேரிலும் வந்து படியும். இப்பலகைகளை நக்கும்போது, நாக்கில் அவைகள் உராய்ந்து, மருந்தைக் குத்தி யேற்றினால் எப்படி தேகத்தில் போய் கலக்கிறதோ அப்படியே இக்கிருமிகள் தேகத்தினுட் செல்லுகின்றன. இதனால் தொண்டைரணம், வாய்ப்புண் முதலிய சாதாரணமாய் பிள்ளைகளிடத்தில் காணப்படும் நோய்கள் உற்பத்தியாகின்றன.

தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் மகா கொடிய வியாதியாகிய க்ஷயரோகமானது இவ்விதம் குழந்தைகளுக்கு உண்டாகும். க்ஷயரோகக் கிருமிகளுக்கு ஈரமிருந்தால் போதும். தூசியில் எங்கும் பரவியிருக்கும். தூசி படிந்த பலகையை நக்கினால், இக்கிருமிகள் உள்ளே நுழைந்து நாளாவட்டத்தில் க்ஷயரோகத்தை உண்டாக்கும்.

மற்றொரு கெட்டபழக்கம் யாதெனில், பலகையின்மேல் எச்சிலைக் துப்பியும் அல்லது மூக்குச்சளியைச் சிந்தியும் அவற்றைத் துடைப்பது. இதனால் மேற்சொல்லிய வியாதிகள் யாவும் அவனுக்குப் பரவும்படி நேரும். முக்கியமாய், டிப்தீரியா என்னும் வியாதி இதன் மூலமாய் எளிதில் பரவும். தொண்டைப்புண் உள்ள ஒரு பையன் பலகையில் துப்பி, அதைத் துடைக்க மற்றொரு பையன் கையில் கொடுக்கிறான். அல்லது ஆரோக்கியமுள்ள பையன் ஒருவன் இந்த அசுத்தமான பலகையைக் கையாண்டு அதன் மூலமாய் அந்த வியாதியைச் சம்பாதித்துக் கொள்ளுகிறான். ஆரோக்கியமற்ற பிள்ளைகளின் பலகைகளை ஆரோக்கிமுள்ள பிள்ளைகள் கையாளுவதால், இவர்களுக்கும் நோய் உண்டாகிறது. இத்துர்ப்பழக்கத்தை ஒழிப்பதெப்படி? பிள்ளைகள் எச்சல் சளி முதலியவற்றால் பலகைகளைத் துடைக்காமலிருக்கும்படிக்கும், வகுப்பிற்கு வருவதற்கு முன்னமே அவைகளைச் சுத்தமான ஜலத்தைக்கொண்டு சுத்தம்செய்து கொண்டு வரவும் உபாத்தியாயர்கள் திட்டம் செய்யவேண்டும். ஒருவனுடைய பலகையை மற்றொருவன் கையாளக்கூடாது. ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு மட்பாண்டத்தில் பலகைகளைத் துடைக்கப்போதுமான ஜலம் வைக்கப்பட்டிருக்கவேண்டும். பலகைகள் சுத்தமாய் இருக்க வேண்டுமென்கிற எண்ணத்தினால் தான் இந்தக் கெட்ட பழக்கங்கள் உண்டாகின்றன. ஒவ்வொரு வகுப்பிலும் ஜலம் நிரம்ப இருந்தால் இப்பழக்கத்திற்கு இடமிராது; தானாகவே ஒழிந்துபோகும்.

ஒவ்வொரு பாடம் முடிந்தவுடனே பிள்ளைகளை மட்பாண்டத் தண்டை போய்ப் பலகைகளைக் கழுவிக்கொண்டு வரும்படிச் செய்ய வேண்டும். அவற்றைத் துடைப்பதற்கு டஸ்டர் துணிகளும் சில வைக்கப்பட்டிருக்க வேண்டும். வகுப்பு ஒன்றுக்கு ஒரு பானை ஜலமும், இரண்டு மூன்று டம்ளர்களும், இரண்டுமூன்று டஸ்டர் அல்லது துண்டுத் துணிகளும் வைத்திருப்பதினால் அதிக செலவாய்விடாது. இதனால் பலகையை நக்கும் துர்ப்பழக்கமும் போய்விடும். பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்களும் இன்ஸ்பெக்டர்களும் இதன்படி நடந்து இந்தத் துர்ப்பழக்கத்தை ஒழிப்பார்களா?

பிள்ளைகளிடத்தில் காணப்படும் மற்றொரு துர்ப்பழக்கம் யாதெனில், நகத்தைக் கடிப்பதே. இந்த வழக்கத்தைக் கண்டிக்காமல் விட்டுவிட்டால் பழக்கமாய்விடுகிறது. பையன் பெரியவனாகும்போதும் இப்பழக்கத்தை விட அவனுக்கு அசாத்தியமாய்விடுகிறது. இது எவ்வளவு அசங்கியை என்றும், ஆரோக்கியத்திற்கு எவ்வளவு கெடுதல் என்றும் சற்று யோசித்துப் பார்த்தால் நன்றாய் விளங்கும். நமது நகங்களில் அபாயகரமான விஷக்கிருமிகளும் அவைகளின் அடியில் புழுக்களின் முட்டைகளும் வந்து சேரும். நகங்களைக் கடிக்கும்போது, இவை தேகத்தினுட் சென்று குடற்கோளாறுகளுக்குக் காரணமாகின்றன. உபாத்தியாயர்கள் சாமர்த்தியமாய் இத்துர்ப்பழக்கத்தை [illegible]

மற்ருெரு துர்ப்பழக்கம் யாதெனில், புஸ்தகம், நோட்புஸ்தகம் இவற்றின் ஏடுகளைத் தள்ளுவதற்கு முன்னே பிள்ளைகள் தங்கள் கைவிரல்களைக் கொண்டு எச்சிலைத் தொட்டு ஏடுகளைத் தள்ளுவதே. இப்பழக்கம் பின்னிட்டும் அவனை விடுகிறதில்லை. ஒவ்வொரு எட்டைத் தள்ளி எண்ணும்போதெல்லாம் எச்சிலை விரலால் தொட்டுக்கொள்ளுகிருர்கள். குழந்தைப் பருவத்தில் இந்தப் பழக்கம் தொடங்கிஞல் வயது முதிர்ந்த பிறகும் கூட ஒரு அனுசாரமான பழக்கமாகி விடுகிறது. அதை நிறுத்தச் சாத்தியப்படாது. இது ஆரோக்கியத்திற்கு எவ்வாறு கெடுதல் என்று பார்ப்போம். ஒருவன் கற்றை கற்றையாய்ப் பண நோட்டுகளை எண்ணுகிறதாக எண்ணிக்கொள்வோம். இந்தப் பண நோட்டுகள் யாவராலும் கையாளப்படுகின்றன. தொத்து வியாதி சம்பந்தமான மனிதனெருவன் இந்த நோட்டுகளைக் கையாண்டிருந்தால் அவைகளை எண்ணும்போது விஷக்கிருமிகள் கைவிரல்களின் மூலமாய்த் தேகத்தினுட் செல்லுகின்றன. இதனுல் குடற்கோளாறுகள் பரவுகின்றன. இந்தப் பழக்கத்தினின்றும் பிள்ளைகளை மீட்பது உபாத்தியாயர்கள் கடமையாகும்.

உபாத்தியாயர் கடமை பிள்ளைகளுக்கு மூன்று 'ஆர்', அதாவது வாசகம், எழுத்து, கணக்கு இவற்றை பட்டும் போதிப்பதுடன் நிற்கவில்லை. தங்கள் கைவசம் ஒப்பிக்கப்பட்டிருக்கும் இப்பிள்ளைகளுக்கு, அவர்கள் மனதில் எதுவும் படியும்படியான சமயத்தில், நல்ல பழக்கங்களைக் கற்பித்து, அவர்களின் முதுமைப் பருவத்தில் சௌக்கியமாய் வாழும்படிச் செய்வதும் அவர்கள் கடமையாகும்.


## மகாநாட்டு மலர்

நமது முதல் மகாநாட்டின் நிகழ்ச்சிகள், வைபவங்கள்,
தலைவர்களின் பேருரைகள், தீர்மானங்கள் நிறைந்துள்ளன.

தலைவர்களின் ஆப்டோன் படங்கள்
40-க்கு மேல் பொலிந்து விளங்குகின்றன.

வழவழப்பான காகிதம். கண் கவர் அழகு.

செங்குந்தர் ஒவ்வொருவர் கையிலும்
இருக்கவேண்டியது அவசியம்.

விலை அணு 8 தபாற் செலவு அணு 3

மானேஜர், செங்குந்தமித்திரன் ஆபீஸ்,
பவழக்காரத் தெரு, சென்னை.


நீங்கள் உங்கள் கடமையைச் செய்து விட்டீர்களா? இல்லையாயின், உடனே உங்கள் சந்தாவை அனுப்பி விட்டு ஒவ்வொருவரும் இயன்ற அளவு புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புங்கள்.



## சந்தன மரங்கள்

('மாதர் போதினி'யில் கண்டது)

நமது நாட்டில் நடைபெறும் எல்லாச் சுபகாரியங்களிலும் சந்தனம் எப்படியும் உபயோகிக்கப்படும் என்பதை அறியாதார் எவருமிலர். சந்தன மரங்கள் மைசூரிலும் பொதியமலைச் சாரலிலும் வளருகின்றன. இப்பொழுது, சந்தன மரத்திற்கு ஒருவகை வியாதி கண்டிருக்கிறதென்றும், அந்நோய் கண்ட சின்னுட்களுக்குள் அம்மரங்கள் பட்டுப் போகின்றனவென்றும் ரசாயன பிரகிருத சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கின்றனர். சந்தன மரத்தில் காணப்படும் இந்நோய்க்கு 'முள்ளி நோய்' என்கிருர்கள். ஏனெனில் இந்நோய்ப்பட்ட மரங்களின் இலைகள் சிறிது சிறிதாக ஊசிபோல் கிழிந்து போகின்றனவாம். கடந்த 15 வருஷங்களாகச் சென்னையிலும் மைசூரிலும் சந்தன மரங்கள் இந்நோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றனவாம்.

இந்த நோய்க்கு ஏற்ற மாற்று கண்டு பிடிப்பது மிகவும் அவசியம் என்று உணருவதற்கு இந்தியாவிலும், மற்ற இடங்களிலும், உலகம் முழுவதிலுமே இம்மரங்களால் ஏற்படும் பிரயோஜனமும் வியாபார முக்கியமும் அறிந்துகொள்வது அவசியம். இந்தியாவில் உள்ள காட்டு மரங்களில் சந்தன மரங்களே விலையுயர்ந்தவை. வியாபாரத்தில் சந்தனக் கட்டைக்கு இருக்கிற மதிப்பு வேறெந்த மரத்திற்குமில்லை. சந்தன மரங்கள் சென்னை ராஜதானியிலும் மைசூரிலும் 2,000 அடிமுதல் 4,000 அடிவரை உயரமுள்ள பிரதேசங்களில் வளருகின்றன. வருஷந்தோறும் 2,000 டன் நிறையுள்ள சந்தனக் கட்டைகள் வியாபாரத்திற்கு வருகின்றன. இதில் சுமார் 700 டன் நிறையுள்ள சந்தனக் கட்டைகள் மைசூரிலிருந்து கிடைக்கின்றன. அவற்றின் விலை 9 லட்சம் ரூபாய். மைசூர் ராஜ்ஜியத்தில் சந்தனக் காடுகள் சர்க்காருக்குச் சொந்தமானவை. அதற்கென்று பிரத்தியேகமாய் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தரால்தான் அங்குச் சந்தனமரங்கள் வெட்டப்படவேண்டும். இந்தச் சர்வ சுதந்தரத்தை இந்திய கம்பெனிக்காரர் 1770-ம் வருஷம் ஹைதர் ஆலிக்குக் கொடுத்தார்கள். பின் பிரிட்டீஷ் இராஜ்ஜியத்தார் மைசூர் சமஸ்தானத்தின் அரசர்களுக்கு அந்தச் சுதந்தரத்தை ஊர்ஜிதப்படுத்தினர்கள். ஆகவே தற்காலம் வரைக்கும் மைசூர் இராஜ்ஜியத்தில் சந்தனக்காடுகள் அரசருக்குச் சொந்தமாகவே யிருக்கின்றன.

சந்தனக் கட்டைகளால் செய்யப்படும் சாமான்கள் ஏராளமாகவும், பல தினிசுகளாகவும், விலையுயர்ந்தவையாகவு மிருக்கின்றன. அவைகளினின்று பெரும் பெட்டிவகைகளும், சிறு கோவில்களும், சித்திரக்கூடங்களும், சிலைகளும், சுவாமி விக்கிரகங்களும், கைப்பெட்டிகளும், படங்கள் பொதியும் உறைகளும், விசிறிகளும், கைப்பிடிக்கோல்களும், கத்திப் பிடிகளும், காகிதப் பெட்டிகளும், சதுரங்கப் பலகைகளும், செப்புகளும், விளையாட்டுச் சாமான்களும் செய்யப்படுகின்றன. இவற்றின் விலை 1 ரூபாய் முதல் 1,000 ரூபாய் வரைக்குமிருக்கின்றன.

சந்தனக் கட்டைகளின் நிறத்தையும், அதில் விழுந்திருக்கும் வரைகளையும் கவனித்துச் சந்தன மரங்களை நான்கு வகையாகப் பிரித்திருக்கின்றார்கள்: (1) சிவந்த சந்தன மரம், (2) வெள்ளைச் சந்தன மரம், (3) மயில் சந்தன மரம், (4) நாகச் சந்தன மரம். கடைசி இரண்டு வகைகளில் காணப்படும் வரைகள் ஒரு விதமாய் மயிலையும் நல்ல பாம்பையும் ஒத்திருப்பதால் அவற்றிற்கு அந்தப் பேர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டிற்கும் மற்றவைகளைவிட விலையும் அதிகம். அவைகளால் செய்யப்பட்ட பணிதிகளைச் சொன்ன விலை கொடுத்து எவரும் வாங்கி விடுவார். ஆனால் அதிகம் ஏராளமாகக் கிடைக்கும் சந்தன மரங்கள் செந்நிறமானவையே. அது மங்கின சிவப்புடையது. அதில் காணப்படும் வரைகள் மஞ்சளும் கபில நிறமுமானவைகள். இவை கனத்த மரம், மரக்குழாய்க் கூட்டங்கள் மிகவும் நெருங்கி இருக்கும் என்ற போதிலும் வெகு லேசாக எந்த நுட்பமான வேலைக்கும் உதவக் கூடியது. அதில் இன்னொரு விசேஷம் என்னவென்ருல், அதின் உட்பாகத்தின் வாசனை கறையானுல் வெறுக்கப்படுவதே. கறையான் அரிக்காதிருப்பதும் வியாபாரத்திற்காகப் பண்படுத்த அனுகூலப்படுகிறது. எப்படியெனில் மரத்தை வெட்டி வீழ்த்தினபின் பல மாதங்களாக மண்ணில் அப்படியே விட்டுவிடுகிருர்கள். அப்பொழுது கறையான் மேல் பட்டையையும் வாசனையற்ற சோற்றுப் பாகத்தையும் தின்றுவிட்டு, வாசனைமிகுந்த கடினமரப்பாகத்தைத் தொடாமல் விட்டுவிடுகிறது. வாசனை நிறைந்த இப்பாகத்தை பின் வெட்டிப் பல துண்டுகளாக்கி மூடின வீடுகளில் சில வாரங்களாகப் போட்டு நிழலில் உலர வைக்கிருர்கள். இவ்விதப் பதத்தால் வாசனை அதிகப்படுவதுடன், மரம் எவ்விதமாகவாயினும் பிளப்பதற்கும் வெட்டுவதற்கும் ஏற்றதாகிறது. மேலும் மரக்கட்டையிலிருக்கும் ஒருவகைத் தைலபசை மரக்கட்டைகளை வாசனைபோகாமல் பாதுகாக்கின்றன. இக்கட்டைகளை நுட்பமான பொடிகளாக அரைத்துத் தண்ணீர்விட்டுச் சாந்தாகக் குழப்பி நெற்றியில் பொட்டிடவும், உடம்பில் பூசிக்கொள்ளவும் உபயோகிக்கிருர்கள்.

சந்தன எண்ணெய் டை கட்டைகளிலிருந்து வடிக்கப்படும் ஒருவகை விலையுயர்ந்த தைலம். இத்தைலம் வாசனைக்காகவே உபயோகிக்கப்படுகிறது. இந்தியாவில் உபயோகிக்கப்படும் எல்லா அத்தர் வகைகளிலும் சந்தனத் தைலம் சேராமலிராது. வெகுகாலமாகச் சந்தனக் கட்டைகள் தைலம் இறக்கும்படியாக ஜெர்மானியா தேசத்திற்

குக் கப்பலேற்றப்பட்டு வந்தன. ஆனால் இப்போதோ பங்களூரிலும் மைசூரிலும் அதற்கென்று பிரத்தியேகமான சாலைகளேற்பட்டு இந்தியாவிற்கு வேண்டிய தைலம் இந்தியாவிலேயே இறக்கப்படுகிறது.

இவ்விதமாய் வாசனைச் சரக்குத் தயாரிக்க மாத்திரமல்ல, உடலைத் தகனம் செய்யவும் அபரிமிதமாக உபயோகிக்கப்படுகின்றன. பார்சியர் தங்கள் கோவில்களில் பரிசுத்த அக்கினி வளர்க்க உபயோகிக்கிறார்கள். ஓர் எளிய இந்தியன் தன் இனத்தவன் உடலைத் தகனிக்கக் குறைந்தது 50 ரூபாய் பெறுமான சந்தனக் கட்டைகளை உபயோகிப்பான் என்று சொல்லப்படுகிறது. இந்தியாவிற்கு அடுத்தாப்போல் சீனாவில் சந்தனக்கட்டைகள் அதிகமாகச் செலவாகின்றன. அதற்கு அடுத்தபடியாய்ச் செலவழிப்பது அரேபியா தேசம். ஜெர்மனி, பிரான்சு, இன்னும் மற்ற நாடுகளில் சில சொற்ப அளவில் இத்தேசங்களுக்குச் சந்தனக் கட்டைகளனுப்புகின்றன.

சந்தன மரத்தின் வளர்ச்சியில் ஒரு நூதனமென்னவென்றால், அது ஒரு புல்லுருவி. முழுவதும் புல்லுருவியாக இராவிட்டாலும், பாதிக்கு மேல் புல்லுருவியென்றே சொல்லலாம். முதலில் மற்ற மரங்களைப் போலவே பூமிக்குள் வேர்விட்டுப் பச்சை இலைகளைத் துளிர்க்கின்றன. ஆனால் அதின் வேர்கள் வேறு எந்த மரத்தின் வேரைத் தொட்டாலும், உடனே சந்தனமரத்தின் வேர்கள் மற்ற மரத்தின் வேர்களில் பாய்ந்து அதிலுள்ள சாரத்தை எடுத்துக் கொள்ளுகின்றன. விசேஷமாய்க் கருவேல மரங்களின் வேர்களை இவை ஆவலாய் நாடுகின்றனவாம். ஆகையால் கருவேல் மரங்களை நாம் சந்தனமரங்களை வளர்க்கும் செவிலித்தாய் என்று சொல்லலாம். கருவேல மரங்களில்லாவிடத்தில் அவை உண்ணிச்செடியின் வேரை நாடுகின்றன. உண்ணிச்செடிகள் (Lantena) சமுசாரிக்குக் கஷ்டத்தைக் கொடுப்பவை. பிரயோஜனமற்றவை. ஆனால் அவை சந்தனக் கன்றுகள் வளரும் தொட்டிகள். உண்ணிச்செடிப் புதரிலேயே சந்தன நாற்று வளர்க்கிறார்கள்.

சந்தன மரங்களைப்பற்றி எழுதப்பட்ட புஸ்தகங்கள் கி. மு. 500-ம் வருஷத்தில் முதல் முதல் வெளிவந்தன. ஆனால் அதற்கு முன்பே சந்தனம் உபயோகிக்கப்பட்டுவந்தது என்று எண்ண இடமிருக்கின்றது. அநேக ஆயிரம் வருஷங்களாக இந்தியா தேசம் ஒன்றே உலகம் முழுவதற்கும் சந்தனக் கட்டைகளைக் கொடுத்துவந்தது. பின் கி. பி. 18-ம் நூற்றாண்டின் மத்தியில் பசிபிக் தீவுகளில் சந்தன மரங்களிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. ஆகையால் அத்தீவுகளைக் கைவசமாக்கிக் கொள்ளப் பலர் முயன்றனர். இம்முயற்சி கடற்கொள்ளையாகவே யிருந்தது. இவ்விஷயத்தில் ஏற்பட்ட உயிர்ச்சேதத்திற்கும் கங்குகரையில்லை. இப்பொழுதோ பசிபிக் சமுத்திரத்தீவுகளில் இம்மரங்களற்றுப் போயின. ஆகவே இந்தியா தேசமானது பழையபடி சந்தன மரத்திற்கு உலக நாயகியாக வருகிறது. சந்தனக்கட்டை இந்தியாவின் செல்வத்திற்கு மூலம். தற்சமயம் சந்தன மரத்திற்கு உண்டாகும் இம் 'முள்ளி நோய்க்கு' ஏற்ற பரிகாரம் கண்டுபிடிக்கப் படாவிட்டால் இந்தியாவிற்கு அது பெரிய நஷ்டமாகும்.

(3) F

திருக்குறள்

மூலமும் பொழிப்புரையும்.

பொருளீட்டும் கருத்தின்றி தமிழ் நாகரீகத்தின் புகழ்நாட்டும் கருத்தோடு நல்ல கிளேஸ் காகிதத்தில் பாக்கட் அளவில் அச்சிடப்பட்டுள்ளது.

300 பக்கங்கள் உள்ள

பெரிய புத்தகம்

விலை அணா எட்டு,

இதுவரை இத்தகைய

உரை வெளிவந்ததில்லை.

சமத்துவம் சகோதரத்துவம் பெண்ணுரிமை முதலிய தமிழ்நெறிபற்றி எழுதப்பட்ட புத்துரை

தமிழர் அனைவரும் ஓதி ஒழுகவேண்டிய முக்கியமான நூல்.

"நவசக்தி" ஆசிரியர், திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

முதலியோரால் நன்கு மதிக்கப் பெற்றது.


சொற்ப காப்பிகளே உள்ளன !

இன்றே ஆர்டர் செய்யுங்கள் ! !

ஒரு புத்தகம் வேண்டுவோர் தபால் செலவு சேர்த்துப் பத்தணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். 2 அல்லது 3 புத்தகங்கட்கு வி. பி. உள்பட தபால் செலவு அணா 7. ஆறு புத்தகங்கட்கு அணா 10.

செங்குந்தமித்திரன் புத்தகசாலை, பவழக்காரத் தெரு, சென்னை.






# பிரஸவத்திற்கு ஆயத்தம் செய்தல்

[மிஸ். கே. எம். ஹாக்கர், சூப்ரின்டெண்டெண்டு, ஹெல்த் விஸிடர்ஸ் ட்ரேயினிங் ஸ்கூல்,] எழும்பூர்

பிரஸவத்திற்கு ஆயத்தம் செய்யா திருப்பதற்கு யாதொரு சமாதானமும் காணோம். சிசு பிறப்பதற்கு வெகு நாளைக்கு முன்பே நமக்கு அதன் வருகையைத் தெரிவிக்கிறது. நமக்கு இன்னது தயாரிப்பது என்று தெரியாத விஷயம் தான் இதற்குக் காரணம் ஆனதுபற்றி அதை அப்படியே விட்டு வைக்கிறோம். திடீரென்று குளிர்காலத்தில் சாயங்கால நேரத்தில் குழந்தை பிரஸவமாகும் போது, அதற்காக ஒன்றும் தயாராயிருக்கிறதில்லை. குழந்தைக்காக என்னென்ன ஆயத்தம் செய்ய வேண்டும்?

1. பிரஸவத்தின் போது நல்ல மருத்துவ ஸ்திரீயை ஏற்பாடு செய்தல்:—சாதாரணமாய்த் தாயார் நினைக்கக் கூடிய சமாசாரங்களில் கடைசியானது இது தான். ஆனதுபற்றி அவளுக்குப் பிரஸவ நோய் எடுக்கும் போது, யார் அகப்பட்ட போதிலும், அவள் குடும்பத்திற்குத் தெரியாத அன்னியளாயிருந்தாலுஞ் சரி, அவளை மருத்துவம் பார்க்க அழைக்க ஓடுகிறார்கள். ஒவ்வொரு தாயும் ஆறும் மாதம் கடந்தவுடனே ஒரு தாதியோ, டாக்டரோ, அல்லது இருவரையுமோ ஏற்பாடு செய்து வைத்துக்கொள்ள வேண்டியது. அவளுடைய தாதி அவளுடன் பழகினவளாகவே இருக்க வேண்டும். பிரஸவத்தின் போது அவள் வருகையில் நூதன மனுஷியாக இருக்கக் கூடாது. தாயை ஒரு தரமாகிலும் டாக்டர் பரீக்ஷித்துப் பார்த்து அவள் குழந்தையும் அவளும் சுகமாக இருக்கிறார்கள் என்பதைப் பார்த்து வைத்திருக்க வேண்டும். அவள் தாதியைக் கொண்டும் தன்னைப் பரீக்ஷைசெய்து பார்க்கச் சொல்லித் தனக்கு ஏதாகிலும் அசௌக்கியமிருந்தாலும், தேகம் சரி தப்பி இருப்பதாகத் தெரிந்தாலும் அவளுக்கு உடனே தெரியப்படுத்த வேண்டும்.

2. பிரஸவ அறையைத் தயாரித்தல்:—குழந்தை எந்த இடத்தில் பிரஸவம் ஆக வேண்டுமென்பதை முன்னாலேயே யோசிக்க வேண்டும். வீட்டில் சந்தடியில்லாத இடமாகப் பார்த்து, அதில் பெரியதும், வெளிச்சமுள்ளதும், காற்றோட்ட முள்ளதுமான அறை ஒன்றைத் தெரிந்தெடுக்க வேண்டும். இந்த அறையைப் பிரஸவத்திற்கு முன் செவ்வையாய்ச் சுத்தம் செய்யவேண்டும். சுவர்களையும் மேற் கூரையையும் பெருக்கிச் சுவர்களை வெள்ளையடிக்க வேண்டும் தரையைப் பினைல், கார்போலிக், லைசால் முதலிய விஷங்கொல்லி மருந்தால் செவ்வையாய்க் கழுவ வேண்டும். மேஜை முதலிய சாமான்களைக் கழுவி வெயிலில் உலர்த்த வேண்டும். கவனிக்க வேண்டிய மற்றொரு விஷயம் யாதெனில், பிரஸவ அறைக்குள், அதிக சாமான்களும் திரைகளும் இருந்தால் தூசி சிலந்திக்கூண்டு முதலிய சேருமாதலால், அவைகளை அதிகம் வைத்திருக்கக் கூடாது. ஒரு நாற்காலி அல்லது இரண்டு நாற்காலிகள், தாய்க்கு ஒரு கட்டில், குழந்தைக்கு ஒரு கட்டில் இவைதாம் தேவை. இவைகளும் சுலபமாய்த் துடைத்துக் கழுவக் கூடியவையாய் இருக்கவேண்டும்.

3. தாய்க்கு ஆயத்தம் செய்தல்:—அழுக்கடைந்த பழைய கந்தல்களைச் சேகரித்து வைக்கவேண்டியதென்னும் வெகு காலமாக ஒரு தப்பெண்ணம் ஜனங்களுக்கு உண்டு. அதனால் அதிக கெடுதல் நேரிடும். இந்த அழுக்குக் கந்தல்களில் இருக்கும் விஷக்கிருமி

கள் தாயின் இரத்தத்தில் கலந்து ஜ்வரம் காணும், தாய்க்கு இவை அதிகம் வேண்டியதில்லை.

(a) அவள் தன் பழங் கந்தல்களை யெல்லாம் சேர்த்து வைத்து நன்றாய்த் தோய்த்துக் கொதி ஜலத்தில் போட்டுக் காயவைத்துச் சுத்தமான இடத்தில் வைத்து வைக்கவேண்டும்.

(b) சுத்தமான படுக்கை, பாய், துப்பட்டி, தலையணை உறைகள், முடியுமானால் ஒரு கம்பளி இவைகளைத் தயாரித்து வைக்கவேண்டும். பிரஸவமாகும் போது, நீர் சுவருத ஒரு பெரிய துண்டுத்துணி வேண்டும். இதை வாங்கச் சக்தியில்லா விட்டால், சுத்தமான பழுப்புக் கடிதம் அல்லது சுத்தமான வர்த்தமானக் கடிதம் இவற்றை அதற்குப் பதிலாக உபயோகித்துக்கொள்ளலாம்.

(c) அவள் படுக்கையில் இருக்கும் போது உடுத்திக் கொள்ள இரண்டு மூன்று புடவைகளும் ரவிக்கைகளும் வேண்டும். இவை இருந்தால் அவள் சுத்தமாகவும் சௌக்கியமாகவும் இருப்பதற்கு அனுகூலமாகும்.

தாதிக்கு, இரண்டு மூன்று ஏனேமல் தாம்பாளம், ஒரு கூஜா அல்லது முந்தை, ஒரு தொட்டி, சோப், நகத்தை சுத்தஞ் செய்யும் ப்ரஷ், கூடுமானால் கொஞ்சம் பஞ்சுக் கம்பளியும், லைசால் அல்லது பொராஸிக் விஷங்கொல்லி மருந்தும், தயாரித்து வைக்கவேண்டும்.

நோவு எடுத்ததும், வெந்நீரும் கொதித்து ஆறவைத்த ஜலமும் தயாரித்துச் சுத்தமான இடத்தில் வைத்து, தும்பு தூசி விழவொட்டாமல் அதை மூடி வைக்க வேண்டும்.

4. குழந்தைக்காக வேண்டிய ஆயத்தங்கள்:—(a) குழந்தை பிறந்தவுடன் அதைப் பிடித்துக்கொள்ள ஒரு மிருதுவானதும் உஷ்ணமானதுமான வஸ்துவைத் தயார்படுத்த வேண்டும். பழைய துண்டுக் கம்பளி இருந்தால்போதும். ஆனால் அது சுத்தமானதாக இருக்கவேண்டும்.

(b) உரத்த நூலும், கொஞ்சம் பஞ்சுக் கம்பள உருண்டைகளும், கொதி ஜலத்தில் போட்டு எடுத்த கந்தலும் தயாராய் வைத்திருக்க வேண்டும்.

(c) குழந்தைக்கு ஸ்நானமானவுடன் ஒத்துவதற்கு ஏதாகிலும் கொஞ்சம் பவுடர் வேண்டியதாயிருக்கும். விநோலியா பேபி சால்கம் போதுமானது. ஆனால் அது மணலாயிருக்கக் கூடாது. குழந்தையின் சர்மம் மிகவும் மிருதுவாயிருப்பதால் குழந்தைக்கென்று தனியாகத் தயாரிக்கப்பட்டிருக்கும் ஸோப் இருந்தால் உத்தமம்.

(d) சில மெல்லிய துவாலைகள் வேண்டும். குழந்தையைத் துடைக்க முரட்டுத்தளுவம் உபயோகித்தால் குழந்தையின் சருமம் புண்ணாகிவிடும்.

(e) குழந்தைக்கு உடை தேவை. எம்மாதிரி உடை, எத்தனை வேண்டும் என்பது குழந்தை பிறந்த இடத்தின் சீதோஷ்ண ஸ்திதியை ஒத்தது. குறைந்தது, ஒன்று அல்லது இரண்டு சிறிய கம்பளித்துண்டுகள், பட்டுகள், ஒன்று அல்லது இரண்டு மேலங்கிகள் (பருத்தியினலாவது கம்பளத்தினலாவது செய்ததாக இருக்கலாம்).

குளிர்காலமாக விருந்தால், ஈரமாயிருந்தால் சில கம்பளிகள் வேண்டியதாயிருக்கும். அதிகமாய் உடை தயாரிக்கத் தாய்க்கு சக்தியிருக்கும் பக்ஷத்தில் குழந்தைக்கு நல்லது. ஏனெனில், குழந்தை எப்போதும் சுத்தமாய் இருக்கவேண்டுமானால் அதற்குத் துணி அதிகம் வேண்டும்.

(f) குழந்தைக்குத் தனியாக ஒரு கட்டில் அல்லது படுக்கை இருக்க வேண்டிய தவசியம். படுக்கையின் மேல் போடும் துணிகளும் வேருக இருக்கவேண்டும். எப்போதும் தாய்க்கு அருகாமையில் குழந்தை படுத்துக்கொண்டிருந்தால் சுத்தமான காற்று அதற்குக் கிடைக்காததாலால், அப்படியிராமல் இருப்பது குழந்தைக்கு மிகுந்த ஆரோக்கியத்தைத் தரத் தகுந்தது. கட்டிலைத் தாயின் பக்கமாகப் போட்டிருந்தால் அடிக்கடி அவள் குழந்தையைப் பார்த்துக்கொள்வாள். அது அழும்போதும் அவள் கவலைப்பட வேண்டியதில்லை.

(g) முடியுமானல், வெந்நீர் நிரப்பிய புட்டி ஒன்றைக் கம்பளியினல் மூடிக் குழந்தை தாய் இவர்களுக்கு அருகில் வைத்திருப்பது நலம். சாதாரணமாய்ப் பெரியபுட்டி அவசரத்திற்குப் போதுமானது. ஆனல், மூடி கழன்று விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது. இல்லாவிடில் குழந்தைக்கும் தாய்க்கும் சுடுகைபட்டு ரணம் உண்டாகும்.



# இல்வாழ்க்கைப் பகுதி

## மீனாக்ஷி

[திரு நிறை செல்வி மா. க. சுந்தரவல்லி யம்மாள்]

அடக்க முடையார் அறிவில ரென்றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா.

### I

அநேக வருஷங்களுக்கு முன்னே சிற்றூர் என்னும் கிராமத்தில் மாசிலாமணி முதலியார் என்னும் ஸ்ரீமான் ஒருவரிருந்தார். அவருக்கு அநேக வேலி நிலங்களும் வீடுகளும் இருந்தன. அவர் ஒரு நாள் தமது வீட்டின் கூடத்தில் போடப்பட்டிருந்த சோபாவில் சாய்ந்து கொண்டு பத்திரிகை ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தார். அச்சமயம் அவர் மனைவியாகிய பார்வதியம்மாள் அவ்விடம் வந்து, 'என்ன வாசித்துக்கொண் டிருக்கிறீர்?' என்றாள்.

மாசிலாமணி முதலியார்:— இப்பத்திரிகையில் பெண் கல்வியைக் குறித்து ஒரு வியாசம் வந்திருக்கிறது. அது வெகு நன்றாயிருப்பதால் வாசித்துக் கொண்டிருந்தேன்.— வேலைக்காரரெல்லாம் அவரவர் வேலையைச் செவ்வையாகச் செய்கிறார்களா? நீயேன் நிற்கிறாய்? இப்படி உட்காரு.

பார்வதி:—(ஒரு நாற்காலியின்மேல் உட்கார்ந்து கொண்டு) வேலைக்காரரெல்லாம் அவரவர் வேலையைச் செவ்வையாகவே செய்கிறார்கள். எனக்குத்தான் பொழுது போகவில்லை. அதற்காகவே மீனாக்ஷியைக் கூப்பிட்டுக் கொண்டு வரும்படி பையனிடம் சொல்லியனுப்பினல், அவள் 'எனக்கு ஏதாகிலும் வேலையிருந்தால் வருகிறேன். இல்லாவிடில், இப்போது வருவதற்கில்லை' எனச் சொல்லியனுப்பிவிட்டாள். நெல் குத்திப் பொழுது போக்கும் மீனாக்ஷிக்கு எவ்வளவு அகங்காரம் இருக்கிறது பாருங்கள்! நான் சொல்லியனுப்பியும் வரவில்லை! அவளுக்குப் பணமும் கொஞ்சம் கையிலிருந்தால் இன்னும் கர்வம் அதிகமாகவே இருக்கும்.

மாசி:—பார்வதீ! நீ யோசியாமல் மீனாக்ஷியைத் தூற்றாதே. உன்னுடன் வந்து வார்த்தையாடிக் கொண்டிருந்தால் அவள் குழந்தைகளுக்கும் அவளுக்கும் சாப்பாடு கிடைக்குமா? அவள் தினமும் உழைத்துச் சாப்பிடவேண்டியவ ளாயிற்றே. அதனல் தான் நீ ஏதாகிலும் வேலைசெய்யச் சொன்னல் செய்துவிட்டு உடனே தன் வீட்டிற்குப் போய் விடுகிறாள்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருந்த சமயம் 16 வயதுடைய சுப்பிரமணியன் என்னும் அவர்களுடைய குமாரன் அவ்விடம் வந்து, 'அம்மா, காப்பி கொடுங்கள். நான் சாப்பிட்டுவிட்டுப் பள்ளிக்கூடம் போகவேண்டும்' என்றான். பார்வதி பரிசாரகனைக் கூப்பிட்டுக் காப்பியும் பலகாரமும் கொண்டு வரும்படி சொல்ல, பரிசாரகன் ஒரு பெரிய செம்பில் காப்பியும் பலகாரமும் கொண்டுவந்து வைத்தான். பார்வதி, கணவனுக்கும் சுப்பிரமணிக்கும், (அச்சமயம் அவர்கள் குமாரத்தி ராதாவும் விளையாடிவிட்டு அவ்விடம் வர) அவளுக்கும், காப்பியும் பலகாரமும் தட்டில் வைத்துக் கொடுத்தாள். அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், மீனாக்ஷியின் குமாரர்கள் மூவரும் ராதாவை விளையாடக் கூப்பிட அவர்கள் சாப்பிட்டுக்கொண் டிருந்த கூடத்தில் நுழைந்து, அவர்கள் பலகாரம் தின்பதைக் கண்டு உடனே வெளியில் வந்து விட்டனர்.

அவர்களைக் கண்ட மாசிலாமணி முதலியார் அவர்களில் பெரியவனை நோக்கி 'உள்ளே வா, அப்பா' என்றார். பார்வதி அவர்களுக்கு ஒரு தட்டில் பலகாரம் வைத்துக் கொடுக்க, 'வேண்டா' வென்று சொல்லிவிட்டு, 'இவ்விடமிருந்தால் பலவந்தம் செய்வார்க'ளென்று மூத்த பிள்ளைகள் இருவரும் ஓடிவிட்டனர். இளையவன் ஓடமுயல பார்வதியம்மாள் அவன் கையைப் பிடித்துக் கொண்டு பலகாரம் தின்னும்படி வற்புறுத்தினாள். சி

(மாதர் பகுதி 80-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவையாவும் குறைந்தது குழந்தை பிறப்பதற்கு 14 நாட்களுக்கு முன் தயாரித்து வைத்து வைக்கவேண்டும். அப்படிச் செய்யும் பக்ஷத்தில், குழந்தை திடீரென்று பிரஸவமான போதிலும் தாய்க்குக் கவலையில்லை. குழந்தை பிறப்பதற்கு முன் அதற்கு நல்வரவு கொண்டாடுவதற்கு வேண்டிய எத்தனங்கள் செய்யாவிடில் அது அழகல்ல. அது பிரஸவமாகிறவரையிலும் தாயார் ஏதாகிலும் ஒரு தொழில் செய்து கொண்டிருக்க வேண்டும். அவள் தன் தேகத்தையும் மனதையும் செவ்வையாய்ப் பாதுகாத்துக் கொண்டு வரும் பக்ஷத்தில், பிறக்கும் குழந்தை சுகமானதாகவும் திருப்தி கரமானதாகவும் இருக்கும்.

வன் ஒன்றும் செய்யத் தோன்றாமல் அழுது கொண்டு நின்றான்.

மாசி:—ஏன் தம்பி அழுகிறாய்? இதைச் சாப்பிடு.

சிறுவன்:—பிறர் வீட்டில் ஏதாகிலும் வாங்கிச் சாப்பிட்டால் அம்மா என்னைக் கோபித்துக்கொள்வார்கள். நான் போகிறேன். என் கையை விட்டு விடுங்கள்.

பார்:—நான் உன் அம்மாவிடம் சொல்லமாட்டேன், நீ சாப்பிடு.

சிறு:—நீங்கள் சொல்லாவிட்டாலும் நானே போய்ச் சொல்லிவிடுவேன். பொய் சொன்னால் இன்னும் அதிகமாகத் தண்டிப்பார்கள்.

பார்:—உன் அம்மா உன்னை அடிப்பாளா ?

சிறு:—எங்களை அம்மா அடிப்பதேயில்லை. ஆயினும், நாங்கள் யாரேனும் தப்பிதம் செய்தால் அன்று முழுவதும் எங்களுடன் பேசவேமாட்டார்கள். பொய் சொன்னால் கடவுள் நம்மைத் தண்டிப்பார் எனச் சொல்லியிருக்கிறார்கள்.

பார்:—நீங்கள் தினமும் வெண்மையான துணிகளையே உடுத்திக் கொண்டு வருகிறீர்களே, உங்கள் வீட்டின் அருகில் வண்ணான் இருக்கிறானா ?

சிறு:—இல்லை. என் தமக்கை லக்ஷ்மி தினமும் எங்களுடைய துணிகளை யெல்லாம் துவைத்து உலர்த்தி மடித்து வைப்பாள். என் அம்மாவுக்கு நெல்குத்துவதும் வாரம் ஒரு தரம் கிழிந்த துணிகளையெல்லாம் தைத்து வைப்பதும் வேலை.

இதற்குள் ராதாவும் பலகாரம் சாப்பிட்டுத் தயாராக இருக்க, அவளைக் கூட்டிக்கொண்டு சிறுவன் விளையாடப் போய்விட்டான்.

மாசிலாமணி முதலியார் பார்வதியை நோக்கி, 'பார்வதீ! சற்றுமுன் மீனாக்ஷியை நீ கூப்பிட்டதற்கு வரவில்லை யென்று கோபித்துக் கொண்டாயே, பார்! மீனாக்ஷி சிறுவர்களை எவ்விதம் பழகியிருக்கிறாள்! ஏழைச் சிறுவர்கள் யார் என்ன தின்றபோதிலும் எதிரில் அவர்கள் முகம் பார்த்து நிற்பதையும், தின்போர் முதலில் சிறுவர்களாயிற்றே என்று கொடுத்தாலும் தினமும் அதே வழக்கமாக வந்து நின்றால், 'சீ! இதென்ன இந்தச் சனியன்கள் தினமும் நம்மைச் சாப்பிட விடாமல் வந்து நிற்கின்றனவே' என்று வெறுப்பாய்ச் சொல்வதையும் நாம் பார்த்தும் கேட்டுமிருக்கிறோம். அப்படிப்பட்ட சொற்கள் கேட்க விடாமலும், கடவுளிடம் பக்தி, பொய் சொல்லாமை முதலிய நற்குணங்களிலும் மீனாக்ஷி தன் சிறுவர்களைப் பழக்கியிருக்கிறாள்' என்றார்.

பார்வதி:—ஆம்; அவள் சிறுவர்களைப் பழக்கியிருப்பது ஆச்சரியமே. எனக்கு அநேக நாளாக அவர்களெல்லோரும் எவ்விதம் சுத்தமான ஆடைகளையும், கிழியாத உடைகளையும் உடுக்கிறார்களென்பதே ஆச்சரியமாயிருந்தது, சிறுவன் சொன்னதிலிருந்து தெரிந்து கொண்டேன். அவளுக்குப் படிக்கத் தெரியாதென நினைக்கிறேன்.

நேரமாய் விட்டபடியால் மாசிலாமணி முதலியார் தன் அலுவல்களைக் கவனிக்க வெளியில் சென்றார். பார்வதியம்மாள் சமையல்காரனுக்கு அன்று சமைப்பதற்கு வேண்டிய திட்டங்களைச் சொல்லிவிட்டு, மீனாக்ஷியின் நற்குணங்களைச் சிந்தித்துக் கொண்டே, "எல்லா ஏழைகளும் மீனாக்ஷியைப்போல் தினமும் துவைத்த ஆடைகளை உடுத்திக் கொண்டும், குளித்து உடம்பைச் சுத்தமாக வைத்துக்கொண்டும் இருந்தால் பார்ப்பவர்களுக்கு அழகாயும், நோய் இல்லாமலும் வாழலாமல்லவா? 'பணமில்லை; பணமில்லை' என்று பஞ்சைவேஷம் போட்டுக்கொண்டு, கிழிந்த உடைகளையும் அழுக்கடைந்த உடம்பையும் உடையவர்களாய்த் திரிகிறார்களே, இவர்களாலேயே பலவித நோய்களும் உலகில் பரவுகின்றன" என்று யோசித்துக்கொண்டே இருந்தாள்.

## II

பொழுதும் போய்விட்டது. இரவும் வந்தது. மாசிலாமணி முதலியார், பார்வதி, மணி, ராதா ஆகிய நால்வரும் வேலையாட்கள் பரிமாறச் சாப்பிட்டுவிட்டுப் படுக்கப்போனார்கள். வேலைக்காரரும் தத்தம் அலுவல்களை முடித்துவிட்டு அவரவர் வீட்டிற்குச் சென்றனர்.

பார்வதியம்மாளுக்குச் சற்று நேரத்திற் கெல்லாம் சகிக்க இயலாத வயற்றுவலி உண்டாயிற்று. பெண் துணை ஒருவருமில்லை. பார்வதியம்மாள் கணவனை நோக்கி, "மீனாக்ஷியை அழைத்து வாருங்கள்" என்றாள். அவரும் சீக்கிரமாயோடி மீனாக்ஷி வீட்டின் வாயிற்படியில் நின்றார். வீட்டுக் கதவு தாளிடப்பட்டிருந்ததால், ஜன்னலில் அருகில் நின்று உள்ளே யாராகிலும் விழித்துக் கொண்டிருக்கிறார்களா, தூங்கிவிட்டார்களா என்று பார்த்தார்.

சிறு கூடத்தில் சொல்ப சாமான்களே யாயினும் ஒழுக்காகவும் சுத்தமாகவும் வைக்கப்பட்டிருந்தன. ஒரு சிறு முக்காலியின் மேல் விளக்கொன்று பிரகாசித்துக்கொண்டிருந்தது. அதனருகில் மீனாக்ஷி தன் மூன்று குமாரர்களுக்கும் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள். அவளுடைய மகள் லக்ஷ்மி கையில் ஒரு புத்தகத்தை வைத்துத் தனக்குத் தானே படித்துக் கொண்டிருந்தாள். மூன்று வயதுள்ள பெண்குழந்தை மட்டும் படுத்துத் தூங்கி விட்டது. இவற்றைக் கண்ட முதலியார் அப்படியே சில நிமிஷம் ஸ்தம்பித்து நின்றுவிட்டார். பிறகு, தன் மனைவியின் நினைவு வர கதவைத் தட்டினார்.

உள்ளிருந்த மீனாக்ஷி கையில் விளக்குடன் கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்து, முதலியாரை நோக்கி, 'என்ன அவசரம் தாங்கள் என் வீடு நோக்கி இந்நேரத்தில் வந்தது?' எனக் கேட்டாள். முதலியார் தன் மனைவி வயற்று வலியால் துன்புறுவதால் உதவிக்கு வரவேண்டுமெனக் கூப்பிட்டார். மீனாக்ஷி தன் குமாரத்தியைக் கூப்பிட்டுக் கதவை மூடிக்கொண்டு ஜாக்கிரதையாக



யிருக்கும்படி சொல்லிவிட்டு, முதலியாருடன் புறப்பட்டு அவர் வீட்டுக்குச் சென்று அவர் மனைவிக்கு வேண்டிய உபசாரங்களெல்லாம் மனமாரவும் பரிவாகவும் செய்தாள். மீனாக்ஷி வந்த சற்று நேரத்திற் கெல்லாம் பார்வதியம்மாள் வயிற்றுவலி நின்று சௌக்கிய மடைந்தாள். மீனாக்ஷியும் தன் வீடு போய்ச் சேர்ந்தாள்.

## III

மீனாக்ஷியின் கணவன் சாமிநாத முதலியார் மாதம் 15 ரூபாய் சம்பாதித்துக்கொண்டிருந்தார். அச்சொல்ப வருமானத்திலேயே கணவனும் மனைவியும் ஐந்து குழந்தைகளுடன் சந்தோஷமாகவும் அமைதியாகவும் காலம் கழித்து வந்தனர். அவ்வமைதியும் நீடித்து நிற்காமல் மீனாக்ஷியின் கணவன் நோய்வாய்ப்பட்டார். அச்சமயத்திலும் மீனாக்ஷி மனோதைரியத்தை விடாமல் கணவனுக்கும் குழந்தைகளுக்கும் வேண்டியதைத் தன் கையுழைப்பினால் சம்பாதித்துப் போஷித்துவந்தாள். சிலநாளில் மீனாக்ஷியின் கணவன் மீனாக்ஷியையும் ஐந்து குழந்தைகளையும் இவ்வுலகையும் விட்டுப் பிரிந்தார். அச்சயம் மீனாக்ஷியின் துயரம் கரை கடந்தது. துயரத்தால் அடையும் பயன் யாதொன்று மிலதென்பதையும், தன் மக்களுடைய நிலைமையையு முணர்ந்து மீனாக்ஷி தன்னைத் தானே தேற்றிக்கொண்டு, தன் மக்களை நல்வழிப் படுத்துதலே கடவுள் தனக்கிட்ட கட்டளை என்று நினைத்து, யாரேனும் நெல் குத்தவோ, மாவரைக்கவோ கூப்பிட்டால் அவர்களிட்ட வேலையைச் செய்து அதனால் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டு காலம் கழித்தாள். ஒரு நிமிஷத்தையும் வீணாக்காமல் உழைப்பதிலும், தன் சிறுவர்களுக்கு உடை தைப்பதிலும், அவர்களுடம்பையும் ஆடைகளையும் சுத்தமாக வைத்திருப்பதிலும், அவர்களுக்கு நற்புத்தி, கடவுள்பக்தி முதலியவைகளைப் போதிப்பதிலும் மீனாக்ஷி காலம் கழித்தபடியால், பார்வதியம்மாள் வேலையில்லாமல் வாயாடி வீண் பொழுது போக்கக் கூப்பிட்டதற்கு வர இயலவில்லை.

மீனாக்ஷி எவ்வளவு அமைதியாகக் காலம் கழித்த போதிலும் தன் மகளுக்கு ஏற்ற விடமாகப் பார்த்துக் கலியாணம் செய்து கொடுப்பதெப்படி யென்ற விசனம் அவளுக்கு உள்ளுக்குள்ளேயே இருந்தது. இக்காலத்தில் அநேகர் பெண் கொள்வதென்றாலும், கொடுப்பதென்றாலும், தனவந்தர்களையே நாடிச் செல்கின்றனரே தவிர, குணம், நடவடிக்கை முதலியவைகளைக் கவனிப்பதில்லை. ஏழை வீட்டுப் பெண் நன்னடக்கை நற்குணம் அமையப் பெற்றிருப்பினும், 'என் பிள்ளை அவர்கள் வீட்டு வாயிற் படியேறவே அவர்கள் லாயக்கில்லை. அவனுக்கேற்ற மகாராஜர் வீட்டில்தான் பெண் கொள்வோம்' என்கிறார்கள். பணக்காரரென்றாலோ, 'ஓ! அவரா! அவர் பெரிய மனிதராயிற்றே அவர்களுக்கு அறுபது லக்ஷம், எழுபது லக்ஷம் சொத்திருக்கிறதே. அவர் பெண்ணா? அம்மா! அவர்கள் நமக்குக் கொடுப்பார்களா? கொடுத்தால் நம்முடைய அதிர்ஷ்டமே என்பார்' சிலர். (என்ன அதிர்ஷ்டமோ மணமான பின்னால் தான் தெரியும்.) பெண்ணின் குணத்தையோ, முக வசிகரத்தையோ, தாய் தந்தையரின் குணத்தையோ குறித்துக் கவலைப்படமாட்டார்கள். இவ்விதமான உலகத்தில் ஏழை மீனாக்ஷி தன் குமாரத்திக்கு ஏற்ற வரன் கிடைக்காததால் துயரப்பட்டது வியப்பன்றே.

## IV

ஒரு நாள் மாசிலாமணி முதலியார் தன் மனைவியை நோக்கி, 'பார்வதி, மீனாக்ஷிக்கு படிக்கத் தெரியாதெனச் சொன்னாயே. நான் அவளைக் கூப்பிட அவள் வீட்டிற்குப் போன சமயம் தன் குமாரர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள். அவள் மகளுக்கும் படிக்கவும் தைக்கவும் கற்றுக்கொடுத் திருக்கிறாள். அவள் வீடு பார்ப்பதற்குச் சுத்தமாயிருக்கிறது' என்றார்.

பார்:—அப்படியா! எனக்கு இத்தனை நாள் தெரியாது. அப்படியானால் நம் சுப்பிரமணியனுக்குச் சொல்லித்தரும் உபாத்தியாயரிடமே சொல்லி அந்தப் பிள்ளைகளுக்கும் சொல்லித் தரும்படி சொல்லலாம். அப்பிள்ளைகளைப் பார்க்கும் யாவருக்குமே அவர்களிடம் பக்ஷம் உண்டாவது சகஜமாயிருக்கிறது. பழக்கும் விதத்திலேயே முகப்பொலிவும், நற்குணமும், பிறரிடம் காட்டும் மரியாதையும் அவர்களிடம் உண்டாயிருக்கின்றன. மீனாக்ஷிக்குப் பெண்ணைப் பற்றிய கவலை அதிகமாயிருப்பதாகத் தெரிகிறது. நான் அப்பெண்ணைப் பார்க்கவேயில்லை.

மாசி:—நான் அன்று அப்பெண்ணை நன்றாகப் பார்த்தேன். அன்றே என் மனதில் ஒரு எண்ணம் உதித்தது. உனக்குச் சொல்லலாமென்றால், நீ என்ன சொல்லுவாயோ என்று நினைத்துச் சொல்லவில்லை.

பார்:—என்ன தாராளமாகத்தான் சொல்லுங்கள். நான் இதுவரையும் உங்களுடைய வார்த்தையைத் தட்டி நடந்ததுண்டா?

மாசி:—நம்முடைய சுப்பிரமணிக்கு அப்பெண்ணையே விவாகம் செய்யலாமென யோசிக்கிறேன். பணக்காரர் வீட்டுப் பெண்கள் அநேகம் கிடைத்தபோதிலும், நற்குணம், நன்னடக்கை, அடக்கம், கல்வி இவையெல்லாம் அமைந்த பெண் அகப்படுவது தான் அருமை. நம் ராதாவையும் அவளுடைய மூத்த பிள்ளையைப் படிக்க வைத்து அவனுக்கே கொடுக்கலாமென யோசிக்கிறேன். அவள் பிள்ளைகளுக்கும் பெண்ணுக்கும் இருக்கும் முக வசீகரம் நான் பார்த்த யாருக்குமில்லை. 'தாயைப் பார்த்துப் பெண்ணைக் கொள்' என்றபடி, மீனாக்ஷியுடன் நாம் பழகி அவள் குணத்தை நன்கு தெரிந்திருக்கிறோம். உன் யோசனை என்ன?

பார்:—எனக்கும் சம்மதம்தான். இன்று பணக்காரராயுள்ளாரே நாளை ஏழையாய் விடுகிறார்கள். இன்று ஏழையாயுள்ளாரே நாளைப் பணக்காரராயிருக்கிறார்கள். ஆகையால், குணத்தையே நாம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டும்.

சிவமயம்.

சிவ சண்முக மெய்ஞ்ஞான தேசிகன் றிருவடி வாழ்க.

# சித்தாந்தப் பகுதி

## சமய நுண் பொருள்கள்

புலமிகு நக்கீரன் பொருணூ லுரைநேர்
புலவன்றுள் யாஞ்சூடும் போது.

தோற்றுவாய் :

நல்லொழுக்கத்தையும் நாகரீகத்தையும் வளர்த்து இன்பங்களை அடைதற்குரிய மக்கட் பிறப்பினர் இன்றியமையாது ஆராய்ந்தறிதற்குரிய பொருள்கள் இருவகைப்படும். அவை புறமும் அகமும் எனப்படுவன.

இவற்றுள் புறப்பொருள்களைப்பற்றிய ஆராய்ச்சியாவது, நம் அறிவை விளக்குதற்குரிய கருவிகளாயுள்ள மெய், வாய் முதலிய புற இந்திரியங்களால் உற்றும் (ஸ்பரிசித்தும்), சுவைத்தும், கண்டும், முகர்ந்தும், கேட்டும் அறியப் படுவனவாய்ப் புறத்தில் (வெளியில்) உள்ள இவ்வுலகமாகிய பரும் பொருள்களை அவற்றின் இயல்பு, அமைப்பு, தொழிற்படும் முறை, பயன்படும் வகை முதலிய பலவற்றால் ஆராயும் ஆராய்ச்சியாகும்.

இவ்வாராய்ச்சி கண் முதலிய இந்திரியங்களையும் எடுத்தலளவை, முகத்தலளவை முதலியவாசப் பல திறப்பட்ட சூட்டின் நிலையறியும் கருவி (Thermometer) தூரதிருஷ்டி கண்ணாடி (Telescope) முதலியவற்றையும் கருவியாகக் கொண்டு செய்யப்படும்.

இனி, அகப் பொருள்களைப் பற்றிய ஆராய்ச்சி, இவ்வாறு புறப்பொருள்களைப் பற்றினதாகாமல், இந்த ஆராய்ச்சியைச்செய்யும் அறிவுடைய உயிரும், அவ்வுயிர் பொருள்களை அறிதற்குத் துணையாக அதன் அறிவை விளக்கும் கருவிகளாகிய இந்திரியம் கரணம் முதலிய தத்துவங்களும் ஆகிய அகத்திலுள்ள நுண்ணிய பொருள்களைப்பற்றி அவ்வாறு ஆராய்வதாகும். உயிரினும் மிக நுண்ணிதாய் இயற்கைப் பேரறிவுடையதாய், புறம், அகம் ஆகிய எவ்வகைப் பொருள்களையும் கலந்து நின்று தொழிற்படுத்தும் பொருளாகிய கடவுளைப்பற்றி ஆராய்தலும் அகப் பொருளைப்பற்றிய ஆராய்ச்சியிலேயே அடங்கும்.

இவ்வாராய்ச்சிக்குக் காட்சியளவை, கருதலளவை, உரையளவை என்பனவே கருவிகள். இவ்வளவையினியல்பு கீழ் சுருக்கமாக விளக்கப்படும்.

இவ்விருவகையுள் பின்னையதாகிய அகப்பொருள் ஆராய்ச்சி நம் பெரியோர்களால் சுத்தமானதாய், துக்கக் கலப்பு இல்லாததாய், நிலைத்ததாயுள்ள பேரின்பத்திற்குச் சாதனம் (கருவி) எனக் கொண்டு வளர்க்கப்பட்டு வந்தது. அவர்கள் புறத்துப் பொருள்களைப்பற்றி ஆராய்ந்தாராயினும்,அவ்வாராய்ச்சியை இக்காலத்தில் மேனாட்டார்கள் செய்து வருவது போல முக்கியமாகக் கருதிச் செய்யாமல்,அதனைத் தங்கள் அகப்பொருளாராய்ச்சிக்கு அங்கமாகவும் கருவியாகவுமே கருதி யாராய்ந்து வந்தார்கள்.

இத்தகைய ஆராய்ச்சியின் பயனாக அவர்கள் கண்ட பதார்த்த உண்மையும், இயல்பும், சாதனமும், பயனுமாகிய இவற்றின் நியமனம் அல்லது ஒழுங்கே 'சமயம்' ஆகும்.

இச்சமய உணர்ச்சி இக்காலத்தில் மிகவும் அருகி இருத்தலோடு, அவ்வுணர்ச்சியை உண்டு பண்ணும் நூல்களும் உணர்தற்கரியனவாக இருத்தல் பற்றிக் கற்கப்படாதனவாய் உள்ளன. ஆதலின், சமய சாத்திரங் கற்போர்க்கும் மற்றையோர்க்கும் உபயோகமாகும் பொருட்டுச் சமய நூல்களில் உள்ள நுணுகிய விஷயங்களையும், சில ஆராய்ச்சி முடிபுகளையும் ஒருவாறு விளக்கலாம் என்ற நோக்கத்துடன் இக்கட்டுரை கிளம்புகிறது.

### 1. அளவையி னியல்பு


அளவையாவது, பொருள்களை அறிந்து வரும் நம் அறிவு (ஆன்மசித்சத்தி) அப்பொருள்களை அறிதற்குக் கருவியாக நின்று அப்பொருள்களை நம்மறிவிற்கு விளக்கி வைக்கும் பொருள்

---

(இல்வாழ்க்கைப் பகுதி 83-ம் பக்கத் தொடர்ச்சி.)

சில நாளைக்குப் பிறகு மீனாக்ஷியின் குமாரத்தியை மாசிலாமணி முதலியாருடைய பிள்ளைக்கும், மாசிலாமணி முதலியாருடைய பெண்ணை மீனாக்ஷியின் குமாரனுக்கும் கொடுத்து விவாகம் செய்தார்கள். லக்ஷ்மி தன் மாமன், மாமி, கணவன் முதலியவரிடம் பணிவாகவும் வேலையாளரிடம் அன்பாகவும் அவர்கள் மனம் களிக்க நடந்து கொண்டாள். சில நாளில் மீனாக்ஷியும் யாதொரு கவலையுமின்றித் தான்பட்ட சிரமம் தீரத் தன் கணவன் சென்ற இடம் சேர்ந்தாள்.





129874

நீயும் உன்னுடைய சகோதரனும் சிநேகர்களாக இருக்கும் போது அவனுடைய செய்கைகள் உன் மனதிற்கு எட்டுவதில்லை. சச்சரவு நேரிட்டால் அவனுடைய போக்கு வரத்துக்களெல்லாம் வேவுக்காரனைப்போல உனக்கு நன்றாகத் தெரிகின்றன. தாகரே

சிநேகத்தின் ரகசிய வசீகரணந்தான் என்ன? அதனுடைய இயக்கத்தால் சோம்பலும், கோழைத் தனமும், பற்றில்லாமையும் நீங்குவதோடு ஒரு மனிதன் மற்றவர் நிமித்தம் புத்தியுள்ளவனாகவும்,ஊக்கம் உள்ளவனாகவும், ஸ்திரமானவனாகவும் மாறிவிடுகிறான். தாகரே

உன்னுடைய நல்ல அதிருஷ்ட காலத்தில் தாழ்மையாக இரு. உன்னைவிடக் குறைவான அதிருஷ்டவாளிகளிடத்தில் (தகுதியற்றவர்களாக இருந்தாலும்) நல்லவனாக இரு. ஆசையற்றதனால் உண்டான நற்குணங்கள், அதிருஷ்ட வசத்தால் வந்த ஜயம், மூதாதைகளால் வந்த அந்தஸ்து இவைகளையுடைய உனக்கு மற்றவர்களிடம் அவமரியாதையாக இருக்க என்ன அதிகாரம் உண்டு என்று நினை. தாகரே

திறமாயும், உற்சாகமாயும், உண்மையாயுமுள்ள ஊக்கத்திற்குத் தகுதியான பிரதி வேறு ஒன்றும் கிடையாது. டிக்கன்ஸ்.

எந்த மனிதனுக்கும் மனத்தளர்ச்சி யடைதல் அழகல்ல. ஆனால், எவ்வித கடுமையான பகைகள் வரினும் சாகுமளவும் மிகவும் யோக்கியமான வழியைப் பின்பற்றுவதே அழகு. டென்னிஸன்.

ஒரு முட்டாள் இடத்தையும் காலத்தையும் குறைக்க விரும்புகிறான். ஒரு புத்திமான் இரண்டையும் நீடிப்பிக்க விரும்புகிறான். ரஸ்கின்.

பேராசையுள்ளவனும், ஆழ்ந்த கருத்துள்ளவனும் ஒன்றையும் உரிமை வழியாய் அனுபவிக்க முடியாது. அவர்கள் அழிக்கலாமே ஒழிய ஒன்றையும் அடைய முடியாது. ரஸ்கின்.

வாழ்க்கைக்குக் கெடுதலை விளக்ககூடிய துக்கத்தை ஒழித்து உற்சாகத்தைப் பயிர் செய்.
ஷேக்ஸ்பியர்.

உண்மையான வாழ்க்கையில் வினையும் விளையாட்டும், மாட்சிமையும் கோமாளித்தனமும், பரிகாசமும் இரக்கமும் ஒன்றாகக் கலந்திருக்கின்றன.
லாங்பெல்லோ.

---

(சித்தாந்தப் பகுதி 84-ம் பக்கத் தொடர்ச்சி)

வை=அள + ஐ அள=அளத்தல், அறிதல். ஐ= கருவி என்ற பொருளைத் தருதற்கு வந்த ஒரு விகுதி.

நம் அறிவு இயல்பாக விளங்கி எல்லாப் பொருளையும் அறிவதன்று. அது மலம் என்று சொல்லப்பட்ட ஒரு அருவ (உருவமில்லது) மாகிய பொருளால் மறைக்கப்பட்டுள்ளது. ஆதலின்,அது இருளில் உள்ள நம் கண்ணொளி போன்று தானே விளங்கி ஒரு பொருளை அறிதற்குரிய ஆற்றல் (வன்மை) உடையதன்று. ஆகவே, அது விளங்கி ஒரு பொருளை அறிய வேண்டின், இருளில் உள்ள கண் எப்படி விளக்கு முதலிய பொருள்களைத் துணையாகக் கொண்டே யறியுமோ அதுபோல் தானும் தன்னை விளக்குதற்குரிய தத்துவங்கள் முதலிய துணைகளைக் கொண்டே அறியும். இவ்வாறு பொருள்களை நம் உயிர் அறிந்து வரும் போது அதற்கு உணர்ச்சிகள் எவ்வெக் கருவிகளால் உண்டாயினவோ அக் கருவிகள் அளவை என்று சொல்லப்பெறும். இப்பொழுது நாம் ஒரு குடத்தைக் காணுங்கால் அக்குடம் நம் அறிவில் தட்டி ஒரு விளக்கத்தை உண்டு பண்ணுகிறது. அவ் விளக்கந்தான் குடத்தின் உணர்ச்சி எனப்படும். இவ்வுணர்ச்சியை உண்டு பண்ணுதற்கு நமது கண் கருவியாக உள்ளது. ஆதலின்,இங்குக் கண் அளவை எனப்படும். இப்படியே, ஓசையை யறிதற்கண் செவி கருவி யாதலின், அதுவும் அளவையாகும். இவைபோல ஏனைய மெய்யும், வாயும், மூக்கும் ஸ்பரிசம்,சுவை, நாற்றம் என்னும் இவற்றை முறையே அறியும் கருவிகளாதலின், அளவைகள் எனப்படும். மறைந்த இடத்துள்ள மலரை அதன் வாசனையைக் கொண்டு அறியும் போது அவ்வாசனையே அளவையாகும். அன்றியும், நூல்களால் கடவுள் உண்டென் றறியுமிடத்து அந்நூலே அளவையாகும். (தொடரும்)

திரு. க. வச்சிரவேலு முதலியார், பி. ஏ.

# சமயப் பகுதி

## ஈசனும் ஈசுவர பக்தியும்

பூக்களிற் சிறந்த தாமரை மலரில் வாழும் பிரமதேவனால் சிருஷ்டிக்கப்பட்ட இப்பூவுலகின்கண் வாழும் ஒவ்வொருவரும், அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூபியாயும், யாவருடைய கோரிக்கைகளையும் ஈடேற்றும் கருணாநிதியாயும் விளங்கும் கடவுளை வாழ்த்தி வாழவேண்டிய தத்தியாவசியம். ஆனால் தற்காலத்திலோ கடவுளும் சமயமுமில்லையென்று துணிந்துகூற ஒரு சிலர் முன்வந்துவிட்டனர். இவையெல்லாம் கலியுகத்தின் கொடூரமென்பதற்கு யாதொரு ஐயமுமில்லை. உலகத்திற்றோன்றிய மக்கள் ஒவ்வொருவரும் இத்தகைய கொடூர பழக்க வழக்கங்களில் ஈடுபடாமல் எல்லாம் வல்ல ஈசனிடத்தில் தங்கள் மனதைச் சிறிது செலுத்தி வாழ்வதே மேன்மையினும் மேன்மையாகும்.

இனி நாம் வழிபடவேண்டிய ஈசன் எத்தன்மை வாய்ந்தவரென்று சற்று ஆராய்வோம். ஈசன் ஒருவரேயாயினும் அவருடைய திருநாமம் அநந்தம். அவருடைய சொருபத்தை நாம் அறிந்து கொள்ளும் பொருட்டு ஏற்பட்ட ரூபமும் அநந்தம். நாம் எந்தெந்த ரூபங்களால் அவரை அழைக்க விரும்புகின்றோமோ அவ்வந்த நாமரூபங்களில் அவரைக் காணலாம். வீட்டின் ஒரே எஜமானன் ஒருவனுக்குச் சிநேகனுயும், ஒருவனுக்குத் தந்தையாயும், மற்றொருவனுக்குச் சகோதரனுயும் இவ்வாறு பல பிரகாரங்களிற் காணப்படுவது போல, ஒரே ஈசன் ஒவ்வொரு பக்தனுக்கும் அவ்வவருக்கேற்பக் காட்சி கொடுக்கின்றார். ஒரே தங்கத்தினால் வெவ்வேறு வடிவமும் பெயருமமைந்த பலவகை நகைகளைச் செய்வது போல ஒரே கடவுளை வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு தேசங்களில் வெவ்வேறு நாமரூபங்களால் உபாசிக்கின்றார்கள். இக்கடவுளால் ஆகாத காரியமொன்றுமில்லை. அவர் ஒரு ஊசியின் காதினூடே ஒரு யானையையும் புகுத்துவார். அவர் ரூபியாயும், அரூபியாயும் ரூபாரூபங்களைக் கடந்தவராயும் விளங்குகின்றார். இன்னும் அவர் எப்படிப்பட்டவரென்று நமது வாக்கினால் வர்ணிக்கமுடியாது. சமுத்திரத்தையே பார்த்திராத ஒருவனுக்குச் சமுத்திரத்தைப் பார்த்த ஒருவன் அதை வர்ணிக்க வேண்டுமானால் "அது பெரும் நீர்ப்பரப்பு, விரிந்த வாரிதி, எங்கு பார்க்கினும் ஒரே ஜலராசி என்று மாத்திரம் சொல்லக்கூடியதுபோல பிரமத்தையே பார்த்திராத ஒருவனுக்குப் பிரமத்தைப்பார்த்த ஒரு பக்தன் "பிரமம் எங்கும் பிரமமே" என்று மாத்திரமே கூறுவான்.


இனிக் கடவுளுக்கும் மனிதனுக்குமுள்ள சம்பந்தத்தைச் சற்றுக் கவனிப்போம். கடவுளுக்கும் மனிதனுக்குமுள்ள சம்பந்தம் காந்தத்திற்கும் இரும்பிற்குமுள்ள சம்பந்தத்தை ஒத்தது. அப்படியாயின் கடவுள் ஏன் மனிதரைக் கவரவில்லை? சேற்றில் அழுந்திக் கிடக்கும் இரும்பு காந்தத்தின் கவர்ச்சியால் இழுக்கப்படாததுபோல மாயையில் மூழ்கிக் கிடக்கும்மனிதனைக்கடவுள் கவர்வதில்லை. எவனொருவன் ஈசனைத்தன் அன்பார்ந்த ஆப்தனெனவும், தனக்குச் சொந்தமானவனென்றும் அறிந்து, அப்பெருமானைக்காணவேண்டுமென்ற அவாவுடன், களங்கமற்ற பாலகன் போல, உள்ளன்புடன் தன் மனதில் கரைந்துருகின்றானோ அவனுக்கே பகவான் தன் திவ்விய சொரூபத்தை அளிக்கின்றார்.

இத்தகைய கருணாகரமூர்த்தியைத் தரிசிப்பதெங்ஙனமென இனிச் சற்றாராய்வோம். ஆழ்ந்த சமுத்திரத்திலுள்ள முத்தையடைய வேண்டுமாயின் மிகவும் சிரமப்பட்டு உயிரையும் பொருட்டாக எண்ணாது முழுகவேண்டுவதுபோல, பகவானைத்தரிசிக்கவேண்டுமாயின் விசேஷப் பிரயாசப்பட்டு இடைவிடாத யோகாப்பியாச முதலிய சாதனங்களையனுசரிக்க வேண்டும். ஆனால் இக்கலியுகத்திற்கேற்ற சிறந்த முக்திசாதனம் யாதெனின் பரந்தாமனுடைய திருநாமத்தை இடைவிடாமல் உச்சரிக்கும் பக்தியோகமேயாகும். ஒரு அரசனைத் தரிசிக்க அவாக் கொள்ளுகிற ஒருவன் முதலில் அவ்வரசனுக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்களின் தயவைப் பெறவேண்டிய தவசியமாவது போல, பகவானைத் தரிசிக்க விரும்பும் பக்தனும், பக்தியோக முதலிய சாதனங்களை அனுசரிக்கவேண்டும். கஞ்சாவென்னுஞ் சொல்லை உச்சரித்த மாத்திரத்தில் ஒருவனுக்கு மயக்கம் ஏற்பட்டுவிடாது. மயக்கம் உண்டாகவேண்டுமானால் கஞ்சாவை அரைத்துத் தண்ணீரில் கலந்து குடிக்கவேண்டும். அதுபோல "ஈசுவரா! ஈசுவரா!" என்று உரக்கக் கத்துவதில் பிரயோசனமில்லை. பக்தியோகத்தைச்சிரமத்துடன் கைப்பிடித்தொழுகினாலொழியப் பகவத் தரிசனம் கிட்டாதென்பது திண்ணம். நாம் பகவானைத் தரிசிக்கும் போதெல்லாம்நமக்குப்பக்தியுண்டாகவேண்டுமென்று பகவானைப் பிரார்த்தனை செய்ய வேண்டும். அகல்யைக்குச் சாபவிமோசனம் ஆனபோது ஸ்ரீராமச்சந்திரர் அவ்வம்மையை நோக்கி, "நீ கோரிய வரத்தை என்னிடம் கேட்கலாம்" என, அவ் ரிஷி பத்தினி, "ராமா, அடியாளுக்கு வரமளிக்கவேண்டுமென்ற விருப்பம் உனக்கிருந்தால் இந்த வரம் தந்தால் போதும். அதாவது, எனக்குப் பன்றி ஜன்மம் வாய்ப்பினும் கேடில்லை. நின் தாட்டாமரைகளில் மாத்திரம் அளவிறந்த பக்தி எனக்கு உண்டாகுமாறு எனக்கு அருள்புரிய வேண்டும்" என்று விடை பகர்ந்தாள். ஆகையால் பக்திமார்க்கமே பகவானை அடைவதற்கோர் சிறந்த மார்க்கம். ஆசையெனும் சண்டமாருதத்தால் இருதயம் மோதப்பட்டிருக்கிறவரையில் ஒருவனுக்கு இப் பக்தியோகம் கிட்டுவது அரிதென்பதற்கு ஐயமில்லை.

இனி இத்தகைய பக்தி எவ்வெவருக்கு எவ்வெக் காலங்களில் இலகுவில் கிட்டுமெனச் சற்றுக் கவனிப்போம். ஒவ்வொருவரும் இளமையிலேயே ஈசன்பால் மனதைச் செலுத்துவது சாலவும் நன்று. செடியில் வளையாதது மரமாய் வளையாது. இளமையில் ஒருவனுடைய மனதைச் சுலபமாய்க் கடவுள்பால் திருப்பலாம். ஏனெனில், அவன் மனம் முழுவதும் அவனுடைய சுவாதீனத்திலேயே யிருக்கிறது. ஆனால் வயதான ஒரு கிரகஸ்தனுக்கு அப்படியல்ல. அவன் மனம் பாதி மனைவியிடம் செல்லுகிறது. குழந்தை ஒன்று பிறந்துவிட்டால் அது மற்றொரு கால் பங்கை இழுத்துவிடுகின்றது. மிஞ்சியிருக்கிற கால்பாகமும் பந்து, மித்திரர், பேர், புகழ், உத்தியோகம், அன்ன வஸ்திரம் முதலியவற்றின்மேல் சென்று விடுகின்றது. ஆகையால் தான் இளமையில் ஒருவனுடைய மனம் ஈசனை எளிதில் அடையக்கூடியதாகயிருக்கிறது.

இவ்வாறு பக்திவலையி லகப்பட்ட ஒருவனுடைய நிலை இத்தன்மையதென ஆயிரம் நாவுபடைத்த ஆதிசேஷனாலும் கூறமுடியாது. ரசவாதத்தால் தங்கமயமாய் மாறின இரும்பு பூமியின் கீழ் புதைக்கப்படினும், குப்பையுடன் குப்பையாய் எறிப்பினும், எப்பொழுதும் தங்கமாகவே இருக்குமே யல்லாது பழைய நிலையாகிய இரும்பின் நிலையையடையாது. பகவானுடைய திருவடிகளை மனதில் பதித்த ஒருவனுடைய நிலையும் அவ்வாறே. அவன் ஜனங்கள் ஆரவாரம் நிறைந்த உலகிலிருப்பினும், நிர்மானுஷ்யமான ஆரணியத்திலிருப்பினும் ஒருகாலும் எதனாலும் களங்கமடைய மாட்டான். இத்தகைய பக்தர்களே அமலனைக் காண பக்குவமடைந்தவர்கள். சர்க்கரையையும் மணலையும் ஒன்றாய்க் கலந்து வைத்த போதிலும் எறும்பானது மணலைத் தள்ளிச் சர்க்கரையைக் கொண்டுபோகிறது. அது போல பக்தர்கள் கெட்டதைத் தள்ளி நல்லதைக் கைக்கொள்ளுகிறார்கள். பக்தி எங்கே உதயமோ அங்கே அன்பு உதயமாகிறது. அன்பு எங்கே உதயமோ அங்கே சாந்தம் உதயம். சாந்தம் எங்கே உதயமோ அங்கே சக்தி உதயம். சக்தி எங்கே உதயமோ அங்கே ஞானம் உதயம். ஞானம் எங்கே உதயமோ அங்கே கிருபை உதயம். கிருபை எங்கே உதயமோ அங்கே கடவுள் உதயம். கடவுள் உதயம் பெற்றவர் கடவுளே ஆகிறார். ஆகையால் ஒவ்வொரு மக்களும் அவனருளாலே அவன் தாள் வணங்கி வாழ்வதே சாலவும் நன்று.

திரு, P. பொன்னுசுவாமி,
செங்குந்தர் பெரிய தெரு,
திருநெல்வேலி.




ஆங்கிலேயர்:—பல்வலிக்கு ஒரு அருமையான மருந்து கண்டு பிடித்து விட்டேன். நேற்றெல்லாம் பல்வலியால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தேன். சாயந்திரம் வீட்டிக்குச் சென்றேன். என் பெண்சாதி என்னைக் கட்டி முத்தமிட்டாள். உடனே பல்வலி போய்விட்டது.

நண்பர்:—எனக்குக்கூட பல்வலி ஆரம்பித்திருக்கிறது. உங்கள் பெண்ஜாதி வீட்டில் தானே இருப்பாள்.

*

ஒரு "அசல் நாட்டுப்புறத்தான்" கட்டுச் சோற்று மூட்டையுடன் ஒரு ரயில் வண்டியில் ஏறினான். வண்டியில் இடமில்லாமற் போகவே தன் கையிலிருந்த சோற்று மூட்டையை "அபாய அறிவிப்பு" சங்கிலியில் மாட்டித் தொங்கவிட்டு ஒரு பக்கமாகக் கீழே உட்கார்ந்து கொண்டான். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் வண்டி நின்று விட்டது. ரயில்வே கார்ட் உடனே வந்து சோற்று மூட்டையையும் அதனுடைய சொந்தக்காரனையும் பிடித்துக் கொண்டான்.

கார்ட்—அடே, சோற்று மூட்டையை அங்கே ஏனடா தொங்க விட்டாய்?

நாட்டான்:—சோற்று மூட்டைக்கு யாதொரு அபாயமும் வரக்கூடாதென்று நான் அங்கே தொங்கவிட்டேன்.

* *

உபாத்தியாயர்:—இரண்டாம் வேற்றுமையின் உருபு என்ன?

பையன்:—"ஐ"

உபா:—உதாரணம் சொல்லு.

பையன்:—கழுதை, குதிரை, ஒட்டை.

உபா:—சரி, மூன்றும் வேற்றுமையின் உருபு என்ன?

பையன்:—ஆல், ஒடு, உடன்.

உபா:—உதாரணம்?

பையன்:—நெட்டால், நேபால், கொல்லங்கோடு, திருச்செங்கோடு, திருடன், குருடன்.

* * *

சிநேகர்:—மதிப்புரைக்கு வந்த புஸ்தகத்தை மதிப்புரை எழுதியான பிறகு வாசிக்கிறீர்களே? அது என்?

உதவி பத்திரிகாசிரியர்:—மதிப்புரை எழுதுவதற்கு முன் புஸ்தகத்தை வாசித்தால் மனதுக்குக் கஷ்டமேற்பட்டு விடுகிறது. பிறகு மதிப்புரை எழுதுவதென்றால் மனதுக்கு விரோதமான செய்கையைச் செய்வதாயிருக்கிறது. அதற்காகவே நான் மதிப்புரையை முதலில் எழுதிவிட்டுப் பிறகு புஸ்தகத்தைப் படிக்க ஆரம்பிக்கிறது.

* * *

நண்பர்:—நலக்டர் பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டாயே! அவள் உன் சொற்படி நடக்கிறாளா?

மற்றவர்:—சில சமயங்களில் மாத்திரம் என் சொற்படி நடக்கிறாள்.

நண்பர்:—எந்த சமயங்களில்?

மற்றவர்:—"என்னடி, உன்னோடு மாரடிக்க என்னாலாகாது. எங்காவது போ" என்றால், உடனே எங்காவது போய்விடுகிறாள்.

* *

கள்ளுக்கடைசாமி:—ஜாதி வித்தியாசமே இருக்கக் கூடாதென்று அளக்கிறீர்: கள்ளுக் கடைகளையும் எடுத்து விடவேண்டுமென்கிறீர்; கள்ளுக் கடைகளை எடுத்துவிட்டால் ஜாதி வித்தியாசம் இன்னும் அதிகமாகும்.

சீர்திருத்தக்காரர்:—என்னவோய் உளறுகிறீர்!

க. சாமி:—கள்ளுக் கடைகளையும், காப்பிக் கடைகளையும் மூடிவிட்டால் தெரியும் சமாசாரம். இப்போது ஜாதிவித்தியாசம் இல்லாத இடம் இவை இரண்டுந்தான். ஒரு தோட்டி குடித்துவிட்டுப் போன குடுவையை யார் குடிக்கிறார்கள் தெரியுமா?

* * *

உபா:—சோமா, நீ மிடா பார்த்திருக்கிறாயா?

சோமன்:—ஓ, பார்த்திருக்கிறேன்.

உபா:—எப்படி இருக்கும்?

சோ:—உங்கள்...வயிற்...றைப்...போல்... இருக்[கும்.

* *

ஒருவன்:—ஐயா, உங்கள் மைத்துனருக் கெங்கே வேலை?

நண்பன்:—ரெயில்வேயில் வேலை.


ஒரு:—என்ன வேலை?

நண்:—ரெயில் ஓடும்போது நிற்பதும், நிற்கும்போது ஓடுவதும் வேலை.

ஒரு:—என்ன ஓடுகிறதும், நிற்பதும் ஒன்றும் விளங்க வில்லையே?

நண்:—அடே வம்பே, வெளிப்படையாகச் சொல்லவேண்டுமா? போண்டா, முருக்கு, மசால் வடை வியாபாரம்.






## திருமண நன்கொடைகள்

மலையாளம் தாடிச்சண்டையில் விலக்கப்பட்ட பழம்பாலக்கோடு திரு. பழனி முதலியார் புதல்வன் அண்ணாமலை முதலியாருக்கும், தெம்பழனி முதலியார் புதல்வி உண்ணாமுலையம்மாளுக்கும் செங்குந்தர் சங்கத்தில் கார்த்திகைமீ நடத்தப்பட்ட திருமணத்தில் ரூபா ஒன்றும், கொல்லங்கோடு தெற்குப்பாவடி திரு. வே. சுப்பிரமணிய முதலியார் குமாரன் சு. நாச்சியப்ப முதலியாருக்கும், பா. முத்துத்தாண்டவ முதலியார் குமாரி பழனியம்மாளுக்கும், கார்த்திகைமீ 25-ம் நாள் புரோகிதரைச் நீக்கிச் செங்குந்தகுலபெரியோரைக் கொண்டு நடத்தப்பட்ட திருமணத்தில் ரூபா இரண்டும், நமது தலைச்சங்க உபதலைவர்களுள் ஒருவரும் சைதாப்பேட்டை முனிசிபல் வைஸ்சேர்மனுமாகிய திரு. சை. இரத்தினவேலு முதலியாரவர்கள் புதல்வன் S. R. மாணிக்க முதலியாருக்கு 20-1-30-ம் நாள் நடந்த சீமந்த முகூர்த்தத்தில் ரூபா இரண்டும், மோகனூர் திரு. நல்லண்ண முதலியார் குமாரர் நாட்டாண்மை கந்தசாமி முதலியாரவர்கட்கு 12-8-29-ந்தேதி நடந்த திருமணத்தில் ஒன்பதணாவும் நமது தலைச்சங்கத்திற்கு நன்கொடையாக வழங்கியிருக்கின்றனர். இவர்கள் அனைவர்க்கும் நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு மணமக்களனைவரும் எல்லா நலங்களுமெய்தி இன்புற இன்னருள் பாலிக்குமாறு இறைவனை இறைஞ்சுகின்றோம்.

மோகனூர் திருமணத்தில் மிகச் சிறிய தொகையே நன்கொடையாக வழங்கப்பட்டிருப்பதாயினும் அந்நாட்டைச் சேர்ந்த எழெட்டு கிராமங்களிலும் நடைபெறும் திருமணங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்பதணா வீதம் நமது தலைச்சங்கத்துக்கு நன்கொடை வழங்கப்படவேண்டுமென நாட்டுக் கட்டுபாடு செய்திருக்கிறார்களென்பது கேட்டு பெருமகிழ்வெய்துகின்றோம். இவ்வாறே மற்ற நாட்டுக்கூட்டங்களிலும் தீர்மானித்து நன்கொடை வழங்கி வருவாராயின் அதுவே நமது தலைச்சங்கத்திற்கு நிலைத்த வருவாயாக நின்று உதவிபுரியுமாதலின் ஆங்காங்குள்ள நாட்டாண்மைக்காரர், பெரியதனக்காரர், கிராமணிகளாதியோர் தங்கள் நாடுகளிலும் இவ்வித தீர்மானஞ் செய்வதற்குத் தீவிர முயற்சி கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

## மளிகை உண்டியல் வசூல்

சென்னை, காஞ்சியிலுள்ள பளையகாட்டுக் கம்பெனிகளும், சைதாப்பேட்டை கைலி வியாபாரிகளும் தங்கள் வியாபாரக் கம்பெனிகளில் சென்ற இரண்டாண்டுகளாக உண்டியல் வசூலித்து நமது சங்கத்திற்கு உதவி வருகின்றனர். இவ்வருவாய் நமது ஏழைச் சிறுவர்கட்கு உபகாரச் சம்பளம் வழங்கப் பெரிதும் உபகாரமாயிருக்கிறதென்பதும் இவ்வருவாயில்லையேல் இத்துணை மாணவர்கட்கு உபகரித்திருக்க முடியாதென்பதும் உண்மையேயாகும். இவர்கள் காட்டிய வழியைப் பின்பற்றிச் செங்கற்பட்டு ஜில்லா மாணும்பதி கிராமம் ஜவுளி திரு. சு. பொன்னுசாமி முதலியாரவர்கள் தமது மளிகையிலும் உண்டியல் வசூலித்து மார்கழி மாதத்தில் ரூபா 4-5-7 நமக்கு அனுப்பியிருக்கிறார்கள். உண்டியல் வசூலித்து உதவும் அன்பர்களனைவர்க்கும் எமது உள்ளம் நிறைந்த நன்றி உரித்தாகுக.

மாணும்பதியில் இன்னும்பல வியாபாரிகள் இருக்கின்றனர். அவர்களில் பிரபல வியாபாரிகளும் நமது சமூக முன்னேற்றத்தில் பேராவலுடையவர்களுமான, திருவாளர்கள் கு. முருகப்ப முதலியார், சொ வேணுகோபால் முதலியார் முதலிய மற்றும் பலரும், திரு. சு. பொன்னுசாமி முதலியாரவர்களைப்பின்பற்றி உண்டியல் வசூலித்துதவிச் செங்குந்த உலகில் பெரும்புகழ் பெறுவாராக.

---

## சிவபுர நாட்டு அமாவாசைத் தரிவரி

காஞ்சிச் செங்குந்த மகாஜனக்கூட்டத்தில் தீர்மானிக்கப் பெற்றதற்கிணங்க சிவபுர நாட்டைச் சேர்ந்த கிராமங்களில் அமாவாசைதோறும் தரி ஒன்றுக்குக் காலணாவீதம் வசூலிக்கப்பட்டு நாட்டாண்மைக்காரர் திரு. ஆர். ராஜு முதலியாரவர்கள் மூலமாகத் தவறுமல் ஒழுங்காக நமக்குக் கிடைத்துவருகின்றது. இப்பொழுது நமக்குக் கிடைத்த வசூல் பிறிதோரிடத்தில் குறிக்கப்பட்டிருப்பது கண்டுணர்க. சிவபுரநாட்டார் இவ்விஷயத்தில் மிகச் சிரத்தைகொண்டு வசூலித்து வருவதற்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். காஞ்சிபுரம் முதலிய மற்ற ஊர்களிலுள்ளவர்கள் ஒழுங்காக அமாவாசைத் தரிவரி வசூலித்து அனுப்புவரேல் இதனினும் சிறந்த வருவாய் வேறு இராதெனக் கூறலாம். இதனை எல்லா பிரமுக

களும் கவனித்து வசூலித்தற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

---

## உபகாரச் சம்பள நன்கொடை.

சைதாப்பேட்டை தோப்பேட்டைத் தெரு பெஸ்டு பனியகாட்டுக் கம்பெனியின் கூட்டாளிகளிலொருவரும் முனிசிபல் கவுன்சிலரும் சமூக முன்னேற்றத்தில் பேராவலுடையவருமாகிய திரு. M. V. சொக்கலிங்க முதலியாரவர்கள் 1929-ம் ஆண்டு ஆகஸ்டு மாத முதல் ஒரு கல்லூரி மாணவனுக்கு உபகாரச்சம்பளம் கொடுக்க இசைந்துள்ளனர்: இவர்கட்கு நமது நன்றியென்றும் உரித்தாகுக. அதே கம்பெனியைச் சேர்ந்த மற்ற கூட்டாளிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாணவனுக்கு உபகாரச்சம்பளம் வழங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுவது கேட்டு நாங்கள் பெருமகிழ் வடைகின்றோம். செல்வந்தர்களனைவரும் இவ்வாறு ஒவ்வொரு மாணவனுக்கு உபகரிக்க முன்வரின் நமது சமூகம் மிக விரைவில் பல கல்விக் களஞ்சியங்களைப் பெறுமன்றோ ?

---

## பிழை திருத்தம்

சென்ற ஐப்பசி மாத மித்திரன் 409-ம் பக்கத்தில் திரான்ஸ்வால் செங்குந்தர் சங்கத்தாரால் வசூலித்து நமக்கு அனுப்பப்பட்ட கல்விநிதி ஜாபிதா குறிக்கப்பட்டிருந்தது. அதில் தஞ்சை ஜில்லா செம்பொன்னூர் கோவிலி லிருந்து தென் னுப்பிரிக்கா சென்று ஜோஹானஸ் பர்க்கில் தற்போது வசித்துவரும் திரு. சி. கந்தசாமி முதலியாரவர்கள் உதவிய £ 1—3—0 குறிக்கப்படாமல் விட்டுப் போனதற்குப்பெரிதும் வருந்துகின்றோம். மேற்படி அன்பருக்கு எமது நன்றி உரித்தாகுக.

சென்ற மார்கழி மாத இதழில் 473-ம் பக்கத்தில் சாரதா சட்டம் 9-வது விதியில் பாலிய விவாகம் நடைபெற்ற 'ஒரு மாத' காலத்திற்குள் அதைப் பற்றிக் கோர்ட்டில் வழக்குத் தொடர வேண்டுமென்று குறிக்கப்பட்டிருப்பதைப்பற்றி ஒரு வருட காலத்திற்குள் வழக்குத் தொடர வேண்டுமென மாற்றி வாசித்துக் கொள்ள வேண்டுமென வாசகர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

---

## தலைச்சங்கத்துக்கு மகமை, உண்டியல், நன்கொடை வரவு

### சென்னை

| | |
|---|---|
| மதராஸ் பனியகாட்டுக் கம்பெனி புரட்டாசி முதல் தை மாதவரை | 386—8—0 |
| தி. ச். ராம. கு. நடேச முதலியார் புரட்டாசி, ஐப்பசி | 12-15—6 |
| S. K. M. காயாரோகண முதலியார் புரட்டாசி, ஐப்பசி | 7-14—0 |

### காஞ்சிவரம்

| | |
|---|---|
| மதராஸ் பனிய காட்டுக் கம்பெனி ஐப்பசி, கார்த்திகை | 127—0—0 |

### சைதாப்பேட்டை

| | |
|---|---|
| க. வே. மு. முருகைய்ய முதலியார் புரட்டாசி | 2—0—0 |
| இம்பீரியல் பனியகாட்டுக் கம்பெனி கார்த்திகை வரை | 4—8—0 |
| பெஸ்டு பனியகாட்டுக் கம்பெனி புரட்டாசி முதல் கார்த்திகை வரை | 19—9— |

### மாஹும்பதி

| | |
|---|---|
| சு. பொன்னுசாமி முதலியார் ஐப்பசி வரை | 4—5—7 |

### திருமண நன்கொடை

| | |
|---|---|
| பழம் பாலக்கோடு பழனி முதலியார் புதல்வன் திருமணத்தில் | 1—0—0 |
| கொல்லங்கோடு வெ. சுப்பிரமணிய முதலியார் குமாரன் திருமணத்தில் | 2—0—0 |
| சைதாப்பேட்டை S. ரத்தினவேலு முதலியார் புதல்வன் சீமந்தத்தில் | 2—0—0 |
| மோகனூர் நல்லண்ண முதலியார் குமாரன் திருமணத்தில் | 0—9—0 |

### சிவபுரநாட்டு அமாவாசைத் தரிவரி

சிவபுரம் நாட்டாண்மை R. ராஜு முதலியாரவர்கள் மூலமாக கார்த்திகை மாதம் வரையில் வசூலானதரிவரி கீழ்க்கண்ட வீதம் நமக்குக் கிடைத்திருக்கிறது.

| | |
|---|---|
| பழைய சீவரம் | 5—0—0 |
| சேர்க்காடு | 12—0—0 |
| மையூர், மாமண்டூர், வடபாதி | 5—0—0 |

### உபகாரச் சம்பள நன்கொடை

| | |
|---|---|
| தலைவர் திரு. ஆ. வே. முத்தைய முதலியார் 10 மாதங்கட்கு | 50—0—0 |

## சேங்குந்தர் கல்வி நிதிக்காக மலாயா செங்குந்த கனவான்கள் நன்கொடை வசூல் விபரம்

| | வெள்ளி |
|---|---|
| திருமருகல் க. சி. சோ. சிங்காரவேல் முதலியார் | 10—0—0 |
| திரு. பட்டணம் சோ. த. ப. பொன்னுசாமி முதலியார் & கோ | 5—0—0 |
| அகரக்கொந்தகை சோ. ச. சவுரிராஜ முதலியார் & கோ | 10—0—0 |
| திருமருகல் தி. மு. கணபதி முதலியார் | 8—0—0 |
| ஷையூர் க. இராஜு முதலியார் | 2—0—0 |
| தலைஞாயிறு சுப்பிரமண்ய முதலியார் | 5—0—0 |
| திருமருகல் சா. ரூ. ரூமசாமி முதலியார் & கோ | 5—0—0 |



| | |
|---|---|
| வாழமங்கலம் க. ரா. ராமசாமி முதலியார் | 5—0—0 |
| திரு. பட்டணம் சு. ப. சொக்கலிங்க முதலியார் | 3—0—0 |
| பஞ்சட்டிதொல்லை க. குமாரவேல் முதலியார் | 5—0—0 |
| திருவாரூர் மனோன்மணி விலாச புத்தகசாலை ரெ. மு. று. முருகைய முதலியார் | 8—0—0 |
| ஷையூர் ச. முத்துவேல் | 5—0—0 |
| காட்டுச்சேரி ச. முத்துக் குமாரு | 8—0—0 |
| வாழமங்கலம் ப. லெ. சுப்பிரமண்ய முதலியார் | 5—0—0 |
| ஷையூர் சு. கோமலைப் பெருமாள் முதலியார் | 5—0—0 |
| காட்டுச்சேரி வீ. கந்தசாமி முதலியார் | 3—0—0 |
| ஷையூர் து. பக்கிரிசாமி | 5—0—0 |
| திருமருகல் பொ. பா. ராசையா முதலியார் | 2—0—0 |
| ஷையூர் கு. கு. சி. ஞான முதலியார் | 2—0—0 |
| ஷையூர் சா. சோமசுந்தர முதலியார் | 2—0—0 |
| ஷையூர் சு. மு. ரெத்தினசாமி முதலியார் | 5—0—0 |
| வாழமங்கலம் வ. சபாபதி முதலியார் | 5—0—0 |
| காரைக்கால் V. கிருஷ்ணசாமி முதலியார் | 2—0—0 |
| திருமருகல் ம. ரெத்தின முதலியார் | 1—0—0 |
| வாழமங்கலம் ரா. சுப்பிரமண்ய முதலியார் | 1—0—0 |
| காஜாங் அ. ராமசாமி முதலியார் | 1—0—0 |
| திருமருகல் ந. சி. நடராஜ முதலியார் | 10—0—0 |
| கொடவாசல் தா. இ. கோ. ராமசாமி முதலியார் | 2—0—0 |
| காட்டுச்சேரி வை. க. முருகைய முதலியார் | 2—0—0 |
| திருமருகல் மே. அ. க. பொன்னுசாமி முதலியார் | 2—0—0 |
| ஷையூர் பு. ச. சோ. மாரிமுத்து முதலியார் | 2—0—0 |
| காட்டுச்சேரி க. கிருஷ்ண முதலியார் | 5—0—0 |
| காட்டுச்சேரி ச. முருகைய முதலியார் | 3—0—0 |
| போர்டிக்ஷன் தா. லெ. பாவாடை முதலியார் | 2—0—0 |
| ,, சா. வெங்கடாசல முதலியார் | 2—0—0 |
| ,, சு. க. சோமு முதலியார் | 1—0—0 |
| ,, சா. ராமசாமி முதலியார் | 1—0—0 |
| ,, சி. சோ. மு. சுந்தரம் முதலியார் | 1—0—0 |
| ,, மா. சின்னையா முதலியார் | 1—0—0 |
| காட்டுச்சேரி க. குப்புசாமி முதலியார் | 1—0—0 |
| ஷையூர் மா. மு. சவுரிராஜ முதலியார் | 1—0—0 |
| தலைஞாயிறு ச. பாவாடை முதலியார் | 2—0—0 |
| ஷையூர் ரா. பொன்னுசாமி முதலியார் | 1—0—0 |
| ஷையூர் ரா. நாராயணசாமி முதலியார் | 1—0—0 |
| குராடு வீ. கருப்பையா முதலியார் | 1—0—0 |
| தலைஞாயிறு செ. முருகைய முதலியார் | 1—0—0 |
| திருச்செம்பொன் பள்ளி சீனிவாச முதலியார் | 1—0—0 |
| சிதம்பரம் நாகப்ப முதலியார் | 1—0—0 |
| தலைஞாயிறு சா. அரிவிச்சி முதலியார் | 1—0—0 |
| காரைக்கால் மு. சிவகடாட்ச முதலியார் | 1—0—0 |
| காட்டுச்சேரி பா. நாகராஜு முதலியார் | 2—0—0 |
| திரு. பட்டணம் ச. வெங்கடாசல முதலியார் | 2—0—0 |
| ஷையூர் ப. மலப் பெருமாள் முதலியார் | 1—0—0 |
| திருவாரூர் க. சோமசுந்திர முதலியார் | 2—0—0 |
| ஷையூர் சு. இராஜகோபால் | 2—0—0 |
| திரு. பட்டணம் அ. கோவிந்தராஜ முதலியார் | 1—0—0 |
| ஷையூர் ஆ. சோமசுந்திர முதலியார் | 1—0—0 |
| அகரக்கொந்தகை நா. உத்திராபதி முதலியார் | 1—0—0 |
| காட்டுச்சேரி கோ. கந்தசாமி முதலியார் | 2—0—0 |
| வாழமங்கலம் ப. லெ. வேலாயுத முதலியார் | 1 0—0 |
| அகரக்கொந்தகை சா. குஞ்சிதபாத முதலியார் | 1—0—0 |
| ஷையூர் கல்யாண சுந்திரம் | 1—0—0 |
| படுதார் கொல்லை சு. வீரப்ப முதலியார் | 1—0—0 |
| திருமருகல் நா. சிதம்பர முதலியார் | 1—0—0 |
| புத்தகரம் கொ. பழனியாண்டி முதலியார் | 1—0—0 |
| திருமருகல் ப. சி. அண்ணாமலை முதலியார் | 2—0—0 |
| அகரக்கொந்தகை சா. ஆறுமுக முதலியார் | 1—0—0 |
| திரு. பட்டணம் S. தங்கவேல் முதலியார் | 3—0—0 |
| ஷையூர் கு. வீரப்ப முதலியார் | 1—0—0 |
| காட்டுச்சேரி க. ஞான முதலியார் | 2—0—0 |
| பிரைவேட் வசூல்:— | |
| S. சதாசிவ உபாத்தியாயர் | 1—0—0 |
| தலை ஞாயிறு கோவிந்தப்ப முதலியார் | 1—0—0 |
| ஷையூர் தொப்ப முதலியார் | 1—0—0 |
| திருக்குறைக்காவல் கோவிந்த படையாச்சி | 1—0—0 |
| அகரக்கொந்தகை ச. வீராசாமி முதலியார் | 2—0—0 |
| ஆக கூடியது வெள்ளி | 199—0—0 |
| இந்நிதிவசூல்செய்யச் செலவு ,, | 8—0—0 |
| தலைச் சங்கத்திற்கு அனுப்பப்பட்ட தொகை வெள்ளி | 191—0—0 |

---

சைதாப்பேட்டை செங்குந்தர் கோவாப் ரேட்டிவ் சொசைட்டி காரியதரிசியாயிருந்து சமீபத்தில் காலஞ்சென்ற ஸ்ரீமான் K. சண்முகசுந்தர முதலியார் அவர்கள் கருமாதியில் தலைச் சங்கத்திற்குக் கொடுத்த நன் கொடை 0—8—0

## நிரூபங்கள்

### சோரவனூரில் ஒரு விசித்திர சம்பவம்

மலையாளத்தைச் சார்ந்த சொரவனூர் என்னும் கிராமத்துச் செங்குந்த வாலிப சங்கத்தார் அம்மன் கோவிலில் சனிக்கிழமை தோறும் பஜனை செய்வதுண்டு. இச்சங்கத்தார் அக்கோவிலின் படிமேல் யாரும் உட்காரக் கூடாதென்று தீர்மானித்துக் கொண்டதாகவும், சில பெரியோர்கள் தீர்மானத்தைக் கவனியாது உட்கார்ந்ததைக் கண்டு தீர்மானத்தை நீங்கள் மீறியபடியால் இவ்விஷயம் தீர்மானமாகிறவரையில் கோவிலுக்குப் பூசை பஜனை முதலியவை நடக்கக் கூடாதென்றும் சொல்லி சங்கத்தாரில் ஒருவர் கோயிலைப் பூட்டிக் கொண்டு போய் விட்டதாகவும், அது முதல் கோயில் பூசை இல்லாமல் இருந்து வருகிறதாகவும் கேள்வி. இது என்ன விபரீதம்! உப்பில்லாத இந்த வழக்கிற்கும் அம்மன் பூசைக்கும் என்ன சம்பந்த மிருக்கிறது? இத்தகைய மேதாவிகள் நிறைந்த நம் சமூகம் எக்காலம் ஈடேறும்?

இதற்குப் பின் நடந்த ஒரு கல்யாணத்திற்கு ஷை சங்கத்தார் வராமலும் ஊர்வலம் தெருவில் வரவொட்டாமல் நாடகத்திற்கென்று பந்தல் போட்டுத் தடைசெய்யப் போலீசார் வந்து வழக்குத் தீர்த்ததாகவும் கேள்வி. இதனால் ஊரில் கக்ஷிகளும் சண்டைகளும் நேர்ந்ததை அறிந்த பாலப்புரம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்தலைவரும் அம்சம் அதிகாரியுமாகிய திரு. எம். ராமன் முதலியார் அவர்களும், திரு. கிருஷ்ணப்புலவர் அவர்களும் அவ்வூருக்குச் சென்று ஒற்றுமை செய்ய முயன்றபோது ஷையார்கள் தக்க பதில் கூறாது ஏழூர் கூட்டம் கூடித்தான் வழக்குத் தீர்க்கவேண்டும் என்றார்களாம். பாலப்புரத்திலிருந்து போனவர்கள் திரும்பி வந்து விட்டார்கள்.

தீர்க்க முடியாத இப்பெரிய வழக்கிற்கு ஏழூர் கூடவேண்டுமாம். ஏழூர் கூடினால் என்ன செலவாகும்? அதனால் வரும் பயன் தான் யாது? அத்தொகையை நம்குல முன்னேற்றச் சம்பந்தமான வேறு வழியில் செலவிடலாகாதா? நம்மவர்களுக்கு நல்லறிவு உதிக்குமாறு தண்டாயுதபாணி என்று தான் அருள்புரிவாரோ தெரியவில்லை.

ஈரோட்டில் நடந்த நமது மகா நாட்டில் நாம் முன்னேறுவதற்கு 'ஒற்றுமை வேண்டும், ஒற்றுமை வேண்டும்' என்னும் சப்த மல்லவோ இடி முழக்கம் போல் முழங்கிக் கொண்டிருந்தது. அம்முழக்கம் சொரவனூர் சங்கத்தார் காதில் நுழையவில்லை போலும். நாம் ஆங்காங்கு சங்கங்கள் நிறுவி ஒற்றுமை உண்டாக்கிவரும் காலத்தில் இவர்கள் அற்ப விஷயங்களை முன்னிட்டுக் கக்ஷியையும் கலகத்தையும் உண்டாக்குவது தகுதியாமோ? ஆகையால், இனிமேலாவது இவர்கள் சண்டைச்சச்சரவின்றி ஒற்றுமையடைந்து பூஜை முதலியவற்றை ஒழுங்காக நடத்தி வருமாறு பராசக்தியாகிய அம்மன் அருள்புரியுமாறு பிரார்த்திக்கின்றேன்.

பாலப்புரம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கக் காரியதரிசி

---

### பழநிமலை அடிவாரத்தில் செங்குந்தர் தண்ணீர்ப் பந்தல் மடம்.

ஸ்ரீ தெண்டபாணிக்கடவுள் அருள்மிகுந்த புண்ணியதலங்களுள் பழநி ஒன்றென்பது செங்குந்த மக்கள் அனைவருக்கும் தெரிந்ததே. இம்மலையின் மேல் நவவீரர் அறைக்கோயில் 1. இடும்பன் கோயில் 2. அடிவாரத்தில் சந்நிதிவீதியில் தண்ணீர்ப்பந்தல் மடம் 3. ஷை வீதியில் மேற்குப்பக்கம் முத்துக்குமாரசாமி கோயில் மடம் 4. திருவாவினன் குடிக்கோயில் துவஜாரோகண முன் மண்டபம் 5. பழநி ஊர்க்கோயில் துவஜாரோகண மண்டபம் 6. மேற்கு ரதவீதி தர்மமடம் 7. இவ்வேழு தர்மங்களுக்கும் திருப்பணியாற்றிப் புதுப்பிக்கும் பொருட்டுத் திருப்பணி கைங்கரியப் பத்திரிகை பல்லூர்களுக்கும் அனுப்பப்பட்ட செய்தி யாவரும் அறிந்ததே, செங்குந்தர்களுக்குரிய 14 தர்மங்களில் ஆறு இப்போது தவறியிருப்பதாகவும் தெரிகிறது. சில வருஷங்களுக்குமுன் இடும்பன் கோயில் ஜீரணோத்தாரணம் செய்யப்பெற்றது. ஆயக்குடி, ஒபுலாபுரம், வேலாயுதம்பாளையம் புதூர் வகையராச் செங்குந்தர்கள் முயற்சியால் உற்சவகாலங்களில் தண்ணீர்ப் பந்தல் தர்மமும் மகேஸ்வர பூஜையும் நடத்தி வந்த இடத்தில் ஒரு புதிய மடம் கட்டப் பெற்றது.

ஐந்தாறு வருஷங்களுக்கு முன் இம்மடம் கட்டுவதை முன்னிட்டு வேலாயுதம்பாளையம் புதூர் திரு கூ. வ. இராமசாமி முதலியாருடன் பழநியை சுற்றியுள்ள கிராமச் செங்குந்தர்கள் சேர்ந்து ப[illegible] ஊர்களிலுள்ள நம்மவர்களிடம் சென்று தொகை சேகரித்து மடத்தைக் கட்டிவைத்ததாகத் தெ[illegible]கிறது. திரு. கூ. வ. இராமசாமி முதலியார் அவர்கள் இதற்காக ரூபாய் 1000 மட்டும் கொடுப்பதா[illegible] முதலில் வாக்களித்தாராயினும், மேற்கொண்டு தாம் 3500 ரூபாய்வரையில் செலவு செய்திருப்பதாகவும் கேள்விப்படுகிறோம். சென்ற கார்த்திகை மாத மித்திரன் மூலம் மடம் சில காலம் பூட்டப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. மடத்து வேலை இன்னும் குறையாகவும், பிரவேசம் செய்யாமலும் இருந்து வருகிறது. திரு. கூ. வ. இராமசாமி முதலியார் முன்னரே இம்மடத்திற்காக 4500 ரூபாய்வரையில் செலவு செய்திருக்கிறபடியாலும், பிரபல வியாபாரியாக இருக்கிறபடியாலும், முன்போலவே முன் வந்து முயற்சித்து மடத்து வேலையைப் பூர்த்தி செய்யுமாறு நம்மித்திரன் மூலம் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமது செங்குந்தமித்திரன் நமக்குப் புத்துயி



[illegible] உலாவி வருவது காலத்தின் கியான[illegible]மென்றே சொல்லத் துணிகிறேன்.

V. பழனிச்சாமி முதலியார், கூக்கால்.

---

[illegible]ழநியில் நம்மவர்க்குரிய 14 தர்மங்களுள் [illegible]ரூகிய தண்ணீர்ப் பந்தல் மடத்தைச் சில வரு[illegible]ங்களுக்கு முன் பழநியைச் சூழ்ந்த கிராமத்தா[illegible]டத்தும் கொல்லங்கோடு முத்துக்குமார முதலி[illegible]யார் வகையரா உட்பட பல வெளி ஊர்களிலும் பணம் வசூலித்துக்கட்ட ஆரம்பித்துக் கட்டடம் முடிவு பெறுமுன் வேலாயுதம் பாளையம் புதூர் செங்குந்தர்களுள் சிலர் மடம் கட்டுவது தங்களுக்குத் தெரியாது, தங்களைக் கேட்கவில்லை யென்றும் திருவாளர்கள் கூ. வ. இராமசாமி முதலியார், மடத்தூர் மு. பழனியப்ப முதலியார், பாத்திரக்கடை அ. குழந்தைவேல் முதலியார், பழனி குப்பண முதலியார், ஆயக்குடி அமுர்த முதலியார் ஆகிய ஐவரும் மானேஜ்மெண்டு பார்ப்பதாக எக்ரீமெண்டு எழுதிக்கொடுக்க வேண்டுமென்றும், முன்னிருந்து பணம் வசூலிப்பவர்கள் பணத்தை எடுத்துக் கொண்டால் என்ன செய்வது என்றும் அதனால் யாரும் வரி கொடுக்கக் கூடாதென்றும் பல ஊர்களுக்குக் கடித மூலம் தெரிவித்தார்கள். இது சம்பந்தமாக இரண்டொரு வழக்குகளும் கோர்ட்டில் நடந்தன. இதன் பயனாக மடத்து வேலை குறையாக நின்று விட்டது. பழநியைச் சூழ்ந்த பல கிராமங்களிலும் கக்ஷிப்பிளவுகள் உண்டாய் விட்டன.

ஆகையால், நமது தலைச்சங்கத்தார் சில பிரமுகர்களைப் பழநிக்கு அனுப்பி ஷை மடத்திலேயே பல ஊர்க்காரர்களையும் வரவழைத்துச் சமாதானப்படுத்திக் கக்ஷியை ஒழித்து ஒன்று செய்யுமாறு வேண்டிக் கொள்ளுகிறேன். *

வருஷம் ஒன்றுக்குச் சுமார் 500 ரூபாய் இன்கம்டாக்சும், 256 ரூபாய் சர்க்கார் கிஸ்தியும் கட்டி வரும் தகுதி வாய்ந்த திரு. கூ. வ. இராமசாமி முதலியார் அவர்கள் பெரு முயற்சியால் மடத்து வேலை இவ்வளவு தூரம் நடந்தேறிய படியால் அவரே இதற்கு முன்னின்று நமது தலைச்சங்கத்துப் பிரதிநிதிகளைக் கொண்டு கக்ஷியை ஒழித்து ஒழுங்கு செய்து மடத்து வேலையைப் பூர்த்தி செய்வாரென நம்புகிறேன்.

அ. ரங்கசாமி முதலியார், மடத்தூர்
கொளுமம் போஸ்டு.

---

### கோல்லங்கோட்டில் ஒற்றுமைத் திருமணம்.

நமது இராஜதானியில் அதிக ஜனத்தொகையைக் கொண்ட சமூகங்களில் ஒன்றான செங்குந்த சமூகத்தில் பலவிதமான உட்பிரிவுகளிருக்கின்றன. அவற்றிற்குள் மணமுடித்தல், உறவாடுதல் என்பது இல்லாமல் ஒற்றுமை என்பது போய் வேற்றுமை வித்தியாசங்களே இருந்து வருகின்றன. இது நம் செங்குந்த சமூகத்திற்கே க்ஷீணத்தையும், பலக்குறைவையும், முன்னேற்றத் தடைகளையும் உண்டு பண்ணுகிறது. இக்குறையை நீக்கத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் தோன்றிப் பல விதத்திலும் செங்குந்தர்களை முன்னேற்றத் துறையிலீடுபடுத்த முயற்சித்து வருகின்றது. அதன் பயனாகச் சென்ற ஆண்டில் செங்குந்தர் முதலாவது மகாநாடு ஈரோட்டில் நடைபெற்றது. அங்கே பல ஜில்லாக்களிலிருந்தும் வந்திருந்த செங்குந்தர் ஒன்று சேர்ந்துறவாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. நமக்குள், பல்வேறு உட்பிரிவினருக்குள் பல்வேறு ஜில்லா செங்குந்த மக்களுக்குள் வித்தியாசமின்றி நம்மவர் மேம்பாட்டையும் முன்னேற்றத்தையும் கருதி ஒற்றுமைத் திருமணங்கள் செய்ய வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று பலருக்கு யோஜனைகளிருந்தும் இதுவரையில் துணிந்து செய்ய முன்வந்தார் யாருமில்லை.

ஆனால் கொல்லங்கோடு பெரிய வீட்டுத் திருவாளர் சுப்பிரமணிய முதலியார் தமது குமாரத்தியைப் புது சம்பந்தமாகப் பொள்ளாச்சி ரைஸ்மில் புரொப்ரைட்டர் திருவாளர் ஆறுமுக முதலியார் குமாரருக்குத் திருமணஞ்செய்து கொடுத்து மகாநாட்டுத் தீர்மானத்தை நடவடிக்கையில் செய்து காண்பித்தனர். ஏனைய செங்குந்தர்களும் இதனைப் பின்பற்றிப் பல திருமணங்கள் செய்துய்யுமாறு வேண்டிக்கொள்ளப் படுகின்றனர். மேலும் இத்திருமணத்தில் சடங்குகள் நமக்கு அர்த்தமாகாத சமுஸ்கிருத பாஷையில் பிராமணர்களால் செய்யப்படவில்லை. எல்லாம் இனிய நம் தாய் மொழியான தமிழில் நம்மவரொருவரால் நிறைவேற்றப்பட்டுத் தம்பதிகள் ஆசீர்வதிக்கப் பெற்றனர். அங்கு வந்திருந்த பல பெரியோர்களும் ஆசீர்வாதம் செய்தனர்.

மணமக்களை ஆசீர்வதிக்கும் சமயத்தில் ஈரோடு வர்த்தகமகாநாட்டு வரவேற்புக்கமிட்டி தலைவரான திருச்செங்கோட்டு திருவாளர் கி. ரா. கந்தப்ப முதலியாரும், நமது சமூக பட்டதாரியும், கோவை ஜில்லா மதுவிலக்குக் காரியதரிசியுமான திருவாளர் E. V. சிங்காரவேலு முதலியார் B. A. யும் இம்மாதிரி திருமணங்கள் பல நம் சமூகத்தில் நிகழவேண்டுமென்றும், திருமணங்களே உண்மையான ஒற்றுமையையும், பிணைப்பையும் உண்டுபண்ணுகின்றனவென்றும், ஏனைய செங்குந்த சகோதரர்களும் இதனைப் பின்பற்ற வேண்டுமென்றும, இவ்விதம் நம்மை ஒன்று கூட்டுவித்த நமது தலைச்சங்கத்திற்கு நம் நன்றியறிகுறியாக ஏதாவது

---

* பழநிப் பதியைச் சூழ்ந்த கிராமச் சகோதரர்கள் நமது தலைச்சங்கத்தார் மத்தியஸ்தமாக இருந்து ஒற்றுமை செய்து வைக்கவேண்டும் என விரும்பித் தக்கவாறு தெரிவிப்பாராயின், நமது இரண்டாவது மகா நாட்டிற்குப் பிறகு நமது பிரதிநிதிகளை அனுப்பி அவர்கள் இஷ்டத்தைப் பூர்த்தி செய்து வைக்க ஏற்பாடு செய்வோம். [ப-ர்.]

நன் கொடை அனுப்பவேண்டுமென்றும் விரிவுரை நிகழ்த்தி ஆசீர்வதித்தனர்.

இத்திருமண வைபவத்திற்கு கோவை, திரு. K. பெருமாள் முதலியார், காரமடை திரு. சாமிநாத முதலியார், பொள்ளச்சி அப்பாவு முதலியார், மற்றும் பல பிரமுகர்களும் வந்திருந்தனர்.

க. பெருமாள் முதலியார்

---

## மாணும்பதி ஸ்ரீ ஞானசம்பந்தப் பிள்ளையார் ஆலயத்தில் பிராமணரல்லாதாரால் கும்பாபிஷேகம்

தொண்டை நன்னாட்டின் தலைநகராகிய காஞ்சீபுரத்திற்குத் தெற்கே பதினைந்து மைல் தூரத்தில் உள்ள மாணும்பதியென வழங்கும் வானவன் மாதேவி கிராமத்தின் மத்தியில் புராதன சிவாலயமும் நாற்புறத்திலும் ஸ்ரீ விநாயகராலயங்களும் அமைந்திருக்கின்றன. இந்திராணி சிவபெருமானைப் பூசித்துப்பேறு பெற்றமையால் இத்தலத்திற்கு வானவன் மாதேவி யென்றும், எம்பெருமானுக்கு வானசுந்தரேசர் என்றும், தீர்த்தத்திற்கு வானதீர்த்தமென்றும் பெயருண்டாயிற்று. இத்தலத்தில் பூர்வம் சமணர்களும் புத்தர்களும் நிறைந்திருந்தனர். பிள்ளையாரால் பாடம் பெற்ற திருவோத்தூருக்கும், திருமாகறலுக்கும் மத்தியிலிருக்கிறது. பிள்ளையாருக்குச் சந்நதி வீதியின் தென்கோடியில் ஸ்ரீவான சுந்தரேசர் கோயிலுக்கு எதிரில் ஒரு கோயிலும் அமைக்கப்பெற்றிருக்கிறது. இக்காரணங்களால் இது திருஞான சம்பந்தப் பிள்ளையாரால் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றெனக் கருதப்படுகிறது. தேவாரப்பதிகம் சிதைந்தவற்றுள் ஒன்றாயிருத்தல் வேண்டும்.

இச்சம்பந்தப்பிள்ளையார்*ஆலயம் நெடுங்காலமாக பூசை முதலியவின்றிப் பழுதுபட்டுயிருந்தது. இக்கோயில் இவ்வூர்ச் செங்குந்தமரபினரும் சிவபக்தருமான திரு. வ. நடேச முதலியார் அவர்களால் புதுப்பிக்கப்பெற்றுச் சென்ற தைமீ 6உ கும்பாபிஷேகம் நம்மவர்களாலேயே விமரிசையாகச்செய்யப்பெற்று அது முதல் நித்திய பூஜை முதலியவை முதலியார் அவர்கள் குமாரன் சிரஞ்சீவி முருகேசன் என்பவனால் நடத்தப்பெற்று வருகின்றன. இதனை ஏனைய செங்குந்தர்களும் பின்பற்றுவர்களென எதிர் பார்க்கப்படுகிறது.

ஐங்கரன் கழலடி பணிவோன்.

---


* இத்தலம் திருஞான சம்பந்தப் பிள்ளையாரால் பாடப்பெற்ற தென்பதற்குப் போதிய சான்றுகள் இருக்கின்றன. இங்கு சமணர்களும், புத்தர்களும் பெருங்கூட்டத்தவராய் வாழ்ந்திருந்தார்கள் என்பதை நிலை நாட்டக் கூடிய அநேக ஆதாரங்களும் உள. இது திருவோத்தூருக்கு மேற்கே சுமார் 8 மைல் தூரத்திலும் திருமாகறலுக்குக் கிழக்கே சுமார் 10 மைல் தூரத்திலுமிருக்கிறது. இத்தலத்திலுள்ள சம்பந்தப்பிள்ளையார் ஆலயத்திலிருந்த திருஞான சம்பந்தர் சிலாவிக்கிரகம் ஹைதர்கான் காலத்தில் ஸ்ரீவானசுந்தரேசர் ஆலயத்தில் கொண்டு போய் வைக்கப்பட்டு இன்று வரை பூசை நடந்து வருகிறது. பிற்காலத்தில் சம்பந்தப் பிள்ளையார் கோயில் என வழங்கி வந்ததை நோக்கி அது விநாயகர் கோயிலென்றே எண்ணி விநாயகர் விக்கிரகத்தை வைத்துப் பூசித்து வந்தார்கள். சில வருஷங்களுக்கு முன் பூசை நிறுத்தப்பட்டுக் கோயில் கிலனாயிருந்தது. தற்போது அதைப்பழுது பார்த்த திரு. வ. நடேச முதலியார் அவர்களும் பழைய திருஞான சம்பந்தர் விக்கிரகத்தையோ அல்லது புதிய விக்கிரகமொன்றையோ ஸ்தாபிக்காது சம்பந்தப் பிள்ளையார் என்றதனால் விநாயகர் கோயிலென்றே மயங்கி விநாயக மூர்த்தியையே ஸ்தாபித்தார்போலும். [ப-ர்.]

---


13

எங்கள் விசேஷ குறைந்த விலை விற்பனை

22 காரட் ரோல்டு கோல்டு புதுமாடல் கைக்கெடியாரங்கள்.




இதிற் கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம்போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச் சேர்த்து அனுப்பப்படும் 5 வருஷம் உத்தரவாதம. ரூ. 4-15-0 வி. பி. வேறு.

ஜினன் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்




# விடுகதைக் கொத்து

[நாங்குனேரி திரு. சு. அருணசலம் பிள்ளை]

(இது பெண்பாலரர் பெரிதும் விரும்புவரெனும் நோக்கால் வரைவதாம். கற்றோர் எளிது இலக்கணப் பிழையுளது என எமை எள்ளற்க.)

1. திரண்டுருண்ட மேனியான்
தேன் போல் தித்திப்பான்
கொடிக்கீழ் இருப்பான்
கொண்டை அறுபடுவான்—யார்?

2. பால்போன்ற மேனியர் பலரைக் கண்டேன்
பஞ்சவர் சேர்ந்து பந்தாடக் கண்டேன்
மேலோன் செய்பொறிவழி போகக் கண்டேன்
மேனியுள்ளே அதன் வடிவு காணேனய்யா—
இது யாது?

3. எள்போன்றிருப்பான்
எறும்பு போல் ஊருவான்
குஞ்சியுள்ளிருப்பான்
குடுகுடென ஓடுவான்—யார்?

4. சுற்றி அரணுவார்
நெற்றி முற்றும் கண்ணுவார்—யார்?

5. பச்சையாயிருக்குமது பாசியல்ல
பால்போல் இனிக்குமது பாகுமல்ல
உச்சியிற் சுட்டியுண்டு குழந்தையல்ல
உள்வெப்புத் தணிக்குமதை உரைசெய்வாயே.

6. நான்குகாலுடையான், நடவான்,
மேலுடையான், மேனியுள் சிலவற்றைத் தாங்
எழுத்தாளர் முன் நிற்பான்—யார்? [குவான்,

7. கையொன்றுடையார்; கருமானல் உருவானர்
இருபிறப்பாளர் இணைபட்டு நின்று
தம்முள் ஓரினத்தைக் தகர்க்கத் தலைப்படு
[வார்-யார்?

8. வட்டவடிவான்
வரண்ட ஓர் புறத்தான்
தைலம் தடவுவான்
தன்போற் படைப்பான்—யார்?

9. கந்தனுக்கு மாமன் பேராம்
அதன்கடை எழுத்தை 'ன்' என்பார்
தலையோ பசுவெனப் புகரலாகும்
தையலரே அதன் பெயரை மொழிகுவீரே—
யாது?

10. ஆதிமூன்றெழுத்துச் சேரின் அரன் தேவி
[பேரொன்றும்
அந்தமாம் மூன்றும்சேரின் முத்தியென மொ
[ழியலாம்
ஆதிஒன்று, அநந்தம் ஈரெழுத்துக்கூடின்அம்
[பென்றும் அறைகுவர்
ஐந்தெழுத்தாலாயவதை அவனியோர் தங்கிட
[மென மொழிகுவாரே.


11. மூன்றெழுத்தாலாயது
முதலதோ முன்னேனை பூசிக்கும் பொருளொ
[ன்றாகும்
தலைகடை சேர்ப்பார் தைலப்பொருளொன்
[றெனச்சாற்றுவர்
மூன்றெழுத்தும் சேர்ந்தா? நம்முதல் காப்
பாரே யாது?

12. பூதலத்தோர் பூண்டானது பேரதாகும்
அத்தலத்தே ஓர் தொழிலின் கருவியாகும்[ம்
நான்கெழுத்தாய், முன்மூன்றும் கருவியேயா
நானிலத்திரு தொழிலாளர் கைக் காண்பீரே-
யாது?

13. பைக்குள்ளு மிருப்பாள்
பாத்திரத்து மிருப்பாள
நெற்றி அணைவாள்
நீறுஎன்பாள்—யார்?

14. பல்பல உடையாள்
பதார்த்தம் தின்னுள்
சிகைசீர் செய்வாள்
செற்றலரைப் பிடிப்பாள்—யார்?

15. மாலை மறைவான்
மாநிலம் காப்பான்
காலை எழுவான்
ககனத்துக் காண்பான்—யார்?




## நாவல்கள்

### ஸ்ரீ ஆநந்த பூஷணம்

இப்பெயருடைய நூலொன்று எமது பார்வைக்குக் கிடைக்கப் பெற்றோம். இதில் இல்லற வாழ்க்கைக்குரிய பல அற வொழுக்கங்கள் கற்பிக்கப்படுகின்றன. ஒழுக்கம் விழுப்பந் தரும் உண்மையும், ஒழுக்க மேம்பாடுடையார் உலகினரால் போற்றப் படுஞ் சிறப்பும், பெண்களின் கற்பு நிலையும், இறைவன் இன்னருள் பாலிக்கு முறையுமாகிய அரிய விஷயங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன.

இந்நூல் முழுதும் ஆரிய மொழி விரவி நிற்பது படித்தற்குச் சிரமமாக இருத்தலால் இயன்ற வரை அவை விலக்கப்பட்டுத் தூய தமிழில் வாக்கியங்கள் ஒழுங்காயமைய எழுத்துப்பிழைகளின்றித் திருத்தியச்சிடப் பெறுமாயின் உலகிற்கு உபகாரமாயிருக்குமெனெ எண்ணுகின்றோம்.

இதன் விலை ரூபா 1—4—0. வேண்டுவோர் லார்ட் அண்டு கம்பெனி, 32, ராஜப்ப செட்டித் தெரு, சென்னை, என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

## பத்திரிகைகள்

பாரதி :—ஸ்ரீ ரா. நாராயண ஸ்வாமி அவர்களை ஆசிரியராகக் கொண்டு உத்தம பாளையத்திலிருந்து வெளிவரும் பாரதி என்னும் உயரிய தேசிய மாத வெளியீட்டின் இதழ்கள் சில கிடைக்கப் பெற்றோம். அவ்விதழ்களின் முகப்பில் இந்தியர்களனைவரும் சமத்துவநெறிபற்றிச் சகோதரபாவம் பூண்டு சுதந்திரப் போர் தொடுக்கத் தயாராகி விட்டனரென்பதைத் தெள்ளத் தெளிய உணர்த்தும் சுதந்திர தேவியின் திருவுருவம் அழகு செய்து நிற்கின்றது. சென்ற டிஸம்பர் மாதத்தோடு ஓராண்டு வயது நிறையப் பெற்று இரண்டாமாண்டு தொடக்கத்தி லிருக்கும் பாரதியில் பல அரிய ஆராய்ச்சி விஷயங்கள் வெளியிடப் பெறுகின்றன. அத்தகைய நுண்ணிய ஆராய்ச்சிகள் பல கண்டு பிடித்த அறிஞர்களின் சரிதங்கள் பல விவகரிக்கப்படுகின்றன. உரை நடை எளிமை யுடையதாய் இனிமை பயப்பதாய் இலக்கியச் செறிவுடையதாய் வரையப்படுகின்றது. தமிழ் மக்களனைவரும் ஆதரித்து இதனை உயர் நிலைக்குக் கொணர வேண்டுமென்பது எமது பேரவா. வருட சந்தா ரூபா இரண்டு. விலாசம் :—மானேஜர், "பாரதி", உத்தம பாளையம் மதுரை ஜில்லா.

உண்மை விளக்கம்:— இது விருது நகரிலிருந்து வெளியிடப் பெறும் ஓர் மாதப் பத்திரிகை. திரு. பூ. மு. நாச்சியப்ப நாட்டாரவர்கள் இதன் ஆசிரியராவர். புதிதாக மூன்று மாதங்கட்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இப்பத்திரிகையில் மக்கள் அறிவும் அந்தஸ்தும் வாய்ந்து மேனிலை எய்தற்குரிய விஷயங்கள் பல இடம் பெற்றுள்ளன. இதன் வருட சந்தா ரூபா ஒன்று. மானேஜர், உண்மை விளக்கம் ஆபீஸ், விருதுநகர். என்ற விலாசத்திற் பெறலாம்.

விமோசனம் :— திருச்செங்கோடு ஸ்ரீ காந்தி ஆசிரமத்திலிருந்து வெளியிடப் பெறுகின்ற இம்மாத சஞ்சிகைக்குந் தேசிய உலகில் தமிழ் நாட்டுக் காந்தி என அழைக்கப்படும் ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியாரவர்கள் ஆசிரியராக இருக்கின்றனர். இது குடிப் பழக்கத்தை அறவே ஒழிக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு முற்றும் அது சம்பந்தமான பல அரிய விஷயங்களைத் தாங்கி வெளிவருகின்றது. அன்றாடம் கஞ்சிக்குக் கஷ்டப்படும் கூலி ஆட்களும் இக்குடிப் பழக்கத்தால் தங்கட்கும் நமது தேசத்திற்கும் முன்னேற்றத் துறையில் பெருந் தடைக் கற்களா யிருக்கின்றன ரென்பது எவரும் மறுக்க முடியாத உண்மையாகும். இப்பழக்கத்தை அறவே ஒழித்து ஏழைக் கூலிகட்கும், தேசத்திற்கும் விமோசனந் தரத் தோன்றிய இப்பத்திரிகைக்கு 'விமோசனம்' எனப் பெயரமைந்தது மிகப் பொருத்தமே யாம். இதனை ஒவ்வொருவரும் ஆதரிக்க வேண்டுவ தவசியம். வருட சந்தா ரூபா ஒன்று. காந்தி ஆசிரமம், புதுப்பாளையம், திருச்செங்கோடு என்ற விலாசத்திற் பெறலாம்.

கூட்டுறவு:—இப்பெயர் கொண்ட பத்திரிகையின் முதல் இதழ் கிடைக்கப் பெற்றோம். இது, கோயமுத்தூர் தமிழ்நாடு கூட்டுறவு பெடரேஷனது மாத வெளியீடு. உண்மையில் வருவாய் குறைந்து, கடன் மிகுந்து, துன்பக்கடலுளாழ்ந்து, கண்ணீரும் கம்பலையுமாய்க் கிடக்கும் கைத்தொழிலாளர், குடியானவர்களின் பொருளாதார நிலைமை சீர்பெற்றாலன்றி நம் நாடு முன்னேற மார்க்கமில்லை. அவர்களின் பொருளாதார நிலைமை சீர் பெறுதற்குக் கூட்டுறவு இயக்கங்களே துணைபுரியக் கூடும். ஆனால், இவ்வியக்கத்தின் உண்மை பொது ஜனங்களால் நன்கு உணரப்படாமையின் அநேக இடங்களில் கூட்டுறவு சங்கங்கள் நஷ்ட முறுகின்றன. எனவே கூட்டுறவு இயக்கத்தின் உண்மைகளைப் பொது மக்களிடையே உணர்த்துவதற்கு ஒரு சஞ்சிகை இன்றியமையாததே. இம்முறையில் நடைபெறும் இவ்வொரே சஞ்சிகையினை தேச நலம் கருதும் ஒவ்வொருவரும் ஆதரிப்பார்களாக. வருட சந்தா கிராம சங்கங்களுக்கு ரூ. 2-0-0 தனி நபர்களுக்கு ரூபா 4—0—0. விலாசம்:—மானேஜர், தமிழ்நாடு ஐக்கிய பெடரேஷன், கோயமுத்தூர்.

தமிழரசு :—நெடு நாட்களாய் அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட தமிழரசு என்னும் வாரப் பத்திரிகை சென்ற மாதம் வெளியிடப்பட்டது. இதற்குச் சீர்திருத்தச் செல்வர், திரு. மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள் ஆசிரியராக விளங்குகின்றனர். இந்து மதத்திலும், சமயங்களிலும் உள்ள ஆபாசங்களை மட்டும் அலசி எடுத்து அவற்றை மாசற்றனவாக்கி உலகம் ஏற்றுக் கொள்ளுமாறு செய்யவேண்டுமென்னும் நோக்கங் கொண்டு இப்பத்திரிகை வெளியிடப் பெறுகின்றதென்பது அதன் மூன்று இதழ்களையும் உற்றுணர்ந்தோர் அறிந்து கொள்ளலாம். இத்தகைய வெளியீடொன்று இக்காலத்திற்கு இன்றியமையாததே. டாக்டர்- திரு. M. மாசிலாமணி முதலியாரவர்கள் இதன் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் பெருங் கவனஞ் செலுத்தி வருவது போற்றத் தக்கதே. தமிழுலகம் இதனை விரும்பி ஏற்று எல்லா வகையிலும் தமிழரசு மேன்மையுறச் செய்யுமாக. வருட சந்தாரூபா 3—0—0. மானேஜர், தமிழரசு, வைத்தியநாத முதலி வீதி, சென்னை, என்ற விலாசத்திற் கெழுதுக.

### செந்தமிழ்ச் செல்வி.

தமிழ் மணங் கமழ்ந்து புலமைத் தேன் சொட்டும் தூய தேவாரங்களோடும், இன்பக் கண்ணிகளோடும், புத்தம் புதிய ஆராய்ச்சிச் செண்டுகளோடும், பன்னிறந்து லங்கும் உரைப் பூங்கொத்துக்களோடும் சிறந்த மங்கலப் பொலிவுடன் துலங்கும் 'செந்தமிழ்ச் செல்வி'யின் அ-ம் சிலம்பின் முதற் பரலின் இன்னோசை எமது செவி நிறைந்திருக்கின்றது. அன்பர்கள் செவியையும் அது இவ்விதம் நிரப்புமாக. 'செல்வி'யின் பதிப்பாளர்கள்—தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர், சென்னை. வருடச் சந்தா 4 ரூ.

### காலண்டர்கள்.

கரூர் பனியன் பாக்டரி A. அண்ணாமலை முதலியாரவர்களது 1930-ம் ஆண்டு காலண்டர் சில வரப்பெற்றோம். அவற்றின் மத்தியில் அழகிய வர்ணச்சாயலும் கண்கவர் வனப்பும் மிகுந்த பழனியாண்டவர் படம் மிளிர்கின்றது. காலண்டரின் உயர்வே அவர்கள் வியாபாரச் சிறப்பையும் பெருக்கத்தையும் காட்டுகின்றது. இவர்கட்கு எமது நன்றி உரித்தாகுக.

காஞ்சீபுரம் குமரன் பிரஸ்காலண்டர்கள் சில கிடைத்தன, நல்ல பெரிய எழுத்துக்களில் தமிழ் ஆங்கிலமாகிய இரு தேதிகளும் குறிக்கப்பட்டிருக்கின்றன. காலண்டர் மூவகை வர்ணங்களில் சுத்தமாகப்பதிப்பித்திருப்பது குமரன் அச்சுநிலையத்தின் மேன்மையை விளக்குகின்றது. இவர்கட்கும் நன்றி செலுத்துகின்றோம்.

### சைவப் பஞ்சாங்கம்.

திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்டுள்ள பிரமோதூத வருஷத்திய வாக்கிய சைவப் பஞ்சாங்கம் எமது பார்வைக்கு வந்துள்ளது. சைவராகப் பிறந்துள்ள ஒவ்வொருவர் இல்லத்திலும் இப்பஞ்சாங்கம் இருக்கவேண்டுமென்பது எமது கொள்கை. சாதாரணமாகப் பஞ்சாங்கங்கள் கணிப்பவர்கள் சைவ சித்தாந்திகளாக இல்லாமையாலும், தமிழில் பற்றும் புலமையு மற்றவர்களாக இருப்பதாலும், சைவர்கள் அநுஷ்டிக்கும் விரதாதிகள் குறிப்பிடப் படாமலும், குறிப்பிடப் பட்டுள்ளவையும் சிவாகம முறையைப் பின் பற்றாமலும் இருப்பதோடு தூய தெள்ளிய தமிழில் அவர்கள் கருத்துக்கள் அமையாமல் இருப்பதை நாம் காண்கின்றோம். பற்பல மதத்தினர் தத்தம் சம்பிரதாயங்களை யொட்டித் தனித்தனியே பிசாஞ்சங்கள் கணித்து வரும் இந்நாட்களில், சைவர்களுக்கென இச் சைவப் பஞ்சாங்கம் வெளிவந்துள்ளது மிகவும் போற்றற் பாலதே. மற்றும், பஞ்சாங்கத்தினைத் தாமாகவே பார்க்கத் தெரியாதவர்கள் இதர பஞ்சாங்கங்களை வைத்துக்கொண்டு இடர்ப்படுவது போலின்றி, இதைக் கையாள்பவர்கள் வெகு சுலபமாய்த் தமக்குத் தேவையான விஷயங்களை இதினின்றும் தெரிந்து கொள்வதற்கு வேண்டிய அனுகூலங்களோடு இது அச்சிடப் பெற்றுள்ளது.

இதன் விலை: தனிப்பிரதி வழவழப்பான காகிதம் 2 அணா. சாதாரணமான காகிதம் $1\frac{1}{2}$ அணா. 50-க்குமேல் வாங்குபவர்களுக்கு நூற்றுக்கு $33\frac{1}{3}$ தள்ளிக் கொடுக்கப்படும்.

### தமிழ் இன்கம்டாக்ஸ் ஆக்ட்.

இம்மகுடங் கொண்ட அழகிய புத்தகமொன்று எமது பார்வைக்கு வந்துள்ளது. ஆங்கில முணராத வியாபாரிகளும், பாங்கர்களும், நிலச்சுவான்தார்களும் இதைப் பெரிதும் பாராட்டுவார்கள் என்றே நம்புகின்றோம். வருமான வரி சம்பந்தமாக ஏற்பட்டுள்ள சட்டமும், அதைப் பொருத்த விதிகளும் வியாக்கியானங்களும், இதர விவரங்களும் இதில் வெகு தெளிவாக வரையப்பட்டுள்ளன. வருமான வரி விதிக்கப் பெறும் தமிழர்களுக்கு அது அவசியமான துணையாகும். இதன் விலை ரூபாய் 5.

கிடைக்குமிடம் : திரு. பி. என். சங்கர நாராயண பிள்ளை (ஆசிரியர்), பரமக்குடி.

# செங்குந்தர் கிளர்ச்சி

## இராமநாதபுரம் ஜில்லா

### மண்டல மாணிக்கம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்தின் மாபெருங் கூட்டம்.

நாளது 4-1-30ௗ இரவு 9-மணிக்கு இவ்வூர் செங்குந்தர் பாவடிக்கு எதிரேயுள்ள மடத்தில் செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்தின் 17-வது கூட்டம் சங்க நிர்வாக உப தலைவரும் தியாகவள்ளலுமான உயர் திருவாளர் சு. பா. பொன்னுசாமி முதலியாரவர்கள் தலைமையில் கூடிற்று. அவ்வமயம் திரு. மிகு. பு. க. அ. ராமசாமி முதலியாரவர்களது கடவுள் வணக்கம் பாடப்பட்டதும், தலைவர் முன்னுரைக்குப் பின் காரியதரிசியவர்களால் சென்ற கூட்டத்தின் நடவடிக்கைகள் வாசிக்கப்பட்டன.

கமுதி உபாத்தியைச் சங்கக் காரியதரிசி எம். வீராசாமி யவர்கள் மதுவிலக்கு விஷயத்தைப் பற்றி உதாரணக் கதைகளுடனும் உருக்கமான பாக்களுடனும் அரிய உபந்யாசம் செய்தனர். பின்னர் அருப்புக்கோட்டை T. கருப்பய்யா அவர்கள் சங்கமும் பத்திரிகையும், தற்கால செங்குந்தர் நிலைமை முதலிய பொருள்பற்றி அரிய சொற்பெருக்கிட்டனர். அன்னார் பிரசங்கம் கேட்டதின் பயனாக 1930ம் ஞூம் புதிதாக சங்கத்துக்குப் பத்திரிகைகள் கீழ்க் கண்டவர்கள் தரவழைத்துக் கொடுக்கத் தயாரானது மிகவும் போற்றத்தக்கதேயாகும். பின் காரியதரிசியவர்களது தலைவர்களுக்கும் பிரசங்கிகளுக்கும் வந்தன உபசாரங்கூறிக் கற்கண்டு தாம்பூலம் வழங்கப்பட்டு இரவு 12 மணிக்கு கூட்டம் இனிது கலைவுற்றது.

புதியதாகப் பத்திரிகை தரவழைத்துத் தருவோர்.

ஸ்ரீமான் மு. ஆ. பாதப்பிரிய முதலியாரவர்கள் — தினசரி சுதேசமித்திரன்.

,, சு. பா. பொன்னுசாமி முதலியாரவர்கள் — தினசரி திராவிடன்.

,, இ. மா. பெருமாள் முதலியாரவர்கள் — வாரப்பதிப்பு முன்னேற்றம்.

,, வெ. மு. கிருஷ்ணசாமி முதலியாரவர்கள் — ஷை நவசக்தி.

,, ப. சி. மு. மூக்க முதலியாரவர்கள் — ஷை தேசபந்து.

,, இ. முனியப்ப முதலியாரவர்கள் — ஷை குடி அரசு,

,, மு. பாதம்பிரியா முதலியாரவர்கள் — ஷை தமிழரசு.

,, கு. பெ. முத்துசாமி முதலியாரவர்கள் — மாதப்பதிப்பு தேசோபகாரி.

,, அ. இ. மு. கதிர்வேல் முதலியாரவர்கள் — ஷை பித்தன்.

,, சு. வெ. சண்முகவேல் முதலியாரவர்கள் — ஷை அமிர்தகுணபோதினி.

இ. முனியப்ப முதலியார்,
காரியதரிசி.

---

### சங்கத்தின் மாபெரும் விசேஷக் கொண்டாட்டம்

9-2-30 மாலை 3-மணிக்கு இவ்வூர்ப் பாவடிக்கெதிரிலுள்ள மடத்தில் முன் கூட்டத்தின் தீர்மானப் பிரகாரம் வாத்தியங்களுடனும், பள்ளி மாணவர்களுடனும் இன்று நடக்க இருக்கும் சங்கத் திறப்பு விழாவின் வரவேற்புச் சபைத் தலைவர் ஸ்ரீமான் அ. கி. கோபால் முதலியார் அவர்கள் இல்லத்திற்குத் திரளான ஜனங்கள் சென்று அவரையும், சங்கத் தலைவர் ஸ்ரீமான் கருணை வள்ளல் மு. ஆ. பாதம்பிரியா முதலியார் அவர்களையும், நம் குலப் பெரியார்களான ஸ்ரீமான்கள் நா. ம. கலியாணி முதலியார், ஆ. சு. முனியாண்டி முதலியார், திறப்புவிழாத் தலைவரும், சிவன் கோயில் தர்மகர்த்தா முத்துப் பண்டித முதலியார் சகோதரர் இரு மொழி வல்லார் மு. கை குருசாமி முதலியார், சங்கத்தைத் திறந்து வைக்கும் தலைவர் அம்பலம் (நாட்டாண்மை) இ. சாமிநாத முதலியார், கங்காகுல வாலிபர் சங்கத்து உபதலைவர் வெ. இ. பிச்சமுத்துப் பிள்ளை ஆகியவர்களை ஆடம்பரத்துடன் ஊர்வலமாக வரவேற்று அழகு பெற அமைத்திருக்கும் சிங்காரக் கொட்டகைக்கு வந்ததும் குறித்த நேரத்தில் அம்பலம் ஸ்ரீமான் இ. சாமிநாத முவலியார் அவர்கள் ஜே! கோஷ்டத்திடையே சங்கத்தைத் திறந்து வைத்தார்கள்.

தலைவர்களும், எனைய கனவான்களும் சங்கக் கட்டடத்திற்குள் பிரவேசித்து ஆசனங்களில் அமர்ந்ததும், காரிய தரிசியவர்கள் கூட்டத்திலுள்ளவர்களுக்குத் தலைவர்களை அறிமுகம் செய்வித்தார். ஸ்ரீமான் அம்பலம் இ. மு. சித்திரவேல் முதலியார் அவர்கள் ஸ்ரீமான் மு. கை. குருசாமி முதலியார் அவர்களை இக்கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும்படிப் பிரேரேபிக்கத் தலைவர் அவர்கள் தமதாசனத்தமர்ந்தார்கள். திரு. பு. க. அ. ராமசாமி முதலியார் அவர்களால் கடவுள் வாழ்த்துப் பாடப்பட்டது. பின்னர் தலைவரவர்கள் அவையடக்கமும், நன்றியறிதலும், முன்னுரையும் கூறிய பிறகு உப காரியதரிசி அவர்களால் சென்ற கூட்டத்தின் நடவடிக்கைகள் வாசிக்கப்பட்டதும் ஸ்ரீமான் இ. முனியப்ப முதலியார் அவர்கள் சங்கத்தைத் திறந்து வைத்த தலைவரவர்களுக்கும், விழாத் தலைவரவர்களுக்கும் நல்வரவேற்புப் பத்திரங்கள் வாசித்துக் கொடுத்தார்.



பின் நிகழ்ச்சிக் குறிப்பின்படி ஸ்ரீமான்கள் சு. வெ. குருசாமி முதலியார், வெ. மு. கிருஷ்ண முதலியார் இருவரும் முறையே 'வாலிபர் இயக்கம்' 'நமது முன்னேற்றம்' என்பவை குறித்து ஜனங்களுக்குப் புத்துணர்ச்சி உண்டாகுமாறு சொற்பெருக் காற்றினர்கள். காரியதரிசி அவர்கள் 'தங்கத்தாலாகா தெனினும் சங்கத்தாலாகும்' என்பது போன்ற பல பழமொழிகளையும் மேற்கோள்களையும் எடுத்துக்காட்டி 'சங்கமும் பத்திரிகையும்' என்பதைப்பற்றி அரியதோர் சொற்பொழிவுசெய்தார்.

அதன் பின் தலைவரவர்கள் நாம் கல்வியில் முன்னேற்ற மடைந்த எல்லாத் துறைகளிலும், முன்னேற்ற மடைவோமென்றும், அதுபற்றியே நமது தலைச்சங்கம் நம் இளைஞர்களைக் கல்வியில் பயில்விக்க முயன்று வருகிறதென்றும், கல்வி பயில்விக்கும் முறை இன்னின்னதென்றும் தெளிவாக விளக்கித் தமது முடிபுரையை யாற்றி வரவேற்புப் பத்திரத்திற்குப் பதிலு முரைத்தார்கள். சங்கத்தைத் திறந்து வைத்த பெரியார் தமக்கு உவந்தளிக்கப் பெற்ற குலத் தொண்டிற்கு நன்றியறிதலையும் வரவேற்புப் பத்திரத்திற்குப் பதிலும் கூறி இடமில்லாதிருந்து குலத் தொண்டாற்றி வந்த சங்கத்திற்கு ஊரார் அபிமானித்து இடம் தந்ததற்காகச் செங்குந்த சமூகச் சார்பாக நன்றியறிதலையும் கூறிச் சங்கத்தில் அபிமானமில்லாதவர்கள் செங்குந்தர்கள் ஆகார் என்றும் மற்றும் பலவாறுகவும் நம்மவர்களுக்கு ஊக்க முண்டாகுமாறு வற்புறுத்திப் பேசினர். வந்தனோபசாரத்துடன் கூட்டம் இரவு 7 மணிக்குக் கலைவுற்றது.

இ. முனியப்ப முதலியார்,
காரியதரிசி.

---

### ம-ா-ா-ஸ்ரீ செங்குந்தமித்திரன் ஆசிரியரவர்களுக்கு

### மண்டல மாணிக்கம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.

நாளது 8-2-30 இரவு 11—
மணிக்கு செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்தின் விஷயாலோசனைக் கூட்டம் ஸ்ரீமான் வெ. மு. கிருஷ்ண முதலியாரவர்கள் தலைமையின் கீழ் கூடிற்று. அவ்வமயம் காரியதரிசி இ. முனியப்ப முதலியாரவர்கள் நமது சங்கமானது நாளதுவரை தங்க இடமில்லாமலிருப்பதை நம் செங்குந்த உறவின் முறையார் கண்டு சங்கத்தின் மேல் நல்லபிமானம் கொண்டு ஊர் பொதுவான கட்டிடமொன்றை அச்சங்கத்துக்கென அழகு பெறச் செப்பனிட்டு கொடுத்திருப்பதில் நாளை ஞாயற்றுக் கிழமை, நன்முகூர்த்த நாளாய் இருப்பதால் அந்நாளில் நம் சங்கத்தைத் திறந்து வைக்கவும் அத்திறப்பு விழா வைபவத்திற்கு நம்மவர்களில் தக்க பெரியோர்களை வரவழைக்கவும் ஏற்பாடு செய்ய வேணுமென்று சொன்னார்கள். அதன் பின் அம்பலம் இ. மு. சித்திரவேல் முதலியாரவர்கள் நாளை வைபவத்தை முறையோடு நடத்த வரவேற்பு சபைத்தலைவர், காரியதரிசி, பொக்கிஷதார், கமிட்டி மெம்பர்கள் நியமிக்க வேண்டுமென்றும் ஸ்ரீமான் சு. வெ. குருசாமி முதலியாரவர்களால் ஷை கமிட்டியாருக்கு ஒவ்வொரு வேலைத் திட்டம் செய்ய வேண்டுமென்றும் பேசி முடிந்த பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறி கூட்டம் 1 மணிக்கு இனிது கலைவுற்றது.

---

#### தீர்மானங்கள்

1. நமது சங்கமானது தங்கி இருப்பதற்கு நம் உறவின் முறையார் சங்கத்தின்மேல் நல்லபிமானம் கொண்டு இடவசதி தேடிக்கொடுத்து செப்பனிட்டு வைத்திருப்பதற்கு இச்சங்கம் நன்றி பாராட்டுவதைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

2. சங்கத்தைத் திறந்து வைக்க நம் உறவின் அம்பலம் ஸ்ரீமான் இ. சாமிநாத முதலியாரவர்களையும், திறப்புவிழாக் கொண்டாட்டத்திற்கு தலைமை வகிக்க இவ்வூர் இருமொழி வல்லார் K.குருசாமி முதலியாரவர்களையம் தேர்ந்தெடுத்திருக்கிறது.

3. விஷயாலோசனை கமிட்டியார்கள் :—வரவேற்புச் சபைத்தலைவர் ஸ்ரீமான்கள் அ. கி. கோபால் முதலியார், இ. முனியப்ப முதலியார், சு. வெ. குருசாமி முதலியார், நா. க. நாகலிங்க முதலியார், மு. பாதம்பிரியா முதலியாரும்—கமிட்டி மெம்பர்கள் வெ. மு. கிருஷ்ண முதலியார், ப. சி. மு. மூக்க முதலியார், சு. பா. பொன்னுசாமி முதலியார், இ. மு. சித்திரவேல் முதலியார், கு. பெ. முத்துச்சாமிமுதலியார், மு. ந. பொன்னுசாமி முதலியார், ஷாப் வியாபாரம்—

4. நாளைய வைபவத்திற்கு நம் கனவான்களான சங்கத் தலைவர் ஸ்ரீனிவாசன் மு. ஆ. பாதம்பிரியா முதலியார் ஸ்ரீ. நா. ப. கலியாண முதலியார் ஸ்ரீ. ஆ. சு. முனியாண்டி முதலியார் கங்காகுல வேளாளர் அபிவிருத்தி சங்கம் உபத்தலைவர் வெ. இ. பிச்சமுத்துப் பிள்ளையவர்களையும் மரியாதையுடன் வரவேற்க வேண்டும் என்று தீர்மானமாகி இரவு 1 மணிக்கு காரியதரிசியவர்களால் கூட்டம் கலைவுதல் செய்யப்பட்டது.

இ. முனியப்ப முதலியார்,
செகரட்டரி.

---

### மண்டல மாணிக்கம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்தின் 18-வது மாதாந்தரக் கூட்டம்.

நாளது 10-2-30ௗ இரவு 9-மணிக்கு சங்கக்கட்டிடத்தில் இச்சங்கத்தின் 18-வதுமாதாந்தரக்கூட்டம் தலைவர் ஸ்ரீமான் மு. ஆ. பாதம்பிரியா மூதலியாரவர்கள் தலைமையின் கீழ் கூடிற்று. அவ்வமயம்

திரு. சி. மு. முருகலிங்க முதலியாரவர்களால் கடவுள் வணக்கம் பாடப்பட்டு தலைவர் முன்னுரை யானதும் காரியதரிசியவர்களால் சென்ற கூட்டத்தின் நடவடிக்கைகள் வாசித்துக்காட்டப்பட்டன. பின் அம்பலம் ஸ்ரீமான் இ. மு. சித்திரவேல் முதலியாரவர்களால் "ஒழுக்கம்" என்பது பற்றி உதாரணங்களுடன் கேட்டவர் மனம் நாட்டமுறத்தக்கதாக தாஷ்டீகத்துடன் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

அதன்பின் ஸ்ரீமான் இ. முனியப்ப முதலியாரவர்களால், இச்சங்கம் இனிச்செய்ய வேண்டிய வேலைகளைப்பற்றியும், சங்கத்தின் சட்டதிட்டங்களைப் பற்றியும் விரிவாகப் பேசியபின் கீழ்க்கண்ட தீர்மானங்களைக் கூட்டத்தில் பிரேரேபிக்க அதை ஸ்ரீமான் மு. பாதம்பிரியா முதலியாரவர்கள் ஆமோதிக்க ஏகமனதாய் நிறைவேற்றப் பெற்ற ஏகமனதாய் வந்தன உபசாரம் கூறப்பட்டு கூட்டம் இரவு 11-மணிக்கு கலைவுற்றது.

---

## திர்மானங்கள்

1. இச்சங்கமானது முட்டின்றி நடப்பதற்கு ஏற்படுத்தியுள்ள சந்தாவை வசூல் செய்யும்படி ஸ்ரீமான் மு. பாதம்பிரியா முதலியாரவர்கள் மாசி௴ 30௳ வரை திரு. வெ. மு. கிருஷ்ண முதலியார், திரு. ப. சி. மு. மூக்க முதலியாரவர்களையும் வசூல் செய்து கொடுக்கும்படி நியமிக்கிறது.

2. சங்கத்திற்கு அங்கத்தினராக ஸ்ரீமான் அம்பலம் இ. மு. சித்திரவேல் முதலியாரவர்கள், திரு. சொ. குருசாமி முதலியார், திரு. பு. க. அ. ராமசாமி முதலியார், திரு. சா. கண்ணப்ப முதலியார் திரு. சி. மு. முருகலிங்க முதலியாரவர்களை சேர்த்துக்கொள்ள வேணுமென்று தீர்மானிக்கிறது.

3. சங்கத்துக்கு தாப்புக்கூலி ரூ 1, 4 அணா கொடுக்கும் படிக்கு இவ்வூர் மூக்காயி அம்மாளை நியமிக்கிறது.

4. சங்கத்தை திறந்து வைத்தல் தீபம் போடல் முதலிய திருப்பணியாற்ற திரு. சொ. குருசாமி முதலியாரவர்களை ஏற்படுத்துகிறது.

5. சங்கத்தின் தினசரிப் பத்திரிகைகளை தபால் வந்ததும் போய் வாங்கிவர திரு. மு. பாதம்பிரியா முதலியாரவர்களை திட்டம் செய்திருக்கிறது.

6. சங்கத்தில் இருக்கும் பத்திரிகைகளை மறுதினம் ஒழுங்கு முறையுடன் எடுத்துவைக்க திரு. சு. வெ. குருசாமி முதலியாரவர்களை நியமித்திருக்கிறது.

7. சங்கத்துக்கு வேண்டும் சாமான்கள் வாங்கி வரவும், சேகரிக்கவும் திருவாளர். நா. க. நாகலிங்க முதலியாரவர்களை ஏற்படுத்தி இருக்கிறது.

8. சங்கசம்பந்தமான சகல ரிக்கார்டுகளையும், கடிதப்போக்கு வரத்துகளையும் கவனித்துவர திரு. இ. முனியப்ப முதலியாரவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது.

தங்கள்
இ. முனியப்ப முதலியார்.

---

## ராமநாதபுரம் ஜில்லா

### செங்குந்த வாலிபர் சங்கம் ஸ்ரீ வில்லிபுத்தூர்.

10-1-30௳ இரவு 8-மணிக்கு ஸ்ரீ ஆனந்த விநாயகர் ஆலயத்தில் திரு. சு. மறையாண்டி முதலியார் அவர்கள் தலைமையில் சங்கப்பொதுக் கூட்டம் ஒன்று கூடிற்று. கடவுள் வணக்கத்துக்குப் பின் திரு. ச. சோமசுந்தர முதலியார் அவர்கள் 'சாதிப் பெருமையைச் சாற்றித்திரிவதேன்' என்பது பற்றி பேசுகையில் ஒவ்வொரு நாடும், சமூகமும் தற்கால கல்வி பயின்று அறிவை வளர்த்து வரும் சமயத்தில் நம் சமூகத்தவர் மாத்திரம் மோக்ஷத்திற்கு வழிதேடுவதாகச் சொல்லிக்கொண்டு சாதிப்பெருமையைப்பாராட்டிக்கொண்டு அவற்றிற்கு அடிப்படையான அறிவும், ஒழுக்கமுமின்றி பிறர் எள்ளி நகையாடுமாறு பிற்போக் கடைந்து வருகின்றனர் என்றும், முருகன் சகோதரர் என்று சொல்லிக் கொண்டு தீயநடையுடையவர்களாயிருத்தல், விளக்கென்று சொன்ன மாத்திரத்தில் இருள் நீங்கி விடும் என்று எண்ணும் குருடன் கொள்கையை ஒத்திருக்கிறதென்றும், நன்மை தீமையறியாது பழமை பாராட்டுவது தகுதியல்ல, பழையன கழிதலும், புதியன புகுதலும், தவறல்லவாகையால் காலப் போக்கிற்கிணங்க நாம் முன்னேற்றமடைய முயலவேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறியது பாராட்டத்தக்கது. பின் சிவசுப்பிரமணிய முதலியார் அவர்கள் மதசீர்திருத்தம் செய்ய வேண்டிய அவசியத்தைப் பற்றிப்பேசினார். கடைசியாக திரு. ரு. சுப்பையா முதலியார் அவர்கள் ஜீவகாருண்யத்தைப் பற்றி விரிவாகப் பேசினார். தலைவர் முடிபுரைக்குப்பின் இரவு 12 மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

காரியதரிசி
தி. சுப்பையா முதலியார்.

---

### செங்குந்த வாலிபர் சங்கம் ஸ்ரீ வில்லிபுத்தூர்.

7-2-30௳ இரவு 7-மணிக்கு ளைப் பெருமாள் பட்டித்தெரு ஆனந்த விநாயகர் ஆலயத்தில் திரு. S. பால்வண்ணம் அவர்கள் தலைமையின் கீழ் டி சங்கத்தின் மூலமாக ஒரு பொது கூட்டம் கூட்டியது.

கடவுள் வணக்கத்துக்குப்பின் திரு. ச. சோமசுந்தர முதலியார் அவர்கள் 'எது வேண்டும் எது வேண்டாம்' யென்பது பற்றி நீண்டதோர் சொற்பொழி வாற்றினார். அதன் சாராம்சம் பின் வருமாறு.



சகோதரர்களே!

வேண்டுவன வேண்டாதன யென்பதற்கு உதாரணமாக ஒரு நெல்லை யெடுத்துக் கொண்டால் நமக்கு வேண்டாதனவாகிய உமியை முதலிலேயே விலக்கி விட்டுப்பின்பு நமக்கு வேண்டுவனவாகிய அரிசியை எவ்விதம் சேர்த்து வைத்துக் கொள்கிறோமோ அது போன்று நமது இல்வாழ்க்கைக்கு வேண்டாதனவாகிய மூடபழக்க வழக்கங்களை வேரற அடித்துத் துரத்தி விட்டுப்பின்பு நமது இல்வாழ்க்கைக்கு வேண்டுவனவாகிய அறிவின்வளர்ச்சியைச்சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டியது நமது கடமையாகுமாகையால் வேண்டாதனயென்பதைச் சிறிது ஆராய்வோம். அதாவது புலை, கொலை களவுகள், காமம் என்பதாகும். கொல்லான் புலாலை, மருத்தானைக்கை கூப்பியெல்லா உயிரும் தொழும் என்பதற்கிணங்க புலாலைப் புசிப்பதனால் உண்டாகும் நன்மை தீமை இன்னதென்றும் கொலை செய்வதனால் உண்டாகும் நன்மைதீமை இன்னதென்றும் கொலை செய்வதற்குக் காரணம் இன்னதென்றும் களவு செய்வதால் ஏற்படும் துன்பங்களையும் கள். சாராயம், கஞ்சா, அபின் சாப்பிடுவதனால் ஏற்படக் கூடிய கஷ்டங்கள் இன்னதென்றும் அறியாது கையாள்கின்றவர்களால் நமது சமூகத்திற்கு ஏற்படும் இழிசெயல்களையும் அனேக திருஷ்டாந்திரங்களுடன் விளக்கிக்காட்டிப் பின்பு வேண்டுவனயென்னும் அறிவின் வளர்ச்சிக்குக் கல்வியை விருத்தி செய்ய வேண்டும். அன்னிய நாடுகளெல்லாம் கல்வியினால் தான் முற்போக்கடைந் திருக்கிறதென்றும் நமது சமூக முன்னேற்றத்திற்கும் நமது நாட்டின் முன்னேற்றத்திற்கும் கல்வியே இன்றியமையாததென்றும் நமது சமூக முன்னேற்றத்திற்கு நம்முடைய செங்குந்தர்கள் வசிக்கும் ஒவ்வொரு கிராமங்களிலும் சங்கங்கள் யேற்படுத்த வேண்டுமென்றும் சங்கத்தினால் நமக்கு ஏற்படும் நன்மைகளையும் அநேக உதாரணங்களோடு விளக்கிக் காட்டினார். பின்பு திரு. நி. கு. சிவசுப்பிரமணிய முதலியாரவர்களும் திரு. ரு. சுப்பைய்யா முதலியாரவர்களும் 'பொது விஷயம்' யென்பது பற்றி நீண்டதோர் சொற்பெருக்காற்றினார்கள். பின் திரு. ஆ. ராமசாமி முதலியாரவர்கள் 'உண்மை பக்தி வாய்மை' யென்பதுபற்றியும் நமது சமூகத்தினிடையேதோன்றும் குறைபாடுகளையும் டி குறைபாடுகளை யொழிக்கக் கூடிய வழிகளையும் இவ்விஷயங்களில் நம் வாலிபர்கள் ஊக்கமாக நின்று உழைக்க வேண்டுமென்றும் நமது பெரியோர்கள் நமது சிறுவர்களை சிறுபோதிலேயே பள்ளிக்கு அனுப்பவேண்டு மென்றும் நன்மையான எக்காரியங்களுக்கும் நமது வாலிபர்கள் ஊக்கமாக நின்று நமது சமூகத்தினுடைய அறிவின் வளர்ச்சியை விருத்திசெய்ய வேண்டுமென்றும் பேசினார். கடைசியாக தலைவர் முடிவுரையுடன் கடவுள் வாழ்த்துப்பாடினதும் வந்தோபசாரத்துடன் சந்தண தாம்பூலம் கற்கண்டு வழங்கப்பெற்று இரவு 10-30-க்கு கூட்டம் இனிது கலைந்தது.

T. சுப்பையா முதலியார் காரியதரிசி.



## வடசித்தூர் செங்குந்தர் சங்கம்.

16-2-30௳ பகல் 3-மணிக்கு சங்கத்தின் 2-வது கூட்டம் திரு. கல். பல். குப்பண்ண முதலியார் அவர்கள் கட்டடத்தில் சங்கக் காரியதரிசி அவர்கள் தலைமையில் கூடிற்று. அச்சமயம் கோதாவரி, நல்லிபட்டி பாளையம், பனப்பட்டி, பொன்னுக்காணி முதலிய பல கிராமச் செங்குந்தர்கள் வந்திருந்தார்கள். திரு. S. காளியண்ணன், திரு. P. அங்கப்ப முதலியார், திரு. K. V. அப்பாச்சி முதலியார் ஆகியவர்கள், 'ஊக்கம்' 'மதுவிலக்கு', 'ஒற்றுமை', 'நமது சங்கம்' என்பவைபற்றி அரிய உபந்யாசங்கள் செய்தனர்.

### நிறைவேறிய தீர்மானங்கள்

1. இச்சங்கத்தின் தலைவர்கள், பொக்கிஷதார் காரியதரிசிகள் மாதம் ஒன்றுக்கு இரண்டணாவும், மற்ற அங்கத்தினர் தங்களிஷ்டம் போல் சங்க உண்டியில் போடலா மென்றும்,

2. அடுத்த மாதம் முதல் சந்தா வசூலிக்கப்பட வேண்டு மென்றும்,

3. செட்டிப்பாளையத்திலிருந்து வடசித்தூர் மார்க்கம் நெகமத்துக்குப் போடும் புது ரோட்டைச் சந்தை மார்க்கம் போட ஏற்பாடு செய்யத் தலைச் சங்க மூலமாய் இச்சங்கம் ம-ா-ா-ஸ்ரீ கோவை தாலுக்கா போர்டு பிரசிடெண்டு துரையவர்களை விண்ணப்பித்துக் கேட்டுக் கொள்ளவேண்டு மென்றும்,

4. பங்குனி௴ 3௳ அடுத்த கூட்டம் நடைபெற வேண்டு மென்றும், இன்னின்னார் இன்னின்ன விஷயங்களைக் குறித்து பேசுவதென்றும், தீர்மானிக்கப்பட்டது.

தலைவர் முடிபுரைக்குப்பின் கடவுள் வாழ்த்தோடும் வந்தனோபசாரத்தோடும் மாலை 6 மணிக்குக் கூட்டம் கலைந்தது.

உபாத்தியாயர் கே. சி. பழனியப்ப முதலியார்,
காரியதரிசி.

இம்மாதப்பத்திரிகையில் நமது பிற கிளைச்சங்கக் கூட்டங்களின் விபரங்கள் அனைத்தும் வெளியிட இடமில்லாமையால் அடுத்த மாதத்திற்கு நிறுத்தி வைத்துள்ளோம் ப-ர்.

---


### கல்வி நிதிக்கு நன்கொடை

வண்டியூர் செங்குந்த சங்கத் தலைவர் திருவாளர் மா. குப்புசாமி முதலியார் மதுரை ஜவுளி வியாபாரம் லோ. அ. ரெ. கோ. அண் பிரதர்ஸ் ஏஜெண்டு அவர்களால், கல்வி நிதிச் சீட்டின் பிரைஸ் விழுந்த 10-அணாவைக் கல்வி நிதிக்காக தலைச் சங்கத்திற்குக் கொடுத்து விட்டார். அவர் பெருந்தன்மையைப் போற்றத் தகுந்தது.

### கலியாண நன்கொடை

மலையாளம் ஜில்லா கொல்லங் கோட்டில் திருவாளர். எஸ். முத்துவேல் முதலியார் அவர்கள் புதல்வி திருநிறைச் செல்வி மீனாக்ஷி அம்மாளுக்கு சுக்கில௵ தை௴ 8௳ (10—2—30) நடந்த திருமணத்தில் நமது தலைச் சங்கத்திற்கு மனமு வந்து அளித்த நன்கொடை ரூபா 5.

# 2-15-0 பௌண்டன் பேனு ரூ. 2-15-0




நீங்கள் கனவிலும் நினைக்கமுடியாத குறைந்த விலை!

இங்கிலாந்தில் செய்து மாக்ஷிமைதங்கிய 5-ம் ஜார்ஜ் சக்கரவர்த்தியால் புகழ்பெற்றுப் பிரக்யாதியடைந்த ரிஜிஸ்டர் ஒW.B. பௌண்டன் பேனு தங்க ப்ளேட் நிப்பு போட்டது. இதை வாங்குபவர்களுக்கு எக்காலமும் ஓடக்கூடிய மூன்று வருஷம் உத்தரவாதமுள்ள லீவர் பாக்கெட்வாட்சு இனமாய் அனுப்பப்படும். W. B. பவுண்டன் பேனும் கடியாரமும் விலை ரூ. 2—15—0.

(13) C

THE KRISHNA AGENCY,
119, G. P. O. Madras.

---

மாதம் **100** ரூபாய் முதல் **500** ரூபாய் வரை சம்பாதிக்கலாம்

# கைத்தொழில் முறைகள்

(திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு)

இந்நூலின் முதற்பதிப்பு 2000 பிரதிகள் சில மாதங்களில் விற்றுப்போயின; இந்தியாவின் வறுமையையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் சூரியனை கண்ட பனிபோல் போக்கக் கூடிய அரிய புஸ்தகம், சோப்புகள், மெழுகுவர்த்திகள், பிஸ்கத்துகள், இங்கிகள், தீக்குச்சிகள், சகலவிதமான வாசனை சாமான்கள், மருந்துகள் இதுபோன்ற 1000 இரகசிய முறைகள் இந்நூலின் அடங்கியிருக்கின்றன. பிறர் உதவியின்றி நாமே தொழில் செய்து சம்பாதிக்கத்தக்க அரிய போதனைகள் அடங்கிய இந்நூலுக்கு விலை மிகவும் சொற்பம் என்பதைக் கவனியுங்கள்.

300 பக்கங்களுள்ளது. ஏரோப்ளேன் டிரேட் மார்க் உள்ளது. விலை ரூபா 1—8—

வாஸன் புஸ்தகசாலை, **244**, தங்கசாலை வீதி, மதராஸ்.

---

# ஆனந்த விகடன்

(**12000** சந்தாதாரர்களுடையது)

64-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனில் ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதாரர். நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக் கூடாதா? தபால் கூலியுள்பட இந்தியா, பர்மா, சிலோனுக்கு வருடசந்தா ரூ 1—0—0 அயல் நாடுகளுக்கு முன் பணம் ரூ. 1—4—0

மாதிரி காப்பி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,

தந்தி விலாசம்;—"விகடன்", சென்னை. 244, தங்கசாலை வீதி, மதராஸ், டெலிபோன் 3321

---

எல்லாவித தமிழ்ப் புத்தகங்களும் கிடைக்குமிடம்:—

# சவுத் இந்தியன் புக் டிபோ,

நெ. 2-17 பவழக்காரத் தெரு, சென்னை.



...ளுள் மருந்துச்சாலை கடந்த 25 வருடகாலமாய் உள்ளூரிலும், வெளியூரிலும் அநேக வைத்...ளும் நோயாளிகளுக்கும் மருந்துகள் செய்து அனுப்பி அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்று...கிறது. அநேக நண்பர்கள் இவ்வளவு சிறந்த மருந்துகள் வெளியூர்களிலுள்ள நண்பர்களுக்குப் பயன...காமல் போய்விடுகிறதென்பதை உணர்ந்து வற்புறுத்திச் சொன்னதின்மேல்விளம்பரம் செய்யமுன்வ...ளாம். நண்பர்கள் பலரும் எங்களுடைய மருந்துகளை யாதொரு பயமுமில்லாமல் வாங்கியுண்டு...மைந்து எங்களை மேன்மேலும் ஊக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

முதலாவதாக நாட்டுமக்கள்-ஒவ்வொருவரும் திடகாத்திர முள்ளவர்களாக விளங்க வேண்டுவது...சியம். தற்கால இளைஞர்கள் பாலிய சேஷ்டையாலும் மிதமிஞ்சிய போகத்தாலும் உடல் நலன் கெட்...செல்லரித்த மூங்கில்போல் மேலே மனிதராகவும் உள்ளே ஆண்மை இழந்த நிர்ப்பாக்கிய நிலைமை...ம் இருக்கிறார்கள்; இவர்களுக்கும், ஜுரம் முதலியவைகளால் பீடிக்கப்பட்டு ரத்தம் கெட்டுப் பலம்...றி இருப்பவர்களும், சாதாரணமாய் பல முள்ளவர்களாய், வீரிய முள்ளவர்களாய் இருக்க விரும்பும்...வொரு ஆண் பெண் இருபாலர்க்கும், உலகவாழ்க்கையின் இன்பத்துக்கும், ஆண் சிங்கம் போன்ற பலம்...வதற்கும்,

## ...ராயணசஞ்சீவி லேகியமும் அயத்தங்கச்செந்தூரமும்

மிக்கச் சிறந்தவை என்று உறுதி கூறுகிறோம்.

லேகியம் செந்தூரம் சித்த வைத்திய முறைப்படி மிக ஜாக்கிரதையாயும் முறைதவறாமலும் செய்து...க்கப்பட்டது. வைத்திய முறைப்படி இதைக்காட்டிலும் சிறந்த பலம் தரும் மருந்து வேறொன்றில்லை.

## இந்த லேகிய செந்தூரங்களால் தீரும் முக்கிய வியாதிகள்.

தற்காலம் மானிட வர்க்கத்தை நிழல்போல் தொடர்ந்து அரிக்கும் 20 வகை மேகரோகங்கள்...ம், பித்த பாண்டு, சூலை, ஓடு வாய்வு, கை கால் முடக்கு, நெஞ்சு தொண்டை எரிச்சல், பித்த எப்பம்...ர்ணம், வயிற்றுப்பிசம், பசியின்மை, சோம்பல், நித்திரை வாராமை, நீர் இறங்கும்போது பொறுக்க முடி...யாதையைத் தரும் தந்திமேகம், தாது நஷ்டம், தேக உளைச்சல், கண்களில் நீர் வடிதல் முதலிய வியா...ள் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். பயங்கரமான மேகவியாதிகளைப் போக்கி தேகத்தைப் புஷ்டி...கிச் சப்த நரம்புகளும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்த விருத்தியை உண்டாக்கும்.

மனக் கவலையினாலாவது துர் அப்பியாசத்தாலாவது அடிக்கடிவரும் நோயினாலாவது மற்றெந்தக்...னத்திலாவது பலம் கெட்டவர்கள் நமது லேகிய செந்தூரங்களைச் சாப்பிடுவோர்களானால் அழகு தேகா...க்கியம், தேக வலிவு முதலியவற்றைக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யும். நோயுள்ளவர்...தான் இவற்றைச் சாப்பிடவேண்டுமென்பதில்லை. நோயிலாதவர்களும் இவற்றை ஆரோக்கியத்திற்...ச் சாப்பிடலாம். இதற்கு பத்தியமே கிடையாது. காலதேச வர்த்தமானமில்லாமல் எல்லா காலங்...ளும் சாப்பிடலாம். பசிஅதிகமாய் எடுக்குமாகையால் ஜீரணிக்கக்கூடியதும் கொழுமையுள்ளதுமான...ரங்களை வேளை தவறாமல் சாப்பிடவேண்டும். இச்சிறந்த லேகிய செந்தூரங்களை டைரெக்ஷனில்...சொல்லியபடி 48 நாள் சாப்பிடுவோர்களானால் அவை தேகத்தில் ஊறி மேகங்களை நெருப்புப்பொறி பட்ட...பஞ்சுப் பொறியென நாசம் செய்து, புதிய ரத்தத்தை உற்பத்தி செய்து தேகத்தை இளைக்காமலிருக்கச்...செய்யும். இவற்றை ஒற்றுமையாய் மனைவியும், கணவனும் ஏககாலத்தில் சாப்பிட்டால் அவர்களுக்கு...உற்பத்தியாகும் குழந்தைகள் மிக அழகாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும்.

24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் ஒரு புட்டி செந்தூரமும் ரூ. **2-4-0**. தபால்செலவு அணா 6. ...நாள் மருந்து தபால் சார்ஜ் உள்பட ரூ. 4-12-0,

...பினாங்கு, சிங்கப்பூர், செட்டால் முதலியவெளிநாடுகளுக்கு24-நாள் மருந்து தபால்சார்ஜ் உள்பட 3-8-0. 48-நாள்மருந்து ரூ.6-4-0. வெளிநாட்டு அன்பர்கள் பூராவும் முன்பணமாகவே அனுப்பவேண்டும்.

...ராயண சஞ்சீவித்தைலம்:—பச்சிலை, மூலிகைகளாலும் பசும்பால் முதலிய பரிசுத்த வஸ்துக்களாலும்...சுத்தமாக செய்யப்பட்டது. தேகவரட்சியைப் போக்கி மூளையைக் குளிரச்செய்து புத்தி கூர்மை...யும் ஆரோக்கியத்தையும் உண்டாக்கும். கடந்த 25-வருடகாலமாய் இதை ஆயிரக்கணக்கானவர்கள்...க்கையாய் வாங்கி ஸ்நானம் செய்து தேகாரோக்கியத்தோடு வாழ்ந்து வருகிறார்கள்.

5-பலம் 1-க்கு விலை ரூ. 1-0-0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

...யண தீர்ப்பச்சை லேகியம்:—மலச்சிக்கலே எல்லா வியாதிகளுக்கும் காரணம். இதனால் நமதுநாட்...கோடிக்கணக்கானவர்கள் அவஸ்தைப்பட்டு அதைச் சரியாய் கவனிக்காமையினால் அநேகவித நோய்...க்கு ஆளாவதை நாம் நேரில் பார்த்திருக்கிறோம். அதற்கு இது திவ்வியமான மருந்து. சாப்பிடுவதற்கு...ருசியாய் இருக்கும். இரவில் படுத்துக்கொள்ளும்போது ஒரு கெச்சக்காய் பிரமாணம் சாப்பிட்டு படுத்...கொண்டால் காலையில் மலம் தாராளமாய்ப் போய்விடும். யாதொரு கெடுதலுமில்லை, தேகம் ஆரோக்...யமாய் இருக்கும். டப்பி 1-க்கு விலை ரூ. 1-0-0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

ஒரு ரூபாய்க்குக் குறைந்த தொகைக்கு V. P. அனுப்பமுடியாது.

## ஸ்ரீ நாராயண மெடிகல் ஹால், காஞ்சீபுரம்.

# "ராமுலு" புதிய ஸங்கீத புத்தகங்கள்

சென்ற மூன்று தசாப்தங்களாய் பற்பல ஸங்கீத புத்தகங்களை திராவிட பாஷையிலும், தெலுங்கு பாஷையிலும், எழுதிப் பிரசுரஞ்செய்து ஸங்கீத உலகத்திற்குப் பேருதவி புரிந்த

ஸங்கீத ஸாஹித்ய பரத சாஸ்திர வித்வான்

பிரம்மஸ்ரீ கே. வி. ஸ்ரீனிவாஸ ஐயங்கார் அவர்களால்,

அனேக சீர்திருத்தங்களுடன் புதியதாய் தயாரிக்கப்பட்ட அரிய புத்தகங்கள்.

## சங்கீத சிந்தாமணி

விலை ரூபா 3—0—0

இதில் மகான்களாகிய ஜயதேவர், புரந்தரவிட்டலர், தியாகராஜ ஸ்வாமிகள் முதலிய பற்பல வித்வான்களால் இயற்றப்பட்டு பிரசித்தி பெற்றிருக்கிற தெலுங்கு, ஸம்ஸ்க்ருதம், கன்னடம் முதலிய பாஷைகளிலுள்ள கீர்த்தனைகளும் இராக மாலிகைகளும், பற்பல அரிய இராகங்களை வாசிப்பதற்காய அநேக குறிப்புகளும் மற்றும் ஸ்வரதாளங்களுடன் அடங்கி இருக்கின்றன. எல்லாம் புதிய விஷயங்கள்.

## திராவிட கானம்

விலை ரூபா 3—0—0

இப்படிப்பட்ட புத்தகம் இதுவரையிலும் வெளிவந்ததேயில்லை. இதிலடங்கி யிருக்கிற எல்லாப்பாட்டுகளும் தமிழே. தமிழ் நாட்டின்கண் பிரசித்தி பெற்ற அனேக வித்வான்களுடைய கீர்த்தனங்களும் மற்றும் ஸ்வரதாளங்களுடன், இது லகப்படுமென்றால், இப்புத்தகத்தைப்பற்றி வேறென்ன சொல்வது. இப்புத்தகத்தைப் பார்த்தவர்கள் தமிழ் நாட்டில் இவ்வளவு அரிய பாட்டுகள் இருந்தனவோ என்று ஆச்சரியப்படா திருக்க முடியாது.

## ஸங்கீத சி[illegible]

கோ[illegible]

விலை ரூபா [illegible]

இதில் பல[illegible] கள், சிந்துகள, [illegible] கள், சித்தர் பாட்டுகள், [illegible] திப்பா[illegible] ட்டுகள், கலி[illegible] கள், கிளிப்பாட்டு, புருப[illegible]ட்டு, முத்து வீராயிப்பாட்டு, வண்[illegible]ப்பாட்டு, ஓடப்பாட்டு, முதலிய பற்பல சில்லரைப் பாட்டுகள் ஸ்வரதாளங்களுடன் அடங்கி இருக்கின்றன. இதைப்போலொரு புத்தகம் இதுவரை வெளிவந்ததே யில்லை.

இவ்வரிய புத்தகங்கள் இதுவரையிலும் ஸங்கீத உலகத்திற்குத் தெரிவாய்க்கிடைக்காத அனேக விஷயங்களையும் அரிய பெரிய பாட்டுக்களையும் வழங்க வல்லதென்றால் இப்புத்தகங்கள் ஸங்கீதாபிமானிகட்கும் ஸங்கீத உபாத்தியாயர்கட்கும் வித்யார்த்திகட்கும் ஒரு பெரிய நிதியாகுமென்பதை நாங்கள் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

இப்புத்தகங்கட்கு இடப்பட்டிருக்கிற விலை இவற்றுள் ஒரு பக்கத்திலடங்கி இருக்கிற விஷயத்திற்குப் பிரதிபலன் ஆகமாட்டாதென்றால் வேறென் சொல்வது.

இப்புத்தகங்களின் உள்ளடங்கிய விஷயங்களும் கீர்த்தனங்களும் மற்றும் இதுவரையிலும் வெளியிடப்பட்டிருக்கிற எந்த புத்தகத்திலும் இவ்வளவு உபயோகமாகிய முறையில் வெளிவந்ததில்லை என்பதை முக்காலும் ஊன்றிச் செல்ல வல்லோம்.

இப்புத்தகங்கள் ஒவ்வொன்றும் நல்ல கிளேஸ் கடிதத்தில் சுத்தமாய் அச்சிட்டு அழகான காலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

குறிப்பு:—மேற்குறித்த மூன்று புத்தகங்களில் அடங்கி இருக்கும் கீர்த்தனைகளின் அட்டவணை, விலாசம் தெரியப்படுத்தினால் இனமாய் அனுப்பப்படும்.

**எம். எஸ். ராமுலு கம்பெனி,**

ஸங்கீத புத்தக பிரசுரகர்கள், இராயபுரம், மதராஸ்.

கவனியுங்கள்:—எங்களிடத்தில் சகலவிதமான தமி[illegible]ழ் நாவல்கள், வேதாந்த சித்தாந்த நூல்கள், வைத்திய சோதிட பள்ளிக்கூட புத்தகங்[illegible] முதலியவை எப்பொழுதும் தயாராயிருக்கும். முழுவிவரமடங்கிய 64 பக்கங்களுள்ள விலை ஜாபிதா இனம்.

பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளி நாட்டில் வசிக்கும் நண்பர்கள் ஆர்டர் செய்யும் பொழுது புத்தகத்தின் கிரயத்தையும் தபால் செலவையும் சேர்த்து (British postal order) ஆவது கரன்சி நோட்டுகளை ரிஜிஸ்டர் செய்தாவது அனுப்பவேண்டும். முன்பணம் இல்லாத ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டா.

129814